இலவச வெளியீடு: GERMANY , ENGLAND

புரட்டாதி Sept. 2016

Free Circulation

# வெற்றிமணி

# Vettimaniy

மணி 66

பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன் B.F.A

Orientalische Textilien & Schmuck

மாபெரும்

தொடர் மலிவு விற்பனை!

தரமான தங்க நகைகளுக்கு
உத்தரவாதமிக்க நகைமாளிகை

Königswall 16 (Am HBF) 44137 Dortmund
Tel: 0231/162377 Fax: 49.0231/147836



## விடை தெரிந்தால் நீங்களும் விஞ்ஞானி!



## தமிழ்ப் பெண் விமானி அர்ச்சனா





## திரை உலகம்

## சிவாஜி பாதி, நாகேஷ் பாதி
கலந்து செய்த கலவை நான் கமல்ஹாஸன்



## யேர்மனியில் தேர்க் காலம்

T.T.S.Brothers GmbH&Co.KG
RHEINISCHE STR 52
44137 DORTMUND
Tel:0231 819288
விபரம் பக்கம் 09

கனீன் எலக்ரோனிக்ஸ்
சகல Alarmanlage, Überwachung Kamera,பொருத்துதல்..
Schevenhofer Weg 24,- 42111 Wuppertal
Tel: 0205 3423 740 விபரம் பக்கம் 24

டோட்முண்ட் நகரில் எட்டாவது ஆண்டில் எமது சேவை!
Gopara Gnanam Textiles & Jewellery Shop
விபரம் one day sale Vetti+1ம் பக்கம்
Tel: 0231/5450028- Mob: 01713306542
Rheinische Str.81-- 44137 Dortmund



என்றும் புதியது அழகின் இரகசியம் அது.

S.K.Silks & Gold Paraadise

தரம்! அதிக தேர்வு!! அனைத்தும், தங்களை அசத்தும்!!!

புத்தம், புதிய, வரவுகளான எம்பிறோய்ட் சேலைகள் (Embroidery Sary)
மற்றும் திருமணப் பட்டுப்புடவைகள், அனைத்திற்கும் நாடுங்கள்.

Mr.P.Sritharan.
Proprietor

Tel:0231 9501 647
Adler str 33 - 44137 Dortmund



மக்களின் மனங்கவர்ந்த ஸ்தாபனம்
அபிராமி என்ரப்பிறைஸ்
இலங்கை, இந்திய உப உணவுப் பொருட்கள், மற்றும் கடல் உணவு வகைகள் அனைத்தும் தரமாகவும் மலிவாகவும் பெற்றுக் கொள்ளலாம்.
விடியோ, மணவறை!!! நம்மை நாடுங்கள்...
VALUTRANS MONEY TRANSFER
Ria MONEY TRANSFER
இதோ!!! துரித பண மாற்றுச் சேவை!
Tel.: 0201/236925
APIRAAMI ENTERPRISE
Pferdemarkt 9
45127 ESSEN



வெற்றிமணி
முக்கிய அறிவித்தல்
வெற்றிமணி அபிமானிகளே அன்பான வேண்டுகோள்.
நிகழ்வின் நிழல்கள் என்னும் பகுதி.
நமது மக்களின் கலை, கல்வி, பண்பாட்டு நிகழ்வுகளின் பதிவுகளாக நீண்டகாலமாக வரும் ஒரு பகுதி.
இப்பகுதியில் இடம் பெறும் புகைப்படங்கள் தெளிவானதாக இருக்க வேண்டும்.
தெளிவில்லாத எந்தப்படமும், முக்கிய நிகழ்வாக இருப்பினும் பிரசுரிக்கப்பட மாட்டாது.
முக்கியமாக கைத்தொலைபேசியில் எடுக்கும் படங்கள் தவிர்க்கப்படவேண்டும்.
2 படங்கள் மட்டுமே அனுப்பலாம்.
தெரிவு செய்யும் பொறுப்பு வெற்றிமணி நிர்வாகத்தைச் சார்ந்தது.
மின் அஞ்சலில் மட்டுமே ஒவ்வொரு மாதமும் 14 ம் திகதிக்கு முன் அனுப்பிவைக்க வேண்டும்.
e-mail: vettimaniy@hotmail.com

# நம்ம ஊர்க் கறையான்

மாதவி



கறையான் என்றதும் அம்மா வேலியில் கறையன் பிடித்துக்கிடக்கு என்று தடியால் தட்டுவதுதான் ஞாபகமாக இருக்கு. ஓலை எல்லாம் திண்டு காலி செய்வதை தடுக்க காலங் காலத்தாலை வேலியைத் தடியால் தட்டி கறையான் கூட்டைக்கலைப்பா.

அடுத்து மனித நடமாற்றம் குறைந்த பகுதிகளில் கறையான் புற்றுக்களை கட்டி இருக்கும். அந்தப்புற்றில் ஒரு லட்சம் கறைாயான்களுக்கு மேல் குடி இருக்கும். இந்தப்புற்றில் கருநாகமும் குடி இருக்கும். கறையான் புற்றெடுக்க கருநாகம் குடிபுகுந்தது. இது நாம் கட்டிய வீடுகளில் யாரோ குடிபுகுந்து இருப்பதை நினைவு படுத்துகிறது. கட்டிடக்கலையை கறையானுக்கு கற்றுக்கொடுத்த பல்கலைகழகம் எது.

**புற்றின் காற்றோட்டம்**

புற்றின் நடுவில், ஒரு உள்ளீடற்ற குழாய் புற்றின் உச்சி வரை நீண்டிருக்கும். புற்றின் மண்சுவரில், மேற் பரப்பி லிருந்து 2 செ.மீ.க்குள், நம் உடலின் இரத்த நாளங் களைப் போன்று, எண்ணற்ற அடிப்பரப்புக் குழாய்கள் இருக்கும். இவை இரண்டையும் இணைக்கும் பக்கவாட்டு இணைப்புக்குழாய் இருக்கும்.
திறந்த நிலையிலிருக்கும் புற்றில், அடிப்பரப்புக் குழாய்கள், ஏற்கனவே புற்றிலிருக்கும் திறந்தத் துளை களில் முடியும். மூடிய நிலையிலிருக்கும் புற்றில், அடிப் பரப்புக் குழாய்கள், நுண்துளைகளில் முடியும்.

இவ்விதங்களில் அடிப்பரப்புக் குழாய்கள், உரிய துளைகள் மூலம், பூமியின் தட்பவெப்பநிலையுடன் தொ டர்பு கொள்கிறது.

**காற்றுப்பரிமாற்றம்**

கறையான்களின் வளர்சிதை மாற்றங்களால் உருவாகும் வெப்பம் மற்றும் நீராவி ஆகியன, ஒருவித மிதவை உந்து விசைகளை உள்ளிழுக்கும். எனவே புற்றின் உள்ளிருக் கும் காற்று, உள்ளீடற்ற குழாய் மூலம் மேலே வருகிறது.

அப்போது புற்றின் உள்காற்றிலிருக்கும் ஆக்சிசன், கரியமில வாயு, வெப்பம், நீராவி ஆகியன, அடிப்பரப்புக் குழாய் வழியாக, புற்றின் வெளிக்காற்றுடன், வேதியியல் பரிமாற்றம் செய்துகொள்ளும். எனவே புத்தம் புதிய காற்று, மீண்டும் புற்றுக்குள், உள்ளீடற்ற குழாய் மற்றும் அடிப்பரப்புக் குழாய்கள் வழியாக உள்ளிழுக்கப்படும். இங்ஙனம் வெளிக்காற்று, புற்றினுள் சென்று, புற்றின் உட்புறத்திற்குச் சென்றடைந்து, புற்றின் உட்புற வெப்பத்தைத் தணித்து குளுமையாக மாற்றும்.



இக்குளுமை எப்பொழுதும் நிலவுவதால், புற்றினுள் வளர்சிதை மாற்றங்கள் சிறப்பாக அமைய உதவுகிறது. அதே சமயத்தில், பாம்பு போன்ற பிற உயிரிகளுக்கு அழைப்பிதழாகவும் அமைந்து, கறையான்களுக்கு வாழ்விட இன்னல்களை ஏற்படுத்துகிறது.

இந்தக்கறையான் இன்று நேற்று வந்த இனம் அல்ல. கறையான்கள் ஏறத்தாழ 20 கோடி ஆண்டுகளுக்கு முன்னரும், இப்பூமியில் வாழ்ந்து வந்தன. இதற்கான ஆதாரங்களை, அதற்குரிய தொல்லுயிர் எச்சம் உறுதி செய்கின்றன். கறையான்களில் பத்து சதவிகிதமே, நமக்கு பொருளாதார சீர்கேட்டை உருவாக்கும். மற்றவை, தேவையில்லாதவைகளை உண்டே வாழ்கின்றன.

அந்தப் பத்துவீதம் படுத்தும் பாடே பெரும்பாடு எனச் சொல்லத்தோன்றும். பொதுவாக இலங்கையில் மரப் பயன்பாடு அதிகம். கறையான் மரத்தை இலகுவில் அரித்து அழிக்கும். கிடுகு வேலி,மரத்தூண்கள்,மரவீடுகள், யாவும் இந்தக்கறையானுக்கு பலியாவன.
இவை மட்டுமல்ல.... தொடர்ச்சி 06 ம் பக்கம்

நீங்கள் புதிய மனை அமைக்கவோ, கடன் பெறவோ, எதுவானாலும் உடனடி உதவி எங்களிடம் உண்டு
50.000 - 122.000 யூரோ அரசாங்கம் வழங்கும் குறைந்த வட்டிப் (0,5%) பணத்தைப் பெற்றிடவும், மற்றும் வீடு கட்டுவதற்கோ அல்லது வாங்குவதற்கோ தேவையான சகல வங்கிரீதியான, சட்டரீதியான (Notar) உதவிகளையும் மிகக் குறுகிய காலத்தில் செய்து தருகின்றோம்!
வீட்டுக்கடன் 1,2% வட்டிவீதத்திலிருந்து
தொடர்புகளுக்கு:
gothab Finance
Rheinische Str. 72, 44137 Dortmund
0231/53375365
0231/10876361
0152/53961138
Th. Gobinath




Hamm நகரில்....
YOGAN
IMPORT&EXPORT
அழகிய பட்டுச் சேலைகள் Party சாறிகள் மற்றும் மங்கையர் மனங்கவரும் பஞ்சாபிகள் அனைத்திற்கும் நாடுங்கள்
உங்கள் இலத்திற்கு வேண்டிய சமையல் உபகரணங்கள் அனைத்தும் மலிவாகக் கிடைக்கும்.
Hamm Hbf,ல் இருந்து 800 மீற்றர் அருகில்.
Hugo-Küching-Str .6 - 59067 Hamm 02381 / 9735620 - 0163 23 17 927

## வெற்றிமணி

**தமிழ் எங்கள் உயிருக்கு மேல்**
—கவிஞர்.வி.க

**ஓசை 240**



**ஆரம்பம்:**1950

ஸ்தாபகர்
அமரர் **மு.க.சுப்பிரமணியம்**
(முன்னாள் அதிபர்:
குரும்பசிட்டி பொன்.பரமானந்தர்
வித்தியாலயம்)

**பிரதம ஆசிரியர்**
"ஓவியக்கலைவேள்"
**கலாநிதி**
**மு.க.சு.சிவகுமாரன்** B.F.A.
*Chief Editor:*
**Dr.M.K.S.Sivakumaran B.F.A.**



**Brinker Höhe.13**
**58507 Lüdenscheid**
**Germany**
**Tel: 02351/45 88 62**
**0163 199 2 333**

e-mail: vettimaniy@hotmail.com
Company No: 8876276


**"வெற்றிமணிமொழி"**
தோல்வியைக் கண்டு
அஞ்சுபவர்களிடமிருந்து
வெற்றி தானாகவே
விலகிச்செல்கிறது


பத்திரிகை வடிவம்
**சிவகுமாரன் சஞ்ஜீவன்.**B .Eng (Hons)
**Vettimaniy Ltd**
**Sanje:07824 61 83 83**
**vai g (U.K) 00 44 7788 195962**











# தமிழ் பெண் விமானி அர்ச்சனா

டென்மார்க்கில் வாழ்ந்துவரும் அர்ச்சனா செல்லத்துரை அந்த நாட்டின் முதலாவது தமிழ் பெண் விமானியாக கற்று முடித்திருக்கிறார்.

பிரான்சில் தயாரிக்கப்பட்ட 74 பேரை ஏற்றிச் செல்லும் ஏ.ரி.ஆர் 72 - 500 இலக்க முடைய விமானத்தை ஆறு தடவைகள் ஆகாயத்தில் ஏற்றி, அது போல கச்சிதமாக இறக்கி விமான ஓட்டிக்கான சிறப்பு பரீட்சையிலும் சித்தி யடைந்திருக்கிறார்.

ஆஸ்திரியா சென்று இதற்கான விசேட கல்வியை பெற்று டென்மார்க் திரும்பியிருக்கிறார்.
வர்த்த விமான சேவையில் தமிழ் பெண்கள் பைலட்டுக்களாக வருவதற்கான வாய்ப்புக்களை நோக்கி நமது கனவுகள் விரிவடைய வேண்டும், அடுத்து போயிங், எயாபஸ் விமானங்களை நோக்கி நடந்து கொண்டிருக் கிறேன் என்றும் கூறினார்.
டென்மார்க்கில் ஆசிரியர் பயிற்சி முடித்து டேனிஸ் மொழி ஆசிரியையாக இருந்த இவர் தமிழ் பெண்கள் புதிய கோணத்தில் சிந்திக்க வேண்டும் என்று கருதுகிறார்.

விமானியாக படிப்பதற்காக அமெரிக்கா சென்று மியாமியில் டீன் இன்ரநாஷனல் விமானிகள் கற்பித்தல் கல்லூரியில் படித்து, சித்தியடைந்தார்.
இறுதிப்பரீட்சையின் போது விமானத்தை அமெரிக்காவின் மியாமி பகுதியில் தனி ஒருவராக ஆறு மணி நேரம் பறந்து சென்று மூன்று விமான நிலையங்களில் விமானத்தை இறக்கி ஏற்றி சிறப்பு சித்தி பெற்றிருந்தார்.

அமெரிக்காவில் பெற்ற ஏப்.ஏ.ஏ லைசென்சை ஐரோப் பாவில் பாவிக்க வேண்டுமானால் அதை ஐரோப்பா விற்கான ஈ.ஏ.எஸ்.ஏ ஆக மாற்ற வேண்டும் இதற்காக டென்மார்க்கில் லேண் ரு பிளைட் என்ற விமானக் கல்லூரியில் படித்து 14 பரீட்சைகள் எடுத்து, பின்னர் சுவீடனில் உள்ள டைமன்ட் பிளைட் அக்கடமியில் தனியான பறப்புக்களை பறந்து ஐரோப்பிய சட்டங்களுக்க அமைவாக தனது லைசென்சை மாற்றிக்கொண்டார்.

பின்னர் சன் எயார் நிறுவனத்தில் பணிக்கு சேர்ந்து, டென்மார்க் ஓகூஸ் நகரத்தில் உள்ள கிறைபேர்ட் விமான நிறுவனத்துடன் இணைந்து ஆஸ்திரியா சென்று விமானப்பறப்புக்கான ரைப்ரைட்டிங் எனப்படும் கற்கையை விசேடமாகக் கற்று சென்ற வாரம் அல்சி எக்ஸ்பிரஸ் விமானத்தை கச்சிதமாக ஓட்டி சித்தியடைந்தார்.

இந்த விமானத்திலேயே சமீபத்தில் பிரான்சில் நடந்த ஐரோப்பிய உதைபந்தாட்டத்திற்காக ஜேர்மன் நாட்டு அணி ஏற்றிச் செல்லப்பட்டது குறிப்பிடத்தக்கது.

தமிழ் பெண்கள் தமது சிந்தனைகளை புதிய இலக்குகளை நோக்கி குறிவைக்க வேண்டும் என்று கூறும் அர்ச்சனா சிறந்த திரைப்பட பின்னணி பாடகியாகவும் சென்ற வாரம் தேர்வாகியிருக்கிறார்.
சென்ற மாதம் சுவிற்சலாந்தில் இடம் பெற்ற சாதனைத் தமிழா 2016 நிகழ்வில் உயிர்வரை இனித்தாய் திரைப படத்தில் பாடியமைக்காக சிறந்த திரைப்பட பின்னணி பாடகியாகவும் தேர்வாகியிருக்கிறார்.

சங்கீதத்தையும், வயலின், புல்லாங்குழல் போன்ற வாத்தியங்களையும் முறைப்படி கற்ற அர்ச்சனா, பரத நாட்டியத்தையும் முறைப்படி கற்று அரங்கேற்றம் செய்திருக்கிறார்.

பரதநாட்டியம் கலாக்கேந்திரா ஆடல் கலையகத்தில் நடன ஆசிரியை சுமித்திரா சுகேந்திராவிடமும், சங்கீ தத்தை சாகித்திய சுருதிலயா ஆசிரியை குமுதினி பிரித்திவிராஜனிடமும் பயின்றார்.

**தொடர்ச்சி 23ம் பக்கம்**







# விடை தெரிந்தால் நீங்களும் விஞ்ஞானி.

சுற்றும் உலகில் சுழலும் மனிதன், சூழ்ச்சி, சுமை, சுதந்திரமின்மை, ஆத்திரம், ஆணவம், அதிகாரம், மதம், மொழி, இனவெறி என்று தனக்குள்ளும் ஒரு வட்டம் கொண்டு வாழ்கின்றான். தனக்குள் தன்னைப் போட்டு சமுதாயத்துள் புதைந்துள்ள மனிதன், நின்று நிமிர்ந்து பார்த்து, பிறந்ததன் முதல் இன்றுவரை ஏன் பிறந்தோம் என்ன செய்தோம் என்று கேடடால், கேட்கப்படும் ஏவல் கேள்விகள் முதல் ஆவல் கேள்விகள் வரை அனைத்திற்கும் பதில் தெரியாத சூனிய நிலையில் இருப்பது தெரியவரும்.



பூமியில் நிற்கின்றோம் என்று அனைவரும் அறிவோம், எவ்வாறு நிக்கின்றோம் என்று கேட்டால், சற்றும் யோசிக்காமல், எவரோ நியூட்டன் என்ற விஞ்ஞானி சொல்லிவிட்டார் ஈர்ப்புவிசை என்று அதை நாமும் 7 ஆம் வகுப்பில் படித்துவிட்டோம் என்பதால் ஒப்பித்து வருகின்றோம். ஈர்ப்பு விசை தானா? அழுத்த விசையும் உண்டா? என்று ஒருவேளை யோசித்துள்ளோமா? ஈர்ப்பு விசை மட்டும் இருந்தால் மண்ணோடு ஒட்டுப்பட்டு விடுவோம் அல்லவா? சாதாரணமாக நடப்பது சாத்தியமே இல்லாமப் போய்விடும் என்று சிந்தித்ததே இல்லை. மனிதனும் மற்றைய இயக்கமும் மண்ணுலகில் நடைபெற மனிதனுக்கு உதவுவது புவியின் ஈர்ப்பு மட்டும் அல்ல, வளிமண்டல அழுத்தமுமே ஆகும். அதனால்த்தான் மலையின் உச்சியிலும் கடலின் அடியிலும் மனிதனால் நடக்கக் கடினமாக உள்ளது.






வளிமண்டல அழுத்தம் மனிதனைச் சூழ்ந்திருக்க சூரியனே முதற் காரணம் ஆகின்றது. சூரியக் கதிர்கள் பூமிக்கு வந்து திரவத்தை சூடாக்கி வாயுவாய் மாற்ற, சுயமாக இயங்கும் வாயுத் துணிக்கைகள் அடர்த்தியின் அடிப்படையில் நிலமட்டத்தில் இருந்து மேல் செல்ல, நிலமட்டத்தில் ஏற்படும் காற்று வெற்றிடத்தை நிரப்ப இயங்கும் வளித் துணிக்கைகள் விரைந்து வருகின்றன. இவ்வாறு வளிமண்டல அழுத்தம் நிகழ்கின்றது.

இவை எல்லாம் ஒரு கால கட்டத்தில் விடை தெரியா விசித்திரங்களாக இருந்தன. சேற்று நிலப்பகுதியில் மாலை நேரங்களில் ஓடினால் விரட்டும் நெருப்பை காட்டேறி என்றனர். அதன் உண்மையான விஞ்ஞான விளக்கம் வெற்றிடத்தை நோக்கி நகரும் வாயுத் துணிக்கைகள் என்பதாகும். இதே நுட்பத்தைப் பயன் படுத்தியே தேனீக்களும் பயணிக்கின்றன. ஒரு தேன் கூட்டை நோக்கி கல் எறிந்தால், கல் வந்த திசையில் இருக்கும் வளிமண்டல வெற்றிடத்தை கவனித்து அதன் திசையில் பயணிக்கும் தேனீக்கள் கல் எறிந்தவரைத் தாக்குகின்றன.

கற்றறிந்தும் பட்டறிந்தும் பலவற்றை கண்டு பிடித்த விஞ்ஞானிகளால் தீர்க்க முடியாத கேள்விகளும் பலவுண்டு. உலகில் மனிதனும் மற்றயவைகளும் ஊசலாட உதவுவது புவியீர்ப்பு. அப்படியெனில் உலகம் எப்படி ஊசலாடுகின்றது என்ற கேள்வி எழுகின்றது. அதற்கும் விடை கொடுக்கச் சென்றால், சூரியனை மையமாய்க் கொண்டு சூரியனின் காந்தப் புலத்தில் பூமி உட்பட பூமி, நிலவு, புதன், வியாழன், வெள்ளி என்று அத்தனை கோள்களும் இயங்குகின்றன என்று பூமியில் இருந்து 10 பில்லியன் கிலோ மீற்றரில் உலாவும் வொயாகர் 1 என்ற விண்வெளி ஓடம் நிரூபிக்கும். அடுத்த நிலை வினாவிற்குச் சென்றால், சூரியன் எவ்வாறு இயங்குகின்றது?






சுழற்சியா?
சுற்றுகையா?
யாரைச் சுற்றுகின்றது?
சூரிய மையத்தில் சுற்றும் ஏரிஸ், சேட்ன என்பவை எவ்வாறு இயங்கு கின்றன?
சூரியக் காந்தப் புலத்தில் இருக்கும் கொமெட்ஸ் என்றால் என்ன?
சூரியக் காந்தப் புலத்தின் வடிவம் என்ன சொல்கின்றது?
சூரிய நட்சத்திரம் போல் எத்தனை உண்டு?
கலக்சி என்றால் என்ன? எத்தனை உண்டு?

அதைத் தாண்டி பால் வீதிகள் என்று பூமியில் இருந்து 10 பில்லியன் ஒளியாண்டுகள் தூரம் வெளியே சென்று பார்த்தால் இருக்கும் பொருட்கள் எல்லாம் எவை?
இத்தனை கேள்விகளுக்கும் விடை தெரியாத சாதாரண மனிதன், நித்தமும் நித்திரை கொண்டு எழுந்து சமுதாயத்தில் வீண் சச்சரவு செய்து வருகின்றான். இவற்றை இன்றுவரை விழிகளை மூடி, கற்பனைக் கண்ணைத் திறந்து கற்றுக் கொண்டிருக்கின்றனர் விஞ்ஞானிகள். இந்தக் கேள்விகளுக்கு விடை தெரிந்தால் மட்டும் அல்ல தெரிந்து கொள்ள வேண்டும் என்று ஆராய்ந்தாலே நீங்களும் விஞ்ஞானிகள்தான்.

தொடர்ச்சி 6ம் பக்கம்





# சினிமாவிற்கு வருவதற்கு முன் என்னதான் செய்தார்கள்...

நடிக்க வரும் முன்பு நயன், மம்மூட்டி, மோகன்லால் என்ன வேலை பார்த்தார்கள் தெரியுமா?

சென்னை: படங்களில் நடிக்க வரும் முன்பு நயன்தாரா, மோகன்லால், மம்மூட்டி ஆகியோர் என்ன வேலை பார்த்துக் கொண்டிருந்தனர் என்று தெரியுமா? மலையாள திரையுலகின் இரண்டு பெரிய ஜாம்பவான்கள் மோகன்லாலும், மம்மூட்டியும். பேரன், பேத்தி எடுக்கும் வயதில் இருந்தாலும் இன்றும் ஹீரோவாக வலம் வருகிறார்கள். ரசிகர்களும் அவர்களை கொண்டாடுகிறார்கள். இந்நிலையில் மோகன்லால, மம்மூட்டி நடிக்க வரும் முன்பு என்ன வேலை செய்தனர் என்று தெரிய வேண்டுமா?

மோகன்லால் மோகன்லால் திருவனந்தபுரத்தில் உள்ள மகாத்மா காந்தி கல்லூரியில் பி. காம். படித்துவிட்டு குஸ்தி வீரராக இருந்தார். 1977-78ம் ஆண்டு அவர் கேரள மாநில குஸ்தி சாம்பியன் என்பது குறிப்பிடத்தக்கது.

மம்மூட்டி முகமது குட்டியாக பிறந்த மம்மூட்டி எர்ணாகுளத்தில் உள்ள அரசு சட்டக் கல்லூரியில் எல்.எல்.பி. படித்துவிட்டு இரண்டு ஆண்டுகள் வழக்கறிஞராக இருந்தார். அதன் பிறகே சினிமா படங்களில் நடிக்க வந்துவிட்டார்.

ஜெயராம் ஜெயராம் கலாடியில் உள்ள ஸ்ரீ சங்கரா கல்லூரியில் பி.ஏ. பொருளாதாரம் படித்தவர். மெடிக்கல் ரெப்பாக இருந்தவர் பின்னர் மிமிக்ரி கலைஞர் ஆனார். மிமிக்ரி மூலம் அவர் மலையாள திரையுலகில் நுழைந்தார்



நயன்தாரா டயானா மரியம் குரியனாக பிறந்த நயன்தாரா திருவல்லாவில் உள்ள மார்தோமா கல்லூரியில் பி.ஏ. ஆங்கில இலக்கியம் படித்தவர். நடிக்க வரும் முன்பு கல்லூரியில் படித்துக் கொண்டே பகுதி நேரமாக மாடலிங் செய்தார்.




முற்பதிவுக்கு முந்துங்கள்
Bochum
Lucky Fly Reisebüro
என்றும் மலிவான விலையில்
தரமான சேவையை வழுங்குவது
Lucky Fly Reisebüro
Tel: 0234-2399032
Fax 0234-79457171
Allee Str.38-40a
44793 Bochum
www.Lucky-fly.de
Email: info@lucky-fly.de
இந்தியா
செல்வதற்கான
1 மாத, 2. மாத, 3. மாத
விசாக்கள்
பெற்றுத்தரப்படும்
Graphic Design Vettimaniy Ltd
e.mail:siva 0108 @hotmail.com
Allee Str.38-40a
44793 Bochum
Tel: 0234-2399032
FaX 0234-79457171
துரித பணமாற்றுச்
சேவை!!!
MoneyGram.
WESTERN UNION WU
moving money for better

# பாரம்பரிய விளையாட்டுக்கள்.



மண்சோறு கறி காய்ச்சுதல்

சிறுவர்கள் இருபாலாரும் கூடி மண்சோறு கறி சமைத்து விளையாடும் வழக்கமும் இப்பிரதேசத்திலே வழங்கி வந்தது. மண்சோறு கறி சமைத்தல், மண்வீடு கட்டுதல் முதலிய விளையாட்டுக்களைப் பெரும்பாலும் பெண்பிள்ளைகளே விளையாடுவர். கலித்தொகையில் வரும் "சுடர்த்தொடீ கேளாய்" என்னும் பாடல் இந்த விளையாட்டு மிகப் பழங்காலத்தில் இருந்தே வழங்கி வந்தது என்பதை நிறுவும். பிற்காலப் பிள்ளைத்தமிழ்ப் பிரபந்தங்களிலே இடம்பெறும் சிற்றிற் பருவம், சிறுசோறட்டல் முதலானவையும் இந்த விளையாட்டின் தொன்மையை நினைவுபடுத்தும்.

சிறுவர் சிறுமியர் மண்சோறு சமைத்து விளையாடும் நிகழ்வொன்றை எம்.வீ. கிருஸ்ணாழ்வார் அற்புதமாகப் படம் பிடித்துக் காட்டியுள்ளார்.

"முற்றத்து மண்சோறாப் மூன்றுமாற் காயடுப்பாய்(ப்)
பற்றிய பா வட்டையிலை பாற்கறியாய் - பெற்றுவித்து(ச்)
சாப்பிடவா அப்பா சமைத்த உணவாறுதென்று
கூப்பிடுவ தாரையினிக் கூறு"

பேரப்பிள்ளைகள் புலம்புவதாக அமையும் மேற்படி கவிதை இப்பிரதேசத்திலே சிறுவர் சிறுமியர் மண்சோறு கறி சமைத்து விளையாடிய விளையாட்டினைச் சிறப்பாகப் பதிவுசெய்துள்ளது.

### இராசா மந்திரி

இப்பிரதேசத்திலே "இராசா மந்திரி" என்னும் விளையாட்டினையும் ஒரு காலத்திலே விளையாடினார்கள். ஒருவர் இராசாவாகவும்இ ஒருவர் மந்திரியாகவும், ஒருவர் சேவகனாகவும்இ ஒருவர் குடியானவராகவும், ஒருவர் கள்வனாகவும் இந்த விளையாட்டு அமையும். ஓரளவுக்கு நாடகப் பாங்காக இந்த விளையாட்டு அமைவது குறிப்பிடத்தக்கது. சிறுவர்கள் கூத்து உரையாடற் பாங்கிலே பேசி விளையாடுவார்கள். அந்த உரையாடல் பின்வருமாறு அமையும்

அரசன் யாரடா அங்கே!
குடியானவன் நான்தான் ஐயா ராசாவே.
அரசன் உன் வீட்டில் நடந்த சம்பவமென்ன?
குடியானவன் கள்ளன் வந்து களவெடுத்துப் போட்டான்.
அரசன் அமைச்சனைப் பார்த்து கள்ளனைக் கண்டு பிடி.

இவ்வாறுதான் இராசா மந்திரி விளையாட்டு அமையும். உரையாடலும் இவ்வாறே தொடரும். (நினைவில் உள்ளவற்றைக் குறிப்பிட்டுள்ளேன்). கள்வனை மந்திரி பிடித்து வந்ததும் அவனுக்குச் சவுக்கடி அல்லது மரணதண்டனையை இராசா வழங்குவார். அரசியல்இ சமூக மாற்றம் காரணமாக 19ஆம் நூற்றாண்டளவிலே இந்த விளையாட்டு "கள்ளன் பொலிஸ்" விளையாட்டாக மாறியிருக்கலாம் என ஊகிக்க முடிகின்றது.

### ஊஞ்சல் ஆடுதல்

சிறுவர் ஊஞ்சல் ஆடும் விளையாட்டும் இருந்தது. இந்த விளையாட்டு இப்பொழுதும் உண்டு. சிறுவர்கள் ஊஞ்சலாடும்போது பாடும் பாட்டு மட்டும் இப்போது இல்லாமற் போய்விட்டது. அந்தக் காலத்திலே சிறுவர்கள் ஊஞ்சலாடும் பொழுது பின்வரும் பாடலைப் பாடுவார்கள்

## யாழ்ப்பாணப் பண்பாடு
## மறந்தவையும் மறைந்தவையும்

பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா

"கச்சாயிற் புளியிலே ஊஞ்சாலும் கட்டி
கனகரா தோப்பிலே தோட்டமும் செய்து
வெட்டாத செவ்விளனி வெட்டி மடைபோட்டு
எரியாத கற்பூரம் எரித்து மடைபோட்டு..."

இவ்வாறு ஊஞ்சலாடும் பொழுது பாடும் பாடல் தொடர்ந்து செல்லும்.

அக்காலத்திலே சிறுவர்கள் வளையம் உருட்டி விளையாடுவது, பனைமட்டையில் தகரப் பேணியின் மூடியை ஆணியால் அறைந்து உருட்டி ஓடி விளையாடுவது முதலான விளையாட்டுக்களும் விளையாடப்பட்டன.




கெந்தியடித்தல், கிட்டியடித்தல், துரத்திப் பிடித்தல் முதலான விளையாட்டுக்களையும் சிறுவர்கள் விளையாடுவர். பிற்காலத்தில் மாபிள் அடித்தல் (இதனைப் "போளை" என்று சொல்லுவார்கள்) பெருவழக்கான விளையாட்டாக இருந்தது.

சிறுவர்கள் பட்டம் விட்டு விளையாடும் வழக்கம் நீண்டகாலமாகவே இருந்து வருகின்றது. சிறுவர்கள் மாத்திரமன்றிப் பெரியவர்களும் பட்டம் விட்டு விளையாடும் வழக்கம் இன்றும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.
ஈழத்துக் குழந்தைக் கவிஞர்கள் பலர் சிறுவர்கள் பட்டம் விட்டு விளையாடுதல் பற்றிப் பாடியுள்ளமையும் கவனிக்கத்தக்கது. மேற்குறிப்பிட்ட விளையாட்டுக்கள் பலவற்றை இன்றைய சிறுவர்கள் அறிந்திருக்க மாட்டார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

### இளைஞர்களுக்கான / வளர்ந்தோருக்கான விளையாட்டுகள்.

இளைஞர்கள் பெரும்பாலும் கிட்டியடித்தல், கிளித்தட்டு மறித்தல் (இதனை "யாடு" விளையாடுதல் என்றும் கூறுவர்), அம்பெறிதல், போர்த்தேங்காய் அடித்தல், வண்டிற் சவாரி, கோழிச்சண்டை (சேவற் சண்டை) முதலான விளையாட்டுக்களை விளையாடுவர்.
வயது வந்தவர்கள் நாயும் புலியும், தாயம், கடதாசி விளையாட்டு (cards) முதலான வற்றை விளையாடுவர். இவற்றுள் பெரும்பாலான விளையாட்டுக்களை இளைஞர்களும் வயது வந்தவர்களும் விளையாடுவதுண்டு. உதாரணமாக வண்டிற் சவாரி, கோழிச் சண்டை, கடதாசி விளையாட்டு முதலியவற்றைக் குறிப்பிடலாம்.



Nandy's Catering & Partyservice
உங்கள் இல்லத்தில் எந்த வைபவங்களாக இருந்தாலும்
குன்றாத சுவையுடன், சுடச் சுடப் பரிமாறுகின்றோம். இலங்கை இந்திய ஐரோப்பிய
உணவுகளையும் தயாரித்த வழங்குகின்றோம்.
**பரிமாறுதல் ஒரு கலை அது எமது நிறுவனத்தின் கைவந்தகலை!**
ஒரே குடையின் கீழ் எங்கள் சேவை!
Mobil 0173-7424955
Tel:0211 76 91 974
உணவு விநியோகம் பாரிமாறல் மற்றும் நிழல்படம், வீடியோ
அதுமட்டுமன்றி எமது திறமையான ஊழியர்கள் உங்கள்
விழாவை திட்டமிடுதல், திருமணமேடை, மண்டபம் மற்றும் மண்டபச் சோடனைகள்
மற்றும் நடைமுறைப்படுத்துதல் போன்றவைகளுக்கு
உதவ ஆயத்தமாக உள்ளோம்
NANDY'S CURRY'S & MORE WWW.NANDYS.DE
Düsseldorf
www.Nandys.de
e.mail:info@nandys.de

## கறையான்

2ம் பக்கத் தொடர்ச்சி

மாவீரன் நெப்போலியனின் போர்க்கப்பல்களுள் ஒன்று, கறையான்களால் அரிக்கப்பட்டு வீணானது என்பது வரலாறு. இந்தக்கறையான் எந்த அசுமாத்தமும் இன்றி மண்ணுக்கடியால் சென்று மரக்கட்டிடங் களைக் காலிசெய்வதும் உண்டு.

அவுஸ்திரேலியாவில் பிரமாண்டமான மரக்கட்டிடம் ஒன்றின் அடிப்பாகம் இக்கறையானால் காலிசெய்யப்பட்டு, கட்டிடமே கவிழ்ந்தபின்தான் காலி செய்த விபரம் தெரியவந்தது. இதன் தொல்லை தாங்க முடியாமல் தாயகத்தில் வேலிகள் எல்லாம் தகரவேலியாகவும், மதில்களாகவும் உருப்பெற்றன. இதனால் வேலியில் நின்ற பூவரசமரம், கிழுவங்கதியால் யாவும் காணாமல் போயின.
அண்மையில் தாயகம் சென்றபோது ஒரு நண்பர் பெருமையாக வீட்டைச் சுற்றிக்காட்டினார். முற்றத்துக்கு சாணம் தெளிக்கத்தேவை இல்லை, என்று கால்பதியும், இடம் எல்லாம் கல்லுப்பதிச்சிருக்கிறேன். கறையான் தொல்லை என்று மதில் கட்டி இருக்கிறேன். மசுக்குட்டி வருது என்று முருங்கை மரத்தை தறிச்சுப்போட்டேன். வாழைமரம் பப்பாசி இவை வளர்பதைவிட வாசலில் கொண்டுவந்து தருவார்கள்.

இதனால் அந்த தோட்டம் இருந்த இடத்தில்தான், இந்த வீடுபோதாது என்று பெருப்பித்திருக்கின்றேன்.

நானும் மனிசியும்தான். பிள்ளைகள் எல்லாம் வெளியில் என்றார்.

இதனால் ஒரு வீட்டுக்கு குளிர்சியைக்கொடுக்க ஏசியை நாடவேண்டிதாச்சு.

கறையான் இன்று மனிதவாழ்வை அங்கு மாற்றிவைத்துள்ளது.

வேலியில் உள்ள கிடுகை மட்டுமல்ல தென்னை மரத்தையே அரிக்கப்புறப்பட்டிருக்கும் கறையானை இங்கு காணலாம். படம்: வெற்றிமணி



4ம் பக்கத் தொடர்ச்சி

### விடை தெரிந்தால் நீங்களும் விஞ்ஞானி.



ஆறுவருடம் ஏழு வருடம் விஞ்ஞானப் படிப்பு படித்தவர்கள் எல்லோரும் அடிப்படை விஞ்ஞான அறிவற்ற எடிசன் கண்டு பிடித்த விஞ்ஞானப் பொறிகளை துப்பரவு செய்து வைக்கின்றனர்.

ஆகவே அறிவுக்கும் படிப்பிற்கும் சிறிதும் தொடர்பே இல்லை. ஓய்வாய் இருக்கும் நேரங்களில், விந்தையான வெளியுலகை உற்றுக் கவனித்தால் உங்களாலும் விஞ்ஞானி ஆகமுடியும் என்பதை மறக்க வேண்டாம்.

இன்றுவரை விடை காணமுடியாத விபரிக்க முடியாத கணிதச் சிக்கலுக்கான தீர்வுகளைக் கண்டு பிடித்த தமிழ் கணித மேதை இராமானுயர் படித்தது வெறும் அல்ஜீப்ரா அடிப்படைக்கு கணிதம் மட்டுமே.

பூமியில் இயங்கும் அத்தனை இயக்கத்திற்கும் ஒரு விதி உண்டு. விதிக்கப் பட்ட விதியில் இயங்கும் ஒவ்வொரு பொருட்களிலும் விதிவிலக்கும் உண்டு. உதாரணத்திற்குப் பார்த்தால், நீர்வீழ்ச்சி மேலிருந்து கீழே கொட்டும், இருப்பினும் விதிவிலக்காக கீழிருந்து மேலாக நீரோட்டம் உள்ள நீர்விழ்ச்சியும் உலகில் உண்டு. பொருட்களை மேலிருந்து கீழே போட்டால் கீழே விழும், விதி விலக்காய் மேல் நோக்கித் தள்ளும் தொப்பி தூக்கிப் பாறைகள் உள்ள இடங்களும் உலகில் உண்டு. இவை எல்லாம் பெரிய விந்தை அல்ல, சாதாரண விஞ்ஞான அறிவோடு சிந்தித்தால் புரிந்து கொள்ளக் கூடிய வளிமண்டல அமுக்கமே இவைகளாகும்.

இவற்றைப் போல் உங்களை சுற்றியுள்ள சாதாரண விடயங் களையும் உற்றுக் கவனியுங்கள்.

ஒவ்வொரு விடயத்திலும் கேள்வி எழுப்புங்கள்.
ஏன்? எப்படி? எங்கிருந்து? எதை நோக்கி?

எந்தத் தருணத்தில்? என்ற இந்தக் கேள்விகள் உங்களை விடை தேடத் தூண்டும். விடை கிடைக்கும் தருணத்தில் நீங்களும் விஞ்ஞானியே.

கேள்விக்குப் பதிலும்
தோல்விக்கு துணிவுமே
திடமான வெற்றிக்கு வழி.







# அவள் அப்படி ஒன்றும் அழகில்லை

### இலக்கிய நடைக்கு இறைவன் வைத்த முற்றுப்புள்ளி.

## கவிஞர் நா முத்துக்குமார் மறைந்தார்.





சென்னை: தமிழ் சினிமாவின் முன்னணி பாடலாசிரியர் நா முத்துக்குமார் இன்று (14.08.15) மாரடைப்பால் மரணமடைந்தார். அவருக்கு வயது 41. சிறந்த பாடலாசிரியருக்கான தேசிய விருதினை இரண்டு முறை வென்றவர் கவிஞர் முத்துக்குமார். காஞ்சிபுரம் மாவட்டம் கன்னிகாபுரத்தில் ஜூலை 12, 1975-ம் ஆண்டு பிறந்தவர் நா முத்துக்குமார். காஞ்சிபுரம் பச்சையப்பன் கல்லூரியில் கல்விப் படிப்பை முடித்தவர், ஆரம்ப நாட்களிலிருந்தே எழுவதில் நாட்டம் கொண்டார். பிரபல இயக்குநர் மறைந்த பாலு மகேந்திராவிடம் நான்கு ஆண்டுகள் உதவி இயக்குநராகப் பணியாற்றினார். டுலசஉைளைவ யே ஆரவாரமமரஅயச னறைநன இயக்குநரும் நாம் தமிழர் கட்சியின் தலைவருமான சீமான் மூலம் வீரநடை படத்தில் பாடலாசிரியராக அறிமுகமானார்.

அதன் பிறகு ஏராளமான படங்களுக்கு பாடல்கள் எழுதினார். தமிழ் சினிமாவின் முன்னணி பாடலாசிரியர்கள் அத்தனைப் பேருடனும் பணியாற்றியவர் நா முத்துக்குமார்.

இளையராஜா, ஏ ஆர் ரஹ்மான், யுவன் சங்கர் ராஜா, ஜிவி பிரகாஷ்குமார், ஹாரிஸ் ஜெயராஜ் என அத்தனைப் பேருடனும் மிகவும் நட்பாகவும் இணக்கமாகவும் இருந்தவர் நா முத்துக்குமார். குறிப்பாக யுவன் சங்கர் ராஜா, ஜிவி பிரகாஂக்கு மிக நெருக்கமான நண்பராகத் திகழ்ந்தார். யுவன் சங்கர் ராஜா இசையில் தங்க மீன்கள் படத்துக்காக இவர் எழுதிய "ஆனந்த யாழை மீட்டுகிறாய்...

" பாடலுக்கு முதல் தேசிய விருதினை வென்றார். அடுத்து ஜிவி பிரகாஷ் இசையில் சைவம் படத்தில் இடம்பெற்ற அழகே அழகே... பாடலுக்காக இரண்டாவது தேசிய விருதினை வென்றார்.

தொடர்ந்து பத்தாண்டுகள் தமிழ் சினிமாவின் முதன்மை பாடலாசிரியராகத் திகழ்ந்தார் நா முத்துக்குமார்.

சமீபத்தில் அமெரிக்காவுக்குச் சென்றவர், அங்கு ஹார்வர்டு பல்கலைக் கழகத்தில் அமையவிருக்கும் தமிழ் இருக்கைக்கான நிதி திரட்டல் நிகழ்ச்சியில் பங்கேற்று தன் பொறுப்பை நிறைவேற்றினார்.

மஞ்சள் காமாலை நோயால் பாதிக்கப்பட்டிருந்த முத்துக்குமார், இன்று (14.08.16) மாரடைப் பால் மரண மடைந்தார். நா முத்துக்குமாருக்கு மனைவியும் இரண்டு குழந்தைகளும் உள்ளனர். அவரது பாடல்கள் இன்றும் என்றும் கேட்கும்.

அவள் அப்படி ஒன்றும் அழகில்லை. இது எப்படி மறப்பது.

படம்: அங்காடி தெரு

அவள் அப்படி ஒன்றும் அழகில்லை
அவள் அப்படி ஒன்றும் அழகில்லை
அவளுக்கு யாரும் இணை இல்லை

அவள் அப்படி ஒன்றும் கலர் இல்லை
ஆனால் அது ஒரு குறை இல்லை

அவள் அப்படி ஒன்றும் அழகில்லை
அவளுக்கு யாரும் இணை இல்லை
அவள் அப்படி ஒன்றும் கலர் இல்லை
ஆனால் அது ஒரு குறை இல்லை

அவள் பெரிதாய் ஒன்றும் படிக்கவில்லை
அவளை படித்தேன் முடிக்கவில்லை
அவள் உடுத்தும் உடைகள் பிடிக்கவில்லை
இருந்தும் கவனிக்க மறக்கவில்லை

அவள் அப்படி ஒன்றும் அழகில்லை
அவளுக்கு யாரும் இணை இல்லை
அவள் அப்படி ஒன்றும் கலர் இல்லை
ஆனால் அது ஒரு குறை இல்லை

அவள் நாய் குட்டி எதுவும் வளர்க்கவில்லை
நான் காவல் இருந்தால் தடுக்கவில்லை
அவள் பொம்மைகள் அணைத்து உறங்கவில்லை
நான் பொம்மை போல பிறக்கவில்லை

அவள் கூந்தல் ஒன்றும் நீளம் இல்லை
அந்த காற்றில் துலைந்து மீளவில்லை
அவள் கை விரல் மோதிரம் தங்கமில்லை
கை பிடித்திடும் ஆசை தூங்கவில்லை

அவள் சொந்தம் இன்றி எதுவும் இல்லை
எனக்கு எதுவும் இல்லை

அவள் அப்படி ஒன்றும் அழகில்லை
அவளுக்கு யாரும் இணை இல்லை
அவள் அப்படி ஒன்றும் கலர் இல்லை
ஆனால் அது ஒரு குறை இல்லை

ஆஅஹ்....

அவள் பட்டு புடவை என்றும் அணிந்ததில்லை
அவள் சுடிதார் போல எதுவும் சிறந்ததில்லை
அவள் திட்டும் போதும் வலிக்கவில்லை
அந்த அக்கரை போலே வேறு இல்லை

அவள் வாசம் ரோஜா வாசம் இல்லை

அவள் இல்லாமல் சுவாசம் இல்லை
அவள் சொந்தம் பந்தம் எதுவும் இல்லை
அவள் சொந்தம் இன்றி எதுவும் இல்லை
அவள் சொந்தம் இன்றி எதுவும் இல்லை
எனக்கு எதுவும் இல்லை

அவள் அப்படி ஒன்றும் அழகில்லை
அவளுக்கு யாரும் இணை இல்லை
அவள் அப்படி ஒன்றும் கலர் இல்லை
ஆனால் அது ஒரு குறை இல்லை

அவள் பெரிதாய் ஒன்றும் படிக்கவில்லை
அவளை படித்தேன் முடிக்கவில்லை
அவள் உடுத்தும் உடைகள் பிடிக்கவில்லை
இருந்தும் கவனிக்க மறக்கவில்லை







நம்பிக்கையும் நாணயமும்
சலுகையும் ஒரே இடத்தில்
BCN·TRAVELS
Consulting Network
Offnungszeiten:
Mo-Sa 9:00-20:00 Uhr



VALUTRANS MONEY TRANSFER
Hermes PaketShop
எமது துரித பணமாற்றுச்சேவை
இலங்கை - இந்தியா
TEMPO MONEY TRANSFER
Ria MONEY TRANSFER





உலகின் முன்னணி விமான நிறுவனங்களை
ஒன்றிணைத்து சலுகை விலையில் உத்தரவாதமான
சேவையினை வழங்குகின்றோம்
EMAIL:-bcntravels@hotmail.de
BCN Travels// Consulting Network (TBW)
UG Inh.Rasan.Sivalingam
bcntravels@hotmail.de,consultingnetwork@hotmail.de
Tel: 0231 10 87 63 60
Rheinische str-72,44137 Dortmund Germany Tel: 0231- 108 763 61, 0231 584 407 63 Fax: 0231 108 763 62 Mobile:0163- 871 43 69



### கவிஞர் நா. முத்துக்குமார்

# மகனுக்கு எழுதிய முத்தான மடல்!

**அன்புள்ள மகனுக்கு,**
**அப்பா எழுதுவது.**

இது நான் உனக்கு எழுதும் முதல் கடிதம். இதைப் படித்துப் புரிந்துகொள்ளும் வயதில் நீ இல்லை. மொழியின் விரல் பிடித்து நடக்கப் பழகிக்கொண்டு இருக்கிறாய். உன் மொழியில் உனக்கு எழுத, நான் கடவுளின் மொழியை அல்லவா கற்க வேண்டும்.
வங்காளத் திரைப்பட இயக்குநர் சத்யஜித்ரே, சிறு வயதில் தன் ஒவ்வொரு பிறந்த நாளின் போதும், தாயுடன் சென்று மகாகவி தாகூரை, அவர் நடத்தி வந்த சாந்தி நிகேதனில் சந்தித்து ஆசி பெறுவார். ஒரு முறை அப்படி வாழ்த்து பெற சந்திக்கையில், தாகூர் அவரிடம் ஒரு கவிதையை எழுதிக்கொடுத்தார். அந்தக் கவிதை...

"நான் உலகத்தின் பல நாடுகளுக்குச்
சென்று வந்திருக்கிறேன்
இந்த உலகில் உள்ள
மாபெரும் நதிகள், பறவைகள், அருவிகள்
எல்லாவற்றிலும் என் பாதம் பட்டிருக்கிறது.
ஆனால் என் மகனே
என் வீட்டுத் தொட்டத்திலுள்ள
புல்லின் நுனியில் உறங்கும்
பனித் துளியை மட்டும்
பார்க்கத் தவறிவிட்டேன்."

கவிதையைக் கொடுத்துவிட்டு சத்யஜித்ரேவிடம் தாகூர் சொன்னார். "இந்தக் கவிதை என்ன சொல்ல வருகிறது என்பது இப்போது இந்தச் சிறு வயதில் உனக்குப் புரியாது. வளர்ந்த பின் எடுத்துப் படித்துப் பார். புரிந்தாலும் புரியாலும்."
வருடங்களுக்குப் பிறகு அந்தக் கவிதையை மீண்டும் படித்த சத்யஜித்ரே, அதன் அக தரிசனத்தை உணர்ந்து "பதேர் பாஞ்சாலி" படம் எடுத்தார்.

என் அன்பு மகனே! உனக்கும் இதையே தான் சொல்கிறேன். பின் நாட்களில் இந்தக் கடிதத்தை மீண்டும் எடுத்துப் படித்துப் பார். உன் தகப்பன் உனக்குச் சேர்த்த ஆகப் பெரிய சொத்து இதுதான் என உணர்வாய்.
என் பிரியத்துக்குரிய பூக்குட்டியே! உன் மெத்தென்ற பூம்பாதம் என் மார்பில் உதைக்க... மருத்துவமனையில் நீ பிறந்ததும் உனை அள்ளி என் கையில் கொடுத்தார்கள். என் உதிரம் உருவமானதை, அந்த உருவம் என் உள்ளங் கையில் கிடப்பதைக் குறுகுறு கை நீட்டி என் சட்டையைப் பிடித்து இழுப்பதைக் கண்ணீர் மல்கப் பார்த்துக் கொண்டு இருந்தேன்.

உலகிலேயே மிகப் பெரிய இன்பம் எது? தாய் மடியா? காதலியின் முத்தமா? மனைவியின் நெருக்கமா? கொட்டிக்கிடக்கும் செல்வமா? எதுவுமே இல்லை. "தம் மக்கள் மெய்த் தீண்டல் உயிருக்கு இன்பம்" என்கிறார் வள்ளுவர். நீ என் மெய் தீண்டினாய், மெய்யாகவே நான் தூள் தூளாக உடைந்து போனேன். உன் பொக்கை வாய் புன்னகையில் நீ என்னை அள்ளி அள்ளி எடுத்து மீண்டும் மீண்டும் ஒட்டவைத்துக்கொண்டு இருந்தாய்.

நீ அழுதாய் சிரித்தாய் சிணுங்கினாய் குப்புறக் கவிழ்ந்து, தலை நிமிர்ந்து, அந்த சாகசத்தைக் கொண்டாடினாய், தரை எல்லாம் உனதாக்கித் தவழ்ந்தாய். தகப்பன் கை விரல் பிடித்து எழுந்தாய். நீயாகவே விழுந்தாய். தத்தித் தத்தி நடந்தாய். தாழ்வாரம் எங்கும் ஓடினாய். மழலை பேசி, மொழியை ஆசிர்வதித்தாய்.

என் பொம்முக்குட்டியே! இந்த எல்லாத் தருணங்களிலும் நீ நம் வீட்டுக்கு இறைவனை அழைத்து வந்தாய்.

என் செல்லமே! இந்த உலகமும் இப்படித்தான். அழ வேண்டும். சிரிக்க வேண்டும். சிணுங்க வேண்டும். குப்புறக் கவிழ்ந்து, பின் தலை நிமிர்ந்து, தரை எல்லாம் தனதாக்கித் தவழ வேண்டும். எழ வேண்டும். விழ வேண்டும். தத்தித் தத்தி நடக்க வேண்டும். வாழ்க்கை முழுக்க இந்த நாடகத்தைத்தான் நீ வெவ்வேறு வடிவங்களில் நடிக்க வேண்டும்.

என் சின்னஞ் சிறு தளிரே! கல்வியில் தேர்ச்சிகொள். அதே நேரம், அனுபவங்களிடம் இருந்து அதிகம் கற்றுக்கொள். தீயைப் படித்து தெரிந்து கொள்வதைவிட, தீண்டிக் காயம் பெறு. அந்த அனுபவம் எப்போதும் சுட்டுக்கொண்டே இருக்கும். இறக்கும் வரை இங்கு வாழ, சூத்திரம் இதுதான், கற்றுப் பார். உடலைவிட்டு வெளியேறி, உன்னை நீயே உற்றுப் பார்.

எங்கும், எதிலும், எப்போதும் அன்பாய் இரு. அன்பைவிட உயர்ந்தது இந்த உலகத்தில் வேறு எதுவுமே இல்லை. என் பேரன்பால் இந்தப் பிரபஞ்சத்தை நனைத்துக்கொண்டே இரு.

உன் தாத்தா, ஆகாய விமானத்தை அண்ணாந்து பார்த்தார். அவரது 57-வது வயதில்தான் அதில் அமர்ந்து பார்த்தார். உன் தகப்பனுக்கு 27-வது வயதில் விமானத்தின் கதவுகள் திறந்தன. ஆறு மாதக் குழந்தைப் பருவத்திலேயே நீ ஆகாயத்தில் மிதந்தாய். நாளை உன் மகன் ராக்கெட்டில் பிறக்கலாம்.



இந்த மாற்றம் ஒரு தலைமுறையில் வந்தது அல்ல. இதற்குப் பின்னால் நெடியதொரு உழைப்பு இருக்கிறது. என் முப்பாட்டன் காடு திருத்தினான். என் பாட்டன் கழனி அமைத்தான். என் தகப்பன் விதை விதைத்தான். உன் தகப்பன் நீர் ஊற்றினான். நீ அறுவடை செய்துகொண்டு இருக்கிறாய். என் தங்கமே! உன் பிள்ளைக்கான விதையும் உன் உள்ளங்கையில் வைத்திரு. உழைக்கத் தயங்காதே. உழைக்கும் வரை உயர்ந்துகொண்டு இருப்பாய்.

இதை எழுதிக்கொண்டு இருக்கையில் என் பால்ய காலம் நினைவுக்கு வருகிறது. கிராமத்தில் கூரை வீட்டிலும், பின்பு ஓட்டு வீட்டிலும் வளர்ந்தவன் நான். கோடைக் காலங்களில் வெப்பம் தாங்காமல் வீட்டுக் கூரையில் இருந்து கொடிய தேள்கள் கீழே விழுந்து கொண்டே இருக்கும். அதற்குப் பயந்து என் தகப்பன் என் அருகே அமர்ந்து இரவு முழுவதும் பனை ஓலை விசிறியால் விசிறிக் கொண்டே இருப்பார்.

தொடர்ச்சி 20ம் பக்கம்




# முதுமையில் காது மந்தமாதல்



டாக்டர் எம்.கே.முருகானந்தன்
MBBS (Cey),DFM (Col),FCGP (Col)
குடும்பவைத்தியர்

Archive for the 'காது மந்தமாதல்' Category

காது மந்தமாதல்,

"அப்பா ,இப்ப முந்தி மாதிரி ,இல்லை. ஒதுங்கி ஒதுங்கிப் போறார். முந்தி மாதிரி எங்களோடை அதிகம் கதைக்கிறதில்லை. தனக்கு ஒண்டும் ,இல்லை எண்டுட்டார். உங்களிட்டை வர மாட்டன் எண்டும் சொல்லிப் போட்டார். நான் தான் நட்டுப் பிடிச்சுக் கூட்டிக் கொண்டு வந்தனான்" என்றாள் மகள் மிகுந்த மன வேதனையுடன்.

அப்பா முகத்தில் சலனமில்லை. விட்டேத்தியாக என்னைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

அவருக்கு வயது 70 ,இருக்கும். மன விரக்தியாக ,ருக்குமோ என எண்ணிய நான் 'ஐயாவுக்கு என்ன பிரச்சனை' என்றேன். ஐயா மறுமொழி கூறவில்லை ஆனால் எனது முகத்தையே உற்றுப் பார்த்துக் கொண்டிருப்பதை உணர்ந்தேன்.

"ஐயாக்கு காது கேக்கிறது கொஞ்சம் குறைவோ" என்று கேட்டபோது, "அப்படித் தெரியல்லை எங்களோடை வடிவாக் கதைக்கிறார்தானே" என்றாள்.

ஏதோ பொருளை எடுப்பது போல மறு பக்கம் திரும்பினேன். "'ஐயா உங்களுக்கு எத்தனை வயசு" என்று கேட்டேன்.

மறுமொழி வரவில்லை. சந்தேகம் நிருபணம் ஆகியது.

காது மந்தமாவது என்பது வயதானவர்களைப் பாதிக்கும் ஒரு முக்கியமானதும் பரவலானதும் ஆன பிரச்சனையாகும்.

65 வயதுக்கு மேற்பட்டவர்களில் 15- 40 சதவிகிதத்தினரும்,
75 வயதுக்கு மேற்பட்டவர்களில் 50 சதவிகிதத்தினரும்,
85 வயதுக்கு மேற்பட்டவர்களில் 80 சதவிகிதத்தினரும் செவிப் புலன் குறைபாட்டால் பாதிக்கப்படுகிறார்கள்.

எனவே வயதாகும் போது காது மந்தமாவது என்பது நியதி போலவே ,இருக்கிறதே அன்றி விதிவிலக்காக அல்ல என்று சொல்லலாம் போலிருக்கிறது.

,இது மிக மெது மெதுவாகவே ஏற்படுகின்ற பாதிப்பு என்பதால் பலரும் ஆரம்ப கட்டங்களில் தமக்கு ,இக்குறைபாடு உள்ளதை தாமாகவே உணர்ந்து கொள்வதில்லை.

முகத்துக்கு நேர் முகம் பார்த்துப் பேசும்போது அவர்கள் புரிந்து கொள்வதால் உறவினர்களும் உணர்ந்து கொள்ளத் தாமதமாகலாம்.

செவிப்புலன் என்பது நாம் எமது சூழலுடன் தொடர்பாடுவதற்கு மிக முக்கியமான உணர் திறனாகும். ,தன் ,இழப்பானது மனித வாழ்வின் முழுமையை, அந்த வாழ்பனுபவத்தின் பூரணத்துவத்தையே சிதைத்துவிடும்.

செவிப்புலன் ,இழப்பானது மூளையின் செயல் வீச்சைக் குறைக்கறது,
ஆரோக்கியமான உணர்வுகளை மரக்க வைக்கிறது,
மனநலத்தைப் பாதிக்கிறது,
கற்றலை முடக்குகிறது,
தொழில் வாய்ப்பைச் சிதைக்கிறது

எனப் பல்வேறு பாதிப்புகளை ஏற்படுத்துகிறது.

வயதானவர்களின் காது மந்தமாகும் போது
மற்றவர்களுடன் வழமை போலப் புரிந்து பேசி உறவாட முடியாமல் தடுமாறுகிறார்கள்.

தனிமைப்படுகிறார்கள்.
வழமையான நடவடிக்கைகளைக் குறைத்துக் கொள்கிறார்கள்.

,இதனால் ஏக்கத்திற்கும் மனவிரக்திக்கும் ஆளாகிறார்கள். ,இவர்கள் உறவினர்களிடமிருந்தும் நண்பர்களிடமிருந்தும் தாமாகவே ஒதுங்கிக் கொள்கிறார்கள்.

,இது தான் அப் பெண்மணியின் அப்பாவுக்கு நடந்தது.காது மந்தமாதல் ,இரண்டு வகையானது.

முதலாவது ஒலியானது சூழலிருந்து காதுத் துவாரம் வழியாக செவிப்பறைக் குருத்தெலும்புகள் எனக் கடத்தப்படுதலில் உள்ள கோளாறாகும். செவிப்பறை பாதிப்படைதல், துவாரமடைதல், குருத்தெலும்புகள் ,இறுகுதல் போன்றவற்றால் ,இது நேரலாம்.

,இரண்டாவது வகை நரம்பு மண்டலம் சம்பந்தப்பட்டது. ஒலியை உணர்தல், அதனைப் பாகுபடுத்தி விளங்கிக் கொள்ளல் ஆகியவவை பாதிப்புறுவதால் ஏற்படுவது.

,இது மூப்படைவதின் ஒரு கட்டமேயாகும். ஒருவர் முகத்திற்கு நேரே பேசும் போது விளங்கிக் கொள்ளும் வயேதிபர், பலர் கலகல எனப் பேசும் போது புரிந்து கொள்ளச் சிரமப்படுவது ஒலியை பாகுபடுத்தி விளங்க முடியாதிருப்பதாலேயே.

புறச் சத்தங்கள் அதிகமாக உள்ள ,இடங்களிலும் ஒலி எதிரொலிக்கும் ,இடங்களிலும் அவர்களால் கேட்க முடிவதில்லை.

அதே போல விரைவாகப் பேசுவோரின் உரையாடல்களையும், புதியவர்களின் பேச்சுக்களையும் அவர்களால் புரிந்து கொள்ள முடிவதில்லை.

வயதானவர்களின் காது கேளாமையைக் முழுமையாகக் குணப்படுத்தக் கூடிய சிகிச்சைகள் எதுவும் கிடையாது என்பது உண்மைதான்.

ஆயினும் அவர்களின் குறைபாட்டைத் தணிப்பதற்கு பல வழி முறைகள் உள்ளன. அவற்றைப் பயன்படுத்த உதவுவது உறவினர்களின் கடமையாகும்.

காது கேட்கும் கருவிகள் பலன் தரக் கூடும். ஆயினும் 10-15 சத விகிதமானவர்களே அக் கருவிகளைத் தொடர்ந்து உபயோகிக்கிறார்கள். காரணம் அது ,இயற்கையான காதுக்கு மாற்றீடு அல்ல. அத்துடன் கூட்டமான ,இடங்களில் புறச் சத்தங்களும் குழப்பக் கூடும். அத் தருணங்களில் ,இரண்டு காதுக்குமே கருவியை உபயோகிப்பது பிரயோசனமாயிருக்கும்.

ஸ்பீக்கர் போன், ஒலி அதிகரித்த தொலைக் காட்சிப் பெட்டி, ஒலியுடன் ஒளியையும் உமிழும் அழைப்பு மணி போன்ற பாவனைப் பொருட்கள் அவர்களைச் சூழலுக்குள் திருப்தியோடு அணைந்து ,இயங்க உதவக் கூடும்.

தொடர்ச்சி 24ம் பக்கம்




T.T.S.Brothers GmbH&Co.KG

உங்கள் வீட்டு தேவைக்கான அனைத்து மளிகை பொருட்கள்-ஆடை அணிகலன்கள் மற்றும் உங்கள் உறவுகளுக்கு பணம் அனுப்புவது முதல் அனைத்து தேவைகளுக்கு நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்.

உங்கள் உறவுகளுக்கு
துரிதமாகப் பணம் அனுப்ப நாடுங்கள்!
0.01€ இருந்து 500€ வரை அனுப்ப 8.90 € மட்டுமே!
500€ இருந்து 1.500€ வரை அனுப்ப 15.00€ மட்டுமே!

MoneyGram. Transfert d'argent

RHEINISCHE STR 52
44137 DORTMUND
Tel:0231 819288

Helmholtz Str.11
46045 Oberhausen
Tel:0208 202829


Garten Str.29
48147 Münster
Tel: 0251 2301184

Johannes Str.35
53225 Bonn Beuel
Tel. 0228 40377846

Graphic design Vettimaniy Ltd


டோட்முண்ட் மாநகரில்...!
மேலதிக தகவல்களை அறிய எமது இணையத்தளம் மற்றும் முகப்புத்தகப் பக்கத்தினை பார்வையிடவும்...
TKS BEST FOODS
2 Anniversary
2வது ஆண்டுப் பூர்த்தியை முன்னிட்டு...
மாபெரும் மலிவு விற்பனையும்...!!
குலுக்கல் முறையிலான அதிஷ்டமும்!
24.09.2016 TKS BEST FOODS தனது 2வது அகவையினைப் பரிசுப் பொதிகளுடன் மிகவும் கோலாகலமாகக் கொண்டாடவிருக்கிறது என்பதை மனமகிழ்வுடன் அறியத்தருகின்றோம்...!
உங்களுக்கான எமது அதிஷ்டப் பொருட்களாக...
1ம் பரிசு : 500€ பெறுமதியான தங்க ஆபரணங்கள் (ESTM JEWELRY)
2ம் பரிசு : 200€ பெறுமதியான Gutschein (TKS BEST FOODS)
3ம் பரிசு : 150€ பெறுமதியான Gutschein (GOPARA GNANAM)
4ம் பரிசு : 50€ பெறுமதியான Gutschein (AMMA'S FOOD)
5ம் பரிசு : 36,99€ பெறுமதியான Tristar Rice Cooker 2,2L (TKS BEST FOODS)
மேலும் 10 ஆறுதல் பரிசில்களுடனும் என்றும் TKS BEST FOODS உங்களின் ஆதரவில்...
எமது வளர்ச்சியில் உறுதுணையாக இருக்கும் வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்...!
Tel:+49 231 950 468 81
Fax:+49 231 950 468 82
E-mail: info@tks-bestfoods.de
Web: www.tks-bestfoods.de
Facebook: tksbestfoods
Rheinische Str. 79, 44137 Dortmund
500€
200€
150€
50€
E.S.T

# கடைசி ஓட்டம்




–சுருதி

தர்மு ஒரு கடின உழைப்பாளி - ரக்சி ஓட்டுனன். காலையில் பிள்ளைகளைப் பள்ளிக்கூடம் அனுப்பி வைத்துவிட்டு, மதியத்துடன் வேலையை ஆரம்பிப்பான். இரவு இரண்டு மணிக்குள் வீடு திரும்பிவிடுவான்.
அன்று தனது கடைசிப் பிரயாணி ஒருவரை விமானநிலையத்திலிருந்து அவரது வீட்டில் இறக்கிவிட்டு, தனது வீட்டிற்குப் போக எத்தனிக்கும்போது

மறுமுனையில் நின்ற ஒரு இளம்பெண் வயது முப்பதிற்குள் இருக்கலாம் - வேக வேகமாகத் தனது கைகளை ஆட்டினாள். அப்போது நேரம் இரவு ஒன்று பதினைந்து. நிற்காமல் இழுத்துக் கொண்டு வந்த தர்முவுக்கு, கண்ணாடிக்குள் தெரிந்த அவள் தோற்றம் தர்மசங்கடத்தைக் கொடுத்தது. அவள் தன் இருகரங்களையும் கூப்பி மன்றாடும் தோற்றம் தெரிந்தது. கை எடுத்துக் கும்பிட்ட பின்னர் அது யாராக இருந்தால்தான் என்ன? அவன் மனம் இளகியது. கருணை உள்ளம் கொண்ட தர்முவிற்கு அவளைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது.

"ஒருவேளை நான் இருக்கும் பக்கமாகவும் அவள் போகக்கூடும்"
ரக்சி நின்றது.

அவள் பதறியடித்தபடி ரக்சியை நோக்கி ஓடி வந்தாள். அவளின் ஓட்டத்தைப் பார்க்க தர்முவிற்கு சிரிப்பாகவும் இருந்தது.
வாயில் நுழையாத பூர்வீகக்குடிகள் வாழும் இருப்பொன்றின் பெயரைச் சொல்லி, அங்கு போக வேண்டும் என்றாள்.

"இந்த நேரத்திலா?" நெருப்பில் கால் வைத்தது போலப் பதறினான் தர்மு.
"ஆம். தாத்தாவிற்கு கடுமை என்று தகவல் வந்தது. எவ்வளவு என்றாலும் தருகின்றேன்" முச்சிரைக்கச் சொன்னாள் அவள்.

எவ்வளவு என்றாலும் தருகின்றேன்!
அந்தக் குளிர் பனியிலும் அவள் முகம் வியர்த்திருந்தது. அழகான அந்த இளம்பெண்ணின் கையில் ஒரு 'வோட்கா குறூசர்' இருந்தது.

"சரி. ஏறிக்கொள்"

அவள் காரிற்குள் ஏறுவதற்குள் அவள் உடலில் பூசியிருந்த சென்ற் காரை குபுக்கென்று நிரப்பியது.

"இருபது நிமிடங்களுக்குள் போய் விடலாம்" தர்மு சொல்லவேண்டியதை அவளே சொன்னாள். அவர்களிடையே பேச்சு வளர்ந்தது.

கார் மலையில் வளைந்து வளைந்து ஏறிக் கொண்டிருந்தது. இரண்டுதடவைகள் மலையைச் சுற்றியதும் ஜிபிஎஸ் தலை கிறுகிறுத்து செயலிழந்து போனது. அதன் பிறகு தர்முவிற்கு அவளே ஜிபிஎஸ் ஆனாள்.

ஒருவாறு வீட்டை அடைந்துவிட்டார்கள். பெரியதொரு வளவிற்குள் ஒரு குடில் போல இருந்த அந்த வீடுஇ தர்முவிற்கு ஒரு ஆச்சிரமத்தின் தோற்றத்தைக் கொடுத்தது. இறங்கும்போதுஇ "நாற்பது டொலர்கள்" என்றான் தர்மு.

"நீங்கள் என்னை இங்கு விரைவாகக் கொண்டு வந்து சேர்த்தமைக்கு நன்றி" தன் இருகரங்களையும் கூப்பி நன்றி தெரிவித்தாள். பின்னர் சிறிதளவு காசை அவனது கையில் திணித்துவிட்டு பறந்தோடினாள். காசை எண்ணிப் பார்த்துவிட்டுஇ "நில்லுங்கள்! இன்னும் இருபது டொலர்கள் தரவேண்டும்" கத்தினான் தர்மு.

அவள் ஓடுவதை நிறுத்திஇ திரும்ப தர்முவிடம் வந்தாள்.

"என்ன காசு குறைகின்றதா? இவ்வளவும்தான் என்னிடம் உள்ளது" தர்மு நினைத்திரா வண்ணம் அவன் கன்னத்தில் ஒரு முத்தம் பதித்தாள்.

"வந்தவழியே கவனமாகப் பார்த்துப் போங்கள். நன்றி" என்று சொல்லிவிட்டு சிட்டாகப் பறந்தோடினாள்.

மிகுதிக்காசுக்கு ஒரு முத்தம் வாங்கிய நிலையில் திகைத்துப் போய் காரிற்குள் சில நிமிடங்கள் இருந்தான் தர்மு. பின்னர் காரை ஸ்ராட் செய்தாரன். இனி எந்தத் திசையில் போவது?

ஒரு குறிப்பிட்ட திசைவழியே சென்ற தர்மு பாதை பிழைத்துவிட்டது என்பதை அறிந்து கொண்டான். இன்னும் கொஞ்ச தூரம் ஓடிப் பார்க்கலாம் என்ற நினைப்பில் மேலும் ஓடினான். இருந்த ஜிபிஎஸ் இயங்க மறுத்தது. வந்த ஜிபிஎஸ் போய்விட்டது.

தர்முவால் பாதையைக் கண்டுபிடிக்க முடியவில்லை. அடுத்து வந்த வளைவில் பாதை இரண்டாகப் பிரிந்தது. அதனடியில் செய்வதறியாது சில நிமிடங்கள் நின்றான். மீண்டும் அந்தப்பெண்ணின் வீட்டிற்குப் போய் அங்கிருந்து மீண்டும் பயணத்தைத் தொடங்கலாம் என ஜோசித்தான். அது சரியாக அவனுக்குத் தென்படவில்லை. தன் வலக்கையின் சுட்டுவிரலையும் நடுவிரலையும் நீட்டி 'இரண்டில் ஒன்றைத் தொடு' என மனதுக்கு கட்டளையிட்டான். மனது தொட்ட வழியில் காரை வேகமாகச் செலுத்தினான். சற்றே பிசகினாலும் விதியின் வழி வீதியிலிருந்து பள்ளத்திற்குள்தான். வழியில் 'சீனிக் பிளேஸ்' என வயிற்றைத் தள்ளியபடி பூமிமாதா கர்ப்பிணியாகப் படுத்திருந்தாள். அதன் மேல் வாகனத்தை ஓரம் கட்டினான் தர்மு.

காரிற்குள் இருந்தபடி மனைவிக்கு ரெலிபோன் செய்வதற்காக முயற்சித்தான். அதுவும் செயலிழந்து போயிருந்தது. எதுவுமே இல்லாத இடத்தில் இப்படி ஒரு சீனிக்வியூ இருந்தது அவனுக்குக் கோபத்தை உண்டுபண்ணியது. சிகரெட் ஒன்றைப் பற்ற வைத்தபடி காரிலிருந்து கீழிறங்கினான். சிகரெட் புகையுடன் போட்டியிட்டவாறு அதல பதாளத்திற்குள்ளிருந்து பனிப்புகார் மேல் நோக்கிக் கிழம்பிக் கொண்டிருந்தது. இயற்கையை ஒருவராலும் வெல்ல முடியாது என்பது உண்மைதான். மொபைல் போனில் நேரத்தைப் பார்த்தான். மணி நான்கு பத்து.

அன்றைய இரவு அந்த மலைப்பிரதேசத்தில் வேறு எந்தவிதமான வாகனங்களையோ மனித நடமாட்டங்களையோ அவன் சந்திக்கவில்லை. இனி வாகனம் ஓடுவதில் பயனில்லை எனக் கண்டுகொண்ட அவன் விடியும்வரை காரிற்குள் இருப்பதென முடிவு செய்தான். சீக்கிரமாகவே தர்மு தன்னையுமறியாமல் உறக்கத்திற்குப் போய்விட்டான்.

விடியற்காலை வாகனங்கள் வரிசைகட்டி விரைந்து செல்லும்சத்தம் அவனைத் துயிலெழ வைத்தது. பதைபதைத்து எழுந்து சுற்றுமுற்றும் பார்த்தான்.
தூரத்தே வெளிச்சப்புள்ளிகள் நகர்ந்து செல்லும் காட்சி மரங்களினூடாகத் தெரிந்தது.

தொடர்ச்சி 12ம் பக்கம்




கடை வாசலில் நோட்டம்


உள்ளே நுழைவதற்கு கடும் பிரயர்த்தனம்

# நீர்வேலியில் மனுச்சோழன் காலத்தில் மணி அடித்த பசுவின் பரம்பரை

லலீசன்

கற்றல் தொடர்பான கொள்கைகளில் நடத்தைவாதத்திற்கு (Behaviorism)

மிகுந்த செல்வாக்கு இருக்கின்றது. இதன் ஒரு தரிசிப்பை இன்று நீர்வேலியில் அனுபவித்தேன்.

.

மேய்ச்சலுக்காகத் தரவையை நோக்கிச் செல்லும் மாடுகள் நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் கோவிலடியில் ஒன்று கூடிப் பின்னர் பயணத்தை மேற்கொள்ளும்.

ஒவ்வொரு ஒழுங்கையாலும் வரவேண்டிய தங்கள் நண்பர்களுக்காக அவை காத்திருந்து பின் ஒன்றாகக் கூடி நீர்வேலித் தரவையை நோக்கிச் செல்லும் காட்சியும் அழகானதுதான்.

என்னதான் வெயிலோ மழையோ பிற்பகல் 5 மணிக்கு நேரம் பிந்தாமல் அவை திரும்பி விடும். சும்மா ஒரு வழித்துணைக்கு பின்னால் ஒரு மூன்றுபேர் 'ஹாய்' சொல்லிக் கொண்டிருப்பர்.

கோவிலடிக்கு மீள வரும் வழியில் தமக்கு வாடிக்கையாக எதையாவது கொடுத்துப் பழக்கியவர்களிடம் சென்று அவற்றை வாங்காமல் அவை நகரமாட்டா.

அத்தகைய கொடுத்துச் சிவந்த வாடிக்கையாளருள் கோவிலுக்கு அருகில் உள்ள கடைக்கார ஆனந்தனும் ஒருவர். அவரது கடை வியாபார மந்தத் தன்மையால் மாலை ஐந்து மணியை அண்டித்தான் தற்போது திறக்கப்படுவது வழக்கம்.

.

இங்கு படத்தில் உள்ள காட்சி கடை திறக்கப்படாத நிலையிலும் ஒற்றைக் கதவால் தலையை நுழைத்து "என்ன ஏதாவது தரப்போகிறீர்களா?" என பசு ஒன்று கேட்கிறது.

.

மனுச்சோழன் காலத்தில் மணி அடித்த பசுவின் பரம்பரைப் பசுவோ ?

# கடைசி ஓட்டம்..

11ம் பக்கத் தொடர்ச்சி

"அனேகமாக அது ஒரு நெடுஞ்சாலையாகத்தான் இருக்க வேண்டும்" முடிவு செய்தபடி வாகனத்தை ஸ்ராட் செய்துஇ அதன் திசை நோக்கிச் செலுத்தத் தொடங்கினான்.

வீட்டிற்கு வந்தபோது மணி ஆறாகிவிட்டது. வானம் வெளிச்சமிடத் தொடங்கிவிட்டது. இரவு என்ற ஒன்று அவனுக்கு வராமலேயே மறு உதயம்.

இன்னும் சிலமணி நேரங்களில் பிள்ளைகள் துயில் கலைத்து பாடசாலைக்குச் செல்ல ஆயத்தமாகி விடுவார்கள். மனைவியும் எழுந்து விடுவாள். ஒருவரையும் குழப்பாமல், முன் ஹோலிற்குள்ளிருந்த செற்றிக்குள் உடுப்புகளையும் மாற்றாமல் புதைந்து கொண்டான். மனைவி போட்டுத் தரும் கோப்பியின் சுவைப்பிற்காகக் காத்திருந்தான்.

ஒரு கோழித்தூக்க முடிவில் மனைவி கையில் கோப்பியுடன் நின்றார். கோப்பியை வாங்கி தர்மு உறுஞ்சிக் குடிப்பதை மனைவி ரசித்தபடி பார்த்தார். கோப்பி முடிந்ததும்இ

"எங்கையப்பா போனனியள்? ஒரு போன் பண்ணக்கூடவா நேரமில்லை" என உறுமினார்.

தர்மு தனக்கு நேர்ந்த சம்பவத்தை மனைவியிடம் சொல்லத் தொடங்கினான். கதை முடிந்ததும், அவன் காதைப் பிடித்துத் திருகியபடி தர்முவை குளியலறைக்கு இழுத்துச் சென்றாள்.

"கண்ணாடியிலை பாருங்கோ உங்கடை முகத்தின்ரை லட்சணத்தை..."

வலது கன்னத்தில் உதட்டின் முத்தமொன்று செக்கச் செவேலென்று சிரித்தபடி இருந்தது. அவன் நடந்ததைச் சொல்லத் தெண்டித்தான். அது இனிச்சரிவராது என்று தர்முவிற்குத் தெரியும்.

"பிள்ளையள் எழும்பமுதல் உந்தக் கண்றாவியத் தலை முழுகிவிட்டு வாங்கோ. நேற்றைய ஓட்டம்தான் உங்களுக்குக் கடைசி ஓட்டம். ஓடுறாராம் ஒரு ஓட்டம்" குளியலறைக் கதவை பலமாக அடித்துச் சாத்திவிட்டுப் வெளியேறினாள் அவள்.

"ஓட்டம்... ஓட்டம்...
எண்டு இவள் சொல்கின்றாள்"
அவனுக்கு ஒன்றும் புரியவில்லை.






நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்
இயற்க்கை ஆயுள்வேத ஐரோப்பிய நாடுகளுக்கு உகந்த
கேரளா இயற்கை மருத்துவம்
இந்தியா ஈரோடு - இலங்கை நல:லூர் - பிரான்ஸ் லாகூர்நெவ்
தொலைபேசி இல : 0091984225622З
குருநாத் ராம் லக்ஸ்மன்

இயற்கை மூலிகை வைத்தியசாலையில்,கைநாடி பார்த்து
உங்கள் சகலவிதமான நோய்களுக்கும்
இயற்கை மூலிகை வைத்தியப்படி தீர்த்துவைக்கப்படும்.

முடி உதிர்தல்
சிக்கன் குனியாவால் காய்ச்சல்
தீராத கை-கால் வலி
ஆஸ்துமா,அலர்ஜி
உடல் பருமன் அதிகரிக்க-குறைக்க
மூட்டுவலி,பயம்,ஞாபக சக்தி
பெண்களுக்கான மாதவிடாய் பிரச்சனை
தோல்வியாதி(சொரியாசிஸ்)
சிறுநீரகக் கோளாறு
இருதயக் கோளாறு
பக்கவாதம்
நரம்புத் தளர்ச்சி

தலைவலி
காய்ச்சல்
சரவாங்கி
இரத்தக்கொதிப்பு
வாயுக் கோளாறு
உஷ்ணம்
நரம்புவாதம்
அல்சர்
வயிற்றுவலி
இடுப்புவலி
காக்காவலிப்பு
ஆண்மைகுறைவு
வெட்டைச்சூடு
ஜனசுடு

உள்மூலம்
வெளிமூலம்
பகந்தரிமூலம்
கை-கால் குடைச்சல்
கழுத்துவலி
முகப்பரு
தேமல்
வெண்குஷ்டம்
டி.பி
வாதம்
மஞ்சள் காமாலை
கண்,காது
தொண்டை நோய்கள்
ஆறாத காயங்கள்

மற்றும் எந்தவிதமான நோய்கள் உடம்பில் இருந்தாலும்
இயற்கை மூலிகை வைத்தியப்படி,
பக்க விளைவுகள் எதுவுமின்றி குணப்படுத்த முடியும்.



Gartenstrasse 185, 41236 Mönchengladbach - Germany
0049 1517-5230649 // 0049 1521-8215707

# இங்கிலாந்து தயாரித்த உலகின் மிகப்பெரிய ஆகாய கப்பல் வெற்றிகரமாக பறந்தது!!









ஓடுபாதை தேவையில்லை.

நாளைய மனிதனுக்கா, இன்று மனிதன் தன் வாழ்வின் பாதியை இழக்கின்றான்.
எப்படி எல்லாம் சுகமாக வாழலாம் என்பதற்கா தன் சுகத்தையும் இழக்கின்றான். இங்கு நான் சொல்வது ஒட்டுமொத்த மனிதரையும் அல்ல. ஒரு சிலரை. அவர்கள் செய்யும் ஆராய்ச்சிகள் எம்மை வானத்தில் பறக்க வைக்கின்றது.
இதோ இப்போ உலகில் மிகப்பெரிய விமானத்தை செய்து முடித்துள்ளது இங்கிலாந்து. இது தொடக்கம்தான், இருந்தாலும் முடிவு வெகுதொலைவில் அல்ல, என்பதும் உண்மையே!
இங்கிலாந்தின் கார்டிங்டன் விமானதளத்திலிருந்து 17.08.2016 பறக்க விடப்பட்ட 92 மீட்டர் நீளமும், 43.5 மீட்டர் அகலமும் கொண்ட உலகின் மிகப்பெரிய வானூர்தி ஏர்லேண்டர் 10.

உலகின் மிகப்பெரிய வானூர்தி 'ஏர்லேண்டர் 10' நேற்று முதன் முறையாக பறக்க விடப்பட்டது.
மத்திய இங்கிலாந்தின் கார்டிங்டன் விமானதளத்திலிருந்து இந்த ஏர்லேண்டர் 10 தனது கன்னிப் பயணத்தைத் தொடங்கியது. இங்கிலாந்தைச் சேர்ந்த ஹைபிரிட் ஏர் வெகிக்கிள்ஸ் நிறுவனம் இதனைத் தயாரித்துள்ளது.

விமானம், ஹெலிகாப்டர், ஆகாய கப்பல் (ஏர்ஷிப்) ஆகிய மூன்றின் கலவையாக இந்த வானூர்தி தயாரிக்கப்பட்டுள்ளது. உலகின் மிகப்பெரிய பயணிகள் விமானமான ஏர்பஸ் ஏ380 விமானத்தின் நீளம் 240 அடிதான். ஆனால், ஏர்லேண்டர் 92 மீட்டர் (302 அடி) நீளம் கொண்டது.
கடந்த 85 ஆண்டுகளுக்கு முன் 1930 அக்டோபர் மாதம் இதே விமானதளத்திலிருந்து ஆர்101 என்ற மிகப்பெரிய ஆகாய விமானம் கிளம்பியது.
ஆனால், பிரான்ஸில் விபத்துக் குள்ளானது. இதில், 48 பேர் உயிரிழந்தனர். அதனால் இவ்வகை வானூர்தி தயாரிப்பை பிரிட்டன் நிறுத்தி வைத்திருந்தது. தற்போது வெற்றிகரமாக ஏர்லேண் டர் 10 தயாரிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க ராணுவத்தின் கண்காணிப்புப் பணிகளுக்காக இந்த ஏர்லேண்டர் 10 தயாரிக் கப்பட்டது. ஆனால், நிதிப்பற்றாக் குறை காரணமாக கடைசி நேரத்தில் திருப்பி அளிக்கப்பட்டதால், பிரிட்டனின் ஒத்துழைப்புடன் தற்போது பறக்க விடப்பட்டுள்ளது.

வழக்கமான விமானங்களை விட மிகப் பெரியதாகவும், ராட்சத பலூனைப் போன்றும் தோற்றமளிக் கும் இந்த ஏர்லேண்டர் 10, 4,880 மீட்டர் உயரம் வரை பறக் கும். மணிக்கு 148 கிலோ மீட்டர் வேகத்தில் பறக்கும் என ஹைபிரிட் ஏர் வெகிக்கிள்ஸ் நிறு வனம் தெரிவித்துள்ளது.

தற்போது பறக்கும் வானூர்தி களிலேயே ஏர்லேண்டர்தான் மிகப்பெரியது. இந்த வானூர்தி யைத் தயாரிக்க பிரிட்டன் அரசு 37 லட்சம் அமெரிக்க டாலர்கள நிதியுதவி அளித்துள்ளது.

இந்த விமானத்தை வர்த்தகம், சரக்குப் போக்குவரத்து, பயணிகள் விமானம், கண்காணிப்பு என பல்வேறு பணிகளுக்கும் பயன்படுத்த முடியும்.

ஹீலியம் நிரப்பப்பட்ட இந்த ஏர்லேண்டரை ஆட்களின்றி இரண்டு வாரங்களுக்கு நிலையாக பறக்க விட முடியும். ஆட்களுடன் 5 நாட்களுக்கு பறக்க விட முடியும்.

500 அடி உயரத்தில் அதிகபட்சமாக மணிக்கு 64 கிமீ வேகத்தில் பறந்தது. மொத்தம் 19 நிமிடங்களே முதல் சோதனை ஓட்டம் நீடித்தது. தொடர்ந்து 200 மணி நேரம் சோதனை செய்யப்பட உள்ளது.

இந்த ஆகாய கப்பலுக்கு ஓடுபாதை தேவையில்லை. எனவே, எந்த ஒரு இடத்திலிருந்தும் ராட்சத தளவாடங்களை உலகின் எந்த மூலைக்கும் எளிதாக பரிமாற்றம் செய்ய முடியும்.
வேகம் குறைவு ஓடுபாதை தேவையில்லை, குறைவான எரிபொருள் செலவு உள்ளிட்ட பல சாதகமான அம்சங்களை பெற்றிருந்தாலும் ஒரு சில குறைகள் உள்ளன. அதாவது, இந்த ஆகாய கப்பல் அதிகபட்சமே மணிக்கு 148 கிமீ வேகத்தில்தான் பறக்கும்.
அதேநேரத்தில், சரக்கு கப்பல்களை ஒப்பிடும்போது இது மிக விரைவான போக்குவரத்து சாதனமாகவே இருக்கும்.


தொடர்ச்சி 14 ம் பக்கம்




நிகழ்வின் நிழல்கள்
www.konessfotos.de
யேர்மனி சுவெற்றா -ஸ்ரீ கனகதுர்க்கா அம்பாள் ஆலயத்
31.07.2016 தேர்த் திருவிழாக் காட்சிகள்
படங்கள் கோணேஸ்


Warendorf மாவட்டத்தில்
மாபெரும் அங்காடி
M point Supermarkt
M POINT Supermarkt
e.mail: mpointsupermarkt@yahoo.de
துரித பணமாற்றுச் சேவை!
எம்மை நாடுங்கள்!!
VALUTRANS MONEY TRANSFER
Email : shansure7480@yahoo.de
இலங்கைக்கு
நம்பிக்கையான பொதிகள்
சேவை!
எம்மை நாடுங்கள்
Mr. Shan Curry & mehr
Catering & Partyservice
உடனுக்கு உடன் இறக்குமதி
செய்யப்பட்ட
மரக்கறிவகைகள்
கடல் உணவு வகைகள்,
மற்றும் மளிகைப்
பொருட்களுக்கும்
எம்மை நாடுங்கள்
M-Point Supermarkt
Von-Gallen Str - 5
48336 Sassenberg
(Kreis Warendorf )
Tel: 02583 30 30 300 0179 48 555 54

# காதலர்கள் தங்கள் இதயம் துடிப்பதை இனி எங்கிருந்தாலும் கேட்கலாம்!



## அன்பானவர்களின் இதயத் துடிப்பை உணர வைக்கும் மோதிரம்!



உலகிலேயே அதிநவீன மோதிரம் Touch HB Ring. இது காதலர்களுக்கும் தம்பதியர்களுக்குமான மோதிரம். இதை அணிந்து கொண்டால் உங்கள் அன்புக் குரியவர்களின் இதயத் துடிப்பை உணர முடியும். போன், ஸ்கைப் என்று எத்தனையோ கருவிகள் உறவுகளுக்கு இடையே இருக்கும் தூரத்தைக் குறைத்துவிடுகின்றன.
ஆனால் அவற்றைவிட இந்த மோதிரம் இன்னும் நெருக்கத்தை அதிகரிக்கிறது. பல்லாயிரக்கணக்கான கிலோ மீட்டர் தூரத்தில் கணவனும் மனைவியும் தனித்தனியாக இருந்தாலும் மோதிரத்தின் மூலம் அவர்களின் இதயத் துடிப்பை உணர முடியும்!

அருகில் இருப்பது போலவே தோன்றும். ஸ்மார்ட்போனில் அப்ளிகேஷனை டவுன்லோட் செய்துகொண்டு, கணவன் அல்லது மனைவியின் தகவல்களைக் கொடுக்க வேண்டும். பிறகு மோதிரத்தை அழுத்தினால் இதயத் துடிப்பைக் கேட்கலாம்.

இந்தச் சின்னஞ்சிறு மோதிரத்துக்குள் பேட்டரி, சார்ஜிங் கனெக்டர், மதர்போர்ட், சென்சார்கள் என்று ஏராளமான விஷயங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. தண்ணீர் புகாதவாறு அமைக்கப்பட்டிருக்கிறது. 2 தங்க மோதிரங்கள் 2 லட்சம் ரூபாய். துருப்பிடிக்காத உலோகங்களால் செய்யப்பட்டிருக்கும் 2 மோதிரங்கள் 40 ஆயிரம் ரூபாய். மோதிரங்களின் தரத்துக்கு ஏற்ப விலையும் இருக்கும். ஆப்பிள் கைக்கடிகாரங்களில் பதிவு செய்யப்பட்ட இதயத் துடிப்புகளைத்தான் கேட்க முடியும். ஆனால் டச் மோதிரங்களில் நேரடியாகவே இதயத் துடிப்புகளை அறிய முடியும்.

# முதுகுக்குப் பின்னால் நாம் செய்யவேண்டிய காரியம்

உன் வாழ்க்கையின் எந்த ஒரு நாளில் உன் முன்னால் எந்தப் பிரச்சினையையும் நீ சந்திக்காமல் முன் செல்கிறாயோ, அப்பொழுது தவறான பாதையில் நீ பயணிக்கிறாய் என்று அறிவாய்.

நீ எதை நினைக்கிறாயோ அதுவாகவே ஆகிறாய். நீ உன்னை பலவீனன் என்று நினைத்தால் பலவீனனாகவே ஆகிவிடுவாய். நீ உன்னை வலிமையுடயவன் என்று நினைத்தால் வலிமை படைத்தவன் ஆகிவிடுவாய்.

இவனை நம்பு" அல்லது "அவனை நம்பு" என்று மற்றவர்கள் சொல்கிறார்கள். ஆனால் நான் சொல்கிறேன் -- முதலில் உன்னிடத்திலேயே நீ நம்பிக்கை வை. அது தான் வழி. உன்னிடத்தில் நீ நம்பிக்கை வை, எல்லா ஆற்றல்களும் உன்னுள்ளேயே உள்ளன. அதை உணர்ந்து அந்த ஆற்றலை வெளிப்படுத்து. "நான் எதையும் சாதிக்க வல்லவன்" என்று சொல்.
நீ உறுதியுடன் விஷத்தை பொருட்படுத்தாதிருந்தால், பாம்பின் விஷமும் உன் முன் சக்தியற்றதே. மற்றவர் பேச்சை கேட்டு, உன் சுய அறிவை இழப்பது தான், உன் வாழ்வியலையும், உறவுகளையும் சிதைக்கும் முதல் செயல்.

வாழ்வில் வேகம் மட்டும் இருந்தால் போதாது, விவேகம் இருக்க வேண்டும். வாழ்வில் நாம் முன்னேற வேகம் மட்டும் போதாது, எதிர்காலத்தை பற்றிய சிந்தனை, இந்த நொடி நாம் செய்யும் செயல் அடுத்த நொடியில் எப்படி எதிரொலிக்கும் என முன்கூட்டிய எண்ணத்துடன் விவேகத்துடன் இருக்க வேண்டும். அது தான் உறவுகளும், வாழ்க்கையும் சிறக்க உதவும்.

பிறர் முதுகுக்குப் பின்னால் நாம் செய்யவேண்டிய காரியம் தட்டிக்கொடுப்பது மட்டும்தான். பிறர் முதுகின் பின்னால் பேசும் முறையை கைவிடுதல் வேண்டும். நாம் பேசிய வார்த்தைகள் அவர்களது முகத்திற்கு முன்னால் தெரியவரும் போது, உறவுகள் முழுமையாக சிதைந்துவிடும்.

## 7வது ஆண்டு நினைவு அஞ்சலி



மலர்வு 19.09.1957 | உதிர்வு: 07.09.2009

**அமரர் உயர்திரு. கணபதிப்பிள்ளை செந்தில்குமார்.**

யாழ் இணுவில் மேற்கில் பிறந்து யேர்மனி சுவேற்றா நகரில் வாழ்ந்து 07.09.2009 இல் எம்மைவிட்டுப்பிரிந்த எம் அன்புத் தெய்வமே!
உன் அழகுத் திருமுகம் மறைந்து ஆண்டுகள் ஏழு ஆனாலும் உன் ஆத்மா என்றும் எங்களுக்குத் துணைதான் ஐயா உங்கள் ஆத்மசாந்திக்காப் பிராத்திக்கும்.

மனைவி,மக்கள்

தகவல்: றஜீவி.செந்தில்குமார்.(யேர்மனி-சுவேற்றா)








Baufinanzierung / வீடு வாங்குவதற்க்கு தேவையான கடன்கள்:100% Free service
Umfinanzierung / வீடுக்கடனை எம்மிடம் மாற்றுதல் 100% Free service
Ratenkredit / தனிநபர் கடன் 100% Free service
Sonderfinanzierung / பலவிதமான கடன் வசதிகள்
Immobilien / வீடு விற்க இல்லையேல் வாங்குவதற்கான ஒழுங்குகள்
Full Service / முழுமையான சேவை

**நம்பிக்கை! உத்தரவாதம்!! 15 வருட அனுபவம்!!!**
மேலதிகவிபரங்களிட்கு **Tel. 05723-914519** or www.rklimmo.de
or www.lankasri.com

### தன்னம்பிக்கையும் முயற்சியும் இருந்தால்

# சுவர் இல்லாமலும் சித்திரம் வரையலாம்.

08

சேவியர்



## பயங்களின் கூடாரம், தன்னம்பிக்கையின் சேதாரம்

தோற்றுவிடுவோமோ எனும் பயத்திலேயே பலர் முயற்சிக்கான முதல் சுவடை எடுத்து வைப்பதில்லை. முதல் சுவடை எடுத்து வைக்காதவன் எப்போதுமே பயணம் செல்ல முடியாது என்பது சர்வதேச விதி.

“வெற்றி பெற விடாமல் நம்மைத் தடுப்பவை தோல்வியடைந்து விடுவோமோ எனும் பயம் தான்” என்கிறார் ஷேக்ஸ்பியர். தோல்வியும் வெற்றியும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்கள் போல. தோல்விகளைச் சந்திக்காத வெற்றியாளர்கள் இருக்கவே முடியாது ! தோல்வி என்பது இயல்பானது என்பதைப் புரிந்து கொண்டாலே வெற்றிக்கான முதல் கதவைத் திறந்து விட்டோம் என்று தான் பொருள்.

அமெரிக்க ஜனாதிபதியாய் இருந்த ஆபிரகாம் லிங்கன் ஆறுமுறை தோல்வியைச் சந்தித்தபின் அரசியல் வெற்றியை ஆதாயமாக்கிக் கொண்டவர். தோல்வி என்பது வெற்றியை நோக்கிய பாதை என்பதில் அவருக்கு உறுதி இருந்தது. எனவே அவர் வெற்றியாளரானார்.

வெற்றிகளில் சிலவற்றைப் பெற்றுக் கொள்ளலாம். தோல்விகளில் பலவற்றைக் கற்றுக் கொள்ளலாம். ஆனால் தோல்வி குறித்த பயத்தில் முயற்சி செய்யாமல் இருப்பதோ எதையுமே, எப்போதுமே நமக்குத் தருவதில்லை என்பது தான் நிஜம்.

ஜூராசிக் பார்க் என்றால் நமது நினைவுக்கு சட்டென வரும் விஷயங்கள் இரண்டு. ஒன்று டைனோசர். இரண்டாவது இயக்குனர் ஸ்டீபன் ஸ்பீல்பெர்க். அவர் தெற்கு கலிபோர்ணிய திரைப்படக் கல்லூரியான யு.எஸ்.சி யில் சேர இரண்டு முறை விண்ணப்பித்தார். இரண்டு முறையும் அவருடைய விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது. தோல்வியால் தளர்ந்து விடாமல் ஸ்பீல்பெர்க் வளர்ந்தார், உலகெங்கும் அவர் புகழ் பரவியது. எந்தக் கல்லூரி அவரை நிராகரித்ததோ அதே கல்லூரி 1994ம் ஆண்டு அவருக்கு டாக்டர் பட்டம் வழங்கிக் கவுரவித்தது ! தோல்விகளால் ஒரு வெற்றியாளனைப் புதைக்க முடியாது என்பதை உலகம் மீண்டும் ஒரு முறை ஊர்ஜிதப் படுத்திக் கொண்டது.

விழிப்புணர்வு என்பது வேறு பயம் என்பது வேறு. தோல்விகளைக் குறித்த விழிப்புணர்வு இருக்கலாம். ஆனால் அதுவே ஆளை விழுங்கும் பயமாக மாறி விடக் கூடாது என்பதே நாம் கவனிக்க வேண்டிய விஷயம். தோல்வி குறிந்த சிந்தனைகள் எச்சரிக்கை உணர்வைத் தருபவையாக இருக்கும் வரை அவை நமக்கு நன்மை பயக்கும். விபத்து குறித்த பயத்தில் சீட் பெல்ட் போட்டுக் கொள்வது எச்சரிக்கை உணர்வு. விபத்து குறித்த பயத்தில் வாகனத்தையே புறக்கணிப்பது கோழைத்தனமானது. இந்த வித்தியாசத்தைப் புரிந்து கொள்ள வேண்டும்.


சச்சின் டெண்டுல்கர் எல்லா போட்டிகளிலும் செஞ்சுரி அடிக்க வேண்டுமென்பது ரசிகனின் விருப்பம். ஆனால் அப்படி நிகழ்வதில்லை. தோல்விகளைப் புறந்தள்ளி விட்டு, அடுத்தடுத்த போட்டிகளில் வெல்ல வேண்டும் எனும் இலட்சியத்தோடு அவருடைய பயணம் தொடர்கிறது. வெற்றி பெறவேண்டும் எனும் வேட்கை இருந்தால் வெற்றி பெறுவோம். அதே நேரம், தோற்றுவிடுவோமோ எனும் பயம் மட்டுமே போதும் நம்மை வெற்றிபெறாமல் தடுக்க.

வாழ்க்கை பயந்தாங்கொள்ளிகளின் கைகளில் பதக்கங்களைத் திணிப்பதில்லை. தண்ணீர் குறித்த பயம் உங்களுக்கு நீச்சல் கற்றுக் கொள்ள தூண்டுதலாய் இருக்க வேண்டுமே தவிர, தண்ணீரைக் கண்டால் ஓடுகிற மனதைத் தந்து விடக் கூடாது. அதாவது பயம் நமக்கு அதைத் தாண்டிச் செல்கின்ற தகுதியை உருவாக்க தூண்டுதலாய் இருக்க வேண்டும். அதைக் கண்டு விலகி ஓடுகின்ற நிலையைத் தந்து விடக் கூடாது.

தோல்வி குறித்த பயத்திலிருந்து வெளியே வர தன்னம்பிக்கை மிக அவசியம். தன்னம்பிக்கை கடைகளில் விற்பனையாவதில்லை. உங்களுக்கு வேறு யாரும் வந்து தன்னம்பிக்கை எனும் ஆடையைப் போர்த்தி விடவும் முடியாது. தன்னம்பிக்கை என்பதை நாமே தான் உருவாக்கிக் கொள்ளவேண்டும். தனக்கான கூட்டைத் தானே உருவாக்கும் ஒரு சிட்டுக் குருவியைப் போல !

காலையில் எழுந்து குளித்து, ஷேவ் செய்து, புத்துணர்ச்சியுடன் நல்ல ஒரு ஆடையை அணிவதிலேயே ஆரம்பித்து விடுகிறது இந்தத் தன்னம்பிக்கைப் பயணம். “நல்ல உடை உடுத்துபவர்களிடம் தன்னம்பிக்கை அதிகமாக இருக்கும்” என்கிறார்கள் உளவியலார்கள். அது நம்மை அறியாமலேயே நமது தன்னம்பிக்கையை அதிகரித்து விடுகிறது. நமது கண்களில் தெளிவு உருவாகிறது. கட்சிதமான நேர்த்தியான ஆடை நமது தன்னம்பிக்கையின் வேர்களில் நீரூற்றுகிறது!

உயர்வான சிந்தனைகள் நமது வெற்றிகளை நிர்ணயிப்பதில் பெரும் பங்கு வகிக்கின்றன. நம்மைப் பற்றி நமது மனம் நினைக்கும் பிம்பம் தான் நாம். நம்மைப்பற்றிய உயர்வான சிந்தனைகள் நம்மையும் உயரத்தில் கொண்டு போய் வைக்கும். நம்மைப் பற்றி தாழ்வாக எண்ணினால் நமக்கான இடமும் தாழ்வாகவே இருக்கும்.



கூண்டுக்குள்ளேயே படுத்துக் கிடக்கும் சிங்கம் காலப் போக்கில் தான் ஒரு சிங்கம் என்பதையே மறந்து விடும். அதே போல தான் நம்மை ஒரு சின்னக் கூண்டுக்குள் நாமே அடைத்துக் கொண்டால், நாம் யார் என்பதே நமக்குத் தெரியாமல் போய்விடும். மாறாக நம்மை நாமே தோண்ட ஆரம்பித்தால் நமக்குள்ளிருந்து பெருங்கடல்களே புறப்படக் கூடும்.

தோல்வி பயப்பட வேண்டியதல்ல, இயல்பானது என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்பதே எனது நோக்கம். நேர் சிந்தனைகள் உங்களுக்குள் வலுவாக இருந்தாலே பயங்களெல்லாம் போய் விடும். பயங்கள் எதிர்மறை சிந்தனையின் பிள்ளைகள்.

தொடர்ச்சி 17 ம் பக்கம்


AMMA's food
ammas-food.de
டோட்மூண்ட் நகரில் ...
அம்மா'ஸ் உணவகம்
அம்மாஸ் உணவகத்தின் சிறப்பு அம்சம் சுவையைச் சுடச்சுடத் தருவதும் ஆகும்.
அறுசுவைக்கறிகளுடன் சோறும், புறியாணியும்
கொத்து றொட்டி ,இட்டலி , தோசை, வடை இடியப்பம்
இவற்றுடன் இன்னும் இன்னும் உங்கள் விருப்பறிந்து தரக்காத்திருக்கின்றோம்!
உங்கள் இலத்தின் மங்கல வைபவங்கள் அனைத்திற்கும் அம்மாவின் சமையலை நினைவூட்டும் உருசியுடன் தயாரித்து பரிமாறுவோம்!
காலை 11.00 மணி முதல் மாலை 11.00 மணிவரை
செவ்வாய் கிழமை விடுமுறை!
வெள்ளி சனி நாட்களில் பாலப்பம்

Amma's Food
Rheinische Straße 80A
44137 Dortmund
Tel:0231 33 89 86 91
Fax:0231 33 89 86 93

## தன்னம்பிக்கைத் தொடர்...

பயங்களின் கூடாரம், ......



உங்களுக்குள்ளே எப்போதுமே சில குரல்கள் எழுந்து கொண்டே இருக்கும். அந்தக் குரல்களில் எதிர்மறைக் குரல்களைக் கண்டு பிடித்து விலக்க வேண்டியது ரொம்ப அவசியம்.

விலக்குவது இரண்டு வகை. ஒன்று எதிர்மறை சிந்தனைகளை அலட்சியப்படுத்தி விட்டுச் விட்டுச் சென்று விடுவது. இரண்டாவது, ஒவ்வோர் எதிர்மறை சிந்தனைக்கும் பொருத்தமான ஒரு நேர் சிந்தனையைக் கொடுப்பது. பாசிடிவ் திங்கிங் அதிகரிக்க அதிகரிக்க நெகடிவ் சிந்தனைகள் கழன்று போய்விடும். பின்பு எதிர்மறை சிந்தனைகளே இல்லாமல் நமது மனம் அக்மார்க் பாசிடிவ் மனமாகிவிடும்.

ஹாலிவுட் பட பிரியர்கள் அனைவருக்கும் தெரிந்த பெயர்களில் ஒன்று மைக்கேல் ஃபாக்ஸ். மூன்று முறை ஏமி விருது, ஒருமுறை கோல்டன் குளோப் விருது என நடிப்பில் முத்திரை பதித்தவர். அவர் பார்க்கின்சன்ஸ் எனப்படும் கொடிய நோயால் பாதிக்கப்பட்டிருந்தார்.

தனக்கு நோய் இருக்கும் விஷயத்தையே ஏழு ஆண்டுகாலம் முழுமையாக மறைத்து திரையில் கோலோச்சிக் கொண்டிருந்தார் என்பது வியப்பூட்டுகிறது. பார்கின்ஸ்சன்ஸ் என்பது உயிரையே கொல்லக்கூடிய ஒரு கொடிய வியாதி. நோயின் வீரியம் அதிகமாகி இனிமேல் நடிக்க முடியாது எனும் சூழல் வந்தபோதும் அவர் அசரவில்லை. மூன்று மிக முக்கியமான நூல்களை எழுதிப் பிரபலம் ஆனார். பாசிடிவ் மனதை பார்கின்சன்ஸ் கூட நெருங்கமுடியாது என நிரூபித்தார்.

பாசிடிவ் சிந்தனைகளுக்கு அடுத்தது பாசிடிவ் செயல்பாடு. வெறுமனே நம்மைப் பற்றி உயர்வான சிந்தனைகளை உருவாக்கினால் போதாது. நமது செயல்களிலும் அந்த தன்னம்பிக்கையும் நேர் சிந்தனையும் வெளிப்பட வேண்டும். ஒரு கை குலுக்கலில் கூட நமது தன்னம்பிக்கை வெளிப்பட வேண்டும் என்பதே இதன் பாலபாடம். இவையெல்லாம் நம்முடைய தோல்வி குறித்த பயத்தை விரட்டும் வல்லமை கொண்டவை.

தோல்விகளை விட ரொம்ப அதிகமாய் நம்மை வாட்டுவது தோல்வி குறித்த பயம் தான். இது நடந்தால், அது நடந்தால், இப்படி நடக்குமோ, அப்படி நடக்குமோ எனும் பயத்திலேயே நம்முடைய வாழ்வின் பெரும்பாலான செயல்கள் நொண்டியடிக்கின்றன. காரணம் சின்ன வயதிலிருந்தே நாம் கற்றுக் கொண்டிருக்கும் தவறான பாடம் தான். "வெற்றி என்பது நல்லது. தோல்வி என்பது மோசமானது". அந்த சிந்தனையின் சிறையிலிருந்து வெளியேறுவது அவசியம். எல்லாமே இயல்பானது, சாதாரணமானது, சகஜமானது.

உங்களுடைய வாழ்க்கையைக் கொஞ்சம் தீவிரமாக யோசித்துப் பாருங்கள். உங்களுடைய கடந்தகாலத் தோல்விகள் பலவும் ஏதோ ஒரு வெற்றியில் தான் முடிந்திருக்கும். தோல்வியடைந்த காதல் ஒரு அன்பான மனைவியைத் தந்திருக்கலாம். தோல்வியடைந்த வேலை இன்னொரு நல்ல வேலையைத் தந்திருக்கலாம். தோல்வியடைந்த தேர்வு தேவையான முக்கியமான ஒரு பட்டத்தைப் பெற உதவியிருக்கலாம்.

தோல்விகளோடு வாழ்க்கை முடிவடைவதில்லை, நாமாக முடித்துக் கொண்டாலொழிய.




பிறரிடம் அன்பாய் இருப்பது, புன்னகைப்பது போன்ற மனித இயல்புகளை விட்டு விடாதீர்கள். உங்கள் மனதை அமைதியாகவும், இளமையாகவும் வைத்திருக்க இவை உதவும். தினமும் உடற்பயிற்சி செய்யுங்கள். ஆரோக்கியமான உடல், ஆரோக்கியமான மனம் இரண்டுமே இலட்சியப் பயணத்தின் இரண்டு சக்கரங்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

வெற்றிகளின் கோப்பை நமது வாசலில் வந்து காத்திருப்பதில்லை. வெற்றிக் கோப்பைகளுக்கான ஓட்டத்தில் நம்மை இணைத்துக் கொள்வது மட்டுமே அதைப் பெறுவதற்கான ஒரே வழி.

இலட்சியங்களை நோக்கிய ஓட்டத்தில் நமக்குத் தேவை முயற்சி மட்டுமல்ல, தோல்வி கண்டு அஞ்சாத மனமும் தான்.

மனதில் பிறக்கட்டும் துணிச்சலின் ஊற்றுகள்
கண்களில் பறக்கட்டும் விடியலின் கீற்றுகள்.




அமெரிக்க ஜனாதிபது ரூஸ்வெல்ட் பற்றித் தெரிந்திருக்கும். அமெரிக்காவின் முப்பத்து இரண்டாவது ஜனாதிபதி.
பன்னிரண்டு ஆண்டு காலம் தொடர்ச்சியாக அமெரிக்க ஜனாதிபதியாய் இருந்த ஒரே நபர் ரூஸ்வெல்ட் தான்.

அமெரிக்காவின் மவுண்ட் ரஷ்மூரில் ஒரு பெரிய மலை இவருடைய தலையாக செதுக்கப்பட்டிருக்கிறது. அமெரிக்காவின் டைம் எனப்படும் பத்து பைசா நாணயத்தில் இருப்பதும் இவருடைய தலை தான்.

சரி. இதிலெல்லாம் வியப்பில்லை என்று வைத்துக் கொள்ளலாம்.

ஆனால் அவர் போலியோவினால் பாதிக்கப்பட்டு இடுப்புக்குக் கீழே செயலிழந்த நிலையில் இருந்தார் என்பது தான் நம்மை வியப்பின் உச்சியில் கொண்டு போய் நிறுத்துகிறது.

மன உறுதியும், வாழ்க்கையை பாசிடிவ் ஆக அணுகும் மனநிலையும் இருந்தால் வெற்றி என்பது எல்லோருக்கும் பொதுவானதே என்கிறது இவருடைய வாழ்க்கை.










## தன்னலமற்ற தயைக்கு தரமுயர்த்தவல்ல தித்திக்கும் தீ காதல்

காமம் உன்னுடைய இலக்கு குறித்த முழு வரைபடத்தையும் கொண்டுள்ளது. என்னைப் பொறுத்தவரை காமம் வெறும் காமம் அல்ல. எல்லாமும் காமம் தான் என்று ஓஷோ கூறுவது போன்ற அதி உன்னத நிலைக்கு காமத்தை கலையாக்கிய கலைஞன். தன் காதலைக் காதலித்துக் கொண்டு காலத்தை களித்திருந்த காதலன் பாரதியைக் காதலிக்காதிருந்திட ரசனைக் கூட்டில் போடப்பட்ட எவராலும் இயலுமோ?

எந்நேரமும் எங்கணும் காட்சியாகும் உருவாய் தன் காதலி யிருப்பதால் கண் போன்று கண்ணுக்குள்ளேயே இருக்கிறாள் எனக் கருதி நீ என் கண்/கண்ணம்மா என்று அழைத்தாரோ அந்தக் காதல் கிறுக்கன்.

மன்மத மலராளி வதைக்கப்பட்டவனாய் உள்ளத்தில் உறைந்த காதல் பேரலையை உடல் கரையில் நனைய விட துணிந்தவராய் தன்நிலை செப்பிட தமிழோடு விரல் கோக்கிறார்.

எப்பொழுதும் இரவோடு தனை இழந்து இயற்கையின் எச்சங்களில் காதலி மிச்சங்களைத் தேடித் தேடித் சுவைக்கும் பாரதியின் இன்பத் தீனிக்கு விருந்தாய் விரைந்தோடுகிறது அவர் கற்பனைத் தேவை.

இந்த நேரத்திலே மலை வாரத்திலே நதியோரத்திலே
உனைக் கூடி நின்றன்
வீரத் தமிழ்ச் சொல்லின் சாரத்திலே - மனம்
மிக்க மகிழ்ச்சி கொண்டாடி குழல்
பாரத்திலே இதழீரத்திலே முலை
யோரத்திலே அன்பு கூடி நெஞ்சம்
ஆரத்தழுவி அமர நிலை பெற்று
அதன் பயனை இன்று காண்பேன்"

நட்சத்திரங்கள் ஜொலித்திட கருமை வேண்டும். தன் காமத்துக் காதல் மினுமினுத்திட ஓர் இரவு வேண்டும் எனக் கருதி இந்த இரவு நேரத்திலே உன் வடிவழகை ஒப்புவிக்க வல்ல மலைகளின் வாரத்திலே அவ்வெழிலுக்கு அருகேயிருந்தாலே சிறப்பென சிரிப்பொலி வீசியோடும் நதியோரத்திலே உனை நான் சந்திது கூட வேண்டும்.

இந்த நிசியில் என் பசி தீர்க்க அப்படி வந்தால் நிச்சயமாய் தன் ஆச்சார வழக்கம் துறக்க துணிந்த வீரப்பெண்ணாய் தான் இருக்க வேண்டும். அங்கு நீ வந்து என்னோடு பேசிக் குலவும் போது வடியும் வீரத் தமிழ் சொற்களில் உள்ள மெல்லிய சரசக் கவிசாரத்தை, காதல் பாஷையை உன் த்வனியில் சொல்ல தமிழையும் உன் குரலையும் கேட்டு மனம் அளவிட முடியாத மிக்க மகிழ்ச்சியில் கொண்டாடியிருக்க வேண்டும். உள்ளத்தில் கரைபுரண்டோடிய உன்மத்த ஆனந்தத்தை உடல் வாய்க்காலில் மெல்ல மெல்ல வடியவிட நீ பேசிக் கொண்டிருக்கும் போதே உனையறியாது உன் வனப்பிற்கு முக்காடிட்டு முந்தியடிக்கும் உன் கனத்த குழல் பாரத்தை நான் சுமந்து, நுண்ணிய ஸ்பரிசத்தின் திண்ணிய சுகானுபவத்தை உனக்குப் பரிசளிக்க வேண்டும்.

திளைத்திருக்கும் அவ்வேளை இதழ்கள் ஈரமானதையறியும் போது இம்மையின் இன்பம் இதுவும் என்று மீண்டும் அறிமுகம் செய்ய வேண்டும். நமை இழந்த உயர்நிலை தழுவலில் பெண்மையின் இலக்கணத்திற்கே உரித்தான பவித்திர பதமாய் முலையின் புனிதமறிந்து அதன் ஓரத்திலே அன்பு சூட்ட வேண்டும் என்று ஆழ்ந்த ஒரு அற்புதமதைக் கொட்டுகிறார். அன்பு எனும் தன்மை உள்ளக்கமலத்தில் உறையும் உணர்வு. ஆக்கையின் ஆதிக்கத்தில் அன்பு அகலாது பிணைக்கப்பட வேண்டும் எனும் தத்துவத்திற்கு வித்திட்ட வித்தைக்காரன்டா பாரதி.

மானிடர்களுக்கு வீணாய் விரைந்து வந்திடும் ஆணவம், கர்வம் போன்ற உபயோகமற்ற யாவற்றையும் ஒரே பொறியில் இழக்க வைக்கக் கூடிய அணுசக்தியாய் இருப்பதே காமத்தின் சாரம். உடலுளம் ஒன்றிட இரண்டறக் கலந்திடும் மேம்பட்ட அந்த நிலை விண்ணகத்தோருணரும் தேவநிலை. உனை உடல், பொருள், ஆவியால் மெய்மறந்து அணைக்கும் ஆத்ம தழுவலில் அமர நிலையை மெய்யுணர்ந்து பெறுவேன். ஆதனால் கிடைக்கப்பெறும் பெரும் பயனாக உடல் நீத்த பின்பு என் புண்ணய பயனால் தேவலோகத்தில் அனுபவிக்கவல்ல தூய பரமானந்தத்தையும், சௌகர்யத் தையும் இன்றே நான் காண்பேன என்று, கலந்திடும் நிகழ்வை கடவுளோடிணை யும் தளத்திற்கு உயர்த்தியவர் தேவக் கவிஞன் பாரதி.




வெள்ளை நிலாவிங்கு வானத்தை மூடி
விரிந்து பொழிவது கண்டாய் - ஒளிக்
கொள்ளையிலே உனைக் கூடி முயங்கிக்
குறிப்பினிலே யொனடறு பட்டு நின்றன்
பிள்ளைக் கிளி மென் குதலையிலே மனம்
பின்ன மறச் செல்லவிட்டு அடி
தெள்ளிய ஞானப் பெருஞ் செல்வமே நினைச்
சேர விரும்பினன் கண்டாய்!

இன்னும் வேண்டும், வெள்ளை நிலவு வானத்தின் விலாசத்தை மூடி மறைக்கும் வண்ணடம் விரிநிது தன் வனப்பின் மொழியை பொழிவதை பார்த்தாயா?

அள்ளி வீசும் இந்த கொள்ளை நிலவொளியில் என் மீது நீ படர வேண்டும். ஆதி அந்தம் அறிவிற்கு எட்டிடா வகையில் எம் உணர்வதிர்வின் குறிப்பினை மட்டுமே ஒன்றுபட்டு புணர்ந்து மயங்கிக் கிடக்க வேண்டும்.

உச்சம் தொட்டு இச்சை தீர்த்த பச்சை கிளியாய் என்மீதுன் மூச்சுக்காற்றைப் புதைத்து தியானிக்கும் என்னவளே! உன் கொஞ்சிப் பேசும் மென்மொழியில் மனத்தைப் பின்னமற (வேறுவேறாகப் பிரிக்காமல்) அந்த உணர்விலிருந்து விடுபடாமல் செல்ல விட வேண்டும்.
தெளிந்த ஞானம் என்பதிலும் பிறிதோர் பெருஞ்செல்வம் இப்புவியிலில்லை. அவ்வாறு உனை உணர்கிறேன்.
உன்னோடு சேர்வதையே நான் விரும்புகிறேன் என மொழி விளையாட்டில் கட்டிப் போடுகிறார்.



# யேர்மனி – கம் சித்தி விநாயகர் ஆலயத் தேர்த் திருவிழா 07.08.2016












## நிகழ்வின் நிழல்கள்






18ம் பக்க தொடர்ச்சி....

## நின்னைச் சரணடைந்தேன்

வட்டங்களிட்டு குளமகலாத
மணிப் பெருந் தெப்பத்தைப் போலலே நழனை
விட்டு விட்டுப் பல லீலைகள் செய்து நின்
மேனி தனை விடலின்றி அடி
எட்டுத் திசையும் ஒளிர்ந்திடுங் காலை
இரவியைப் போன்ற முகத்தாய் – முத்தம்
இட்டுப் பல முத்தம் இட்டுப்பல முத்தம்
இட்டுணைச் சேர்ந்திட வந்தேன்

எனை ஆளவந்த என்னவளே உனையாழமறிய அழைத்துச் செல்ல குளத்தினிடை மிதங்கும் தெப்பம் அவ்விடத்திலேயே வட்டமிட்டு வடி வலைகளை புனலாடும் புலனெங்கும் விட்டு விட்டுப் பற்பல விளை யாட்டுக்களை செய்திருக்க வேண்டும். சிந்தை செயல் ஒன்றிணைந்து, மூவுலகை மறந்து துறந்த முக்திச் செயற்பாட்டில் இரண்டறக் கலந்திருந்த காலையின் அறிமுகத்தை சூரியன் பட்டு எட்டுத் திசையும் ஒளிர்வது போல் விசாலமாய் துளிரும் உன் முகத்தில் காண்கிறேன். இரவு முழுதும் இணைந்த இயல்பிலிருந்து அகல இயலாதவனாய் இன்னமும் கூறுகிறார் பாரதி....

முத்தம் இட்டுப் பல முத்தம் இட்டுப் - பல
முத்தம் இட்டுனைச் சேர்நதிட வந்தேன்!


உடலுக்கு அடிமையான காமம் உயிர் வதைக்கும்.உள்ளத்திற்கு அடிமையான காமம் உயர்வடையும்!!!






8ம் பக்கத் தொடர்ச்சி...

## அன்புள்ள மகனுக்கு, அப்பா எழுதுவது.





இன்று அந்த விசிறியும் இல்லை. அந்தக் கைகளும் இல்லை. மாநகரத்தில் வாழும் நீ, வாழ்க்கை முழுக்க கோடைக் காலங்களையும் வெவ்வேறு வடிவங்களில் தேள்களையும் சந்திக்க வேண்டி இருக்கும். எத்தனை காலம்தான் உன் தகப்பன் உன் அருகில் அமர்ந்து விசிறிக்கொண்டு இருப்பான்? உனக்கான காற்றை நீயே உருவாக்கப் பழகு.

வயதில் பேராற்றங்கரை உன்னையும் வாலிபத்தில் நிறுத்தும். சிறகு முளைத்த தேவதைகள் என் கனவுகளை ஆசிர்வதிப்பார்கள். பெண் உடல் புதிராகும். உன் உடல் எதிராகும். என் தகப்பன் என்னிடம் இருந்து ஒளித்துவைத்த, ரகசியங்கள் அடங்கிய பெட்டியின் சாவியை நான் தேட முற்பட்டதைப்போல், நீயும் தேடத் தொடங்குவாய். பத்திரமாகவும் பக்குவமாகவும் இருக்க வேண்டிய பருவம் அது. உனக்குத் தெரியாதது இல்லை. பார்த்து நடந்துகொள்.

நிறையப் பயணப்படு. பயணங்களின் ஜன்னல்களே முதுகுக்குப் பின்னாலும் இரண்டு கண்களைத் திறந்துவைக்கின்றன. புத்தகங்களை நேசி. ஒரு புத்தகத்தைத் தொடுகிறபோது நீ ஓர் அனுபவத்தைத் தொடுவாய். உன் பாட்டனும் தகப்பனும் புத்தகங்களின் காட்டில் தொலைந்தவர்கள். உன் உதிரத்திலும் அந்தக் காகித நதி ஓடிக் கொண்டே இருக்கட்டும்.

கிடைத்த வேலையைவிட, பிடித்த வேலையைச் செய். இனிய இல்லறம் தொடங்கு. யாராவது கேட்டால் கடன் வாங்கியாவது உதவி செய். அதில் கிடைக்கும் ஆனந்தம் அலாதியானது.
உறவுகளிடம் நெருங்கியும் இரு. விலகியும் இரு. இந்த மண்ணில் எல்லா உறவுகளையும் விட மேன்மையானது நட்பு மட்டுமே. நல்ல நண்பர்களைச் சேர்த்துக்கொள். உன் வாழ்க்கை நேராகும்.
இவை எல்லாம் என் தகப்பன் எனக்குச் சொல்லாமல் சொன்னவை. நான் உனக்கு சொல்ல நினைத்துச் சொல்பவை.
என் சந்தோஷமே...! நீ பிறந்த பிறகுதான் என் தகப்பனின் அன்பையும் அருமையையும் நான் அடிக்கடி உணர்கிறேன். நாளை உனக்கொரு மகன் பிறக்கையில், என் அன்பையும் நீ உணர்வாய்.

நாளைக்கும் நாளை நீ உன் பேரன், பேத்திகளுடன் ஏதோ ஒரு ஊரில் கொஞ்சிப் பேசி விளையாடிக்கொண்டு இருக்கையில் என் ஞாபகம் வந்தால், இந்தக் கடிதத்தை மீண்டும் எடுத்துப் பார். உன் கண்களில் இருந்து உதிரும் கண்ணீர்த் துளியில் வாழ்ந்து கொண்டு இருப்பேன் நான்.
இப்படிக்கு,
உன் அன்பு அப்பா.



## 2ம் ஆண்டு நினைவு அஞ்சலி

**அமரர் இ.செல்வராஜா**

மண்ணில் 17.07.1950
விண்ணில் 15.09.2014

குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் யேர்மனி டோட்மூண்ட் நகரை வதிவிடமாகவும் கொண்ட அமரர் இ.செல்வராஜா அவர்களின் 2ம் ஆண்டு நினைவு அஞ்சலி

சிரித்த முகமும் பரந்த அன்பும் பார்ப்பர் எவரையும் பரவசப்படுத்தும். நம்பமுடியாத சிலவற்றில் உன் மரணமும் அடக்கம். உன் ஆத்மா ஆண்டவனுடன் கலந்து ஆறுதல் பெற்று இருக்கும் என்பது திண்ணம்.

**என்றும் நீங்காத நினைவுகளுடன்**

அன்பு மனைவி திருமதி சாந்தி செல்வராஜா, மற்றும் உற்றார் உறவினர்கள், நண்பர்கள்




16 வருட அனுபவம் மிக்க சேவையாளர்

உங்கள் ஆசையை
நிறைவு செய்ய
இதுவே தருணம்
விரையுங்கள்

Büro für Deutsche Vermögensberatung
Ram Mohan
Westwall 117
47798 Krefeld

Ram.Mohan@dvag.de
www.dvag.de/Ram.Mohan



# பெற்றோர் பிள்ளைகளின் திருமணத்தின் பின் அவர்களுடன் இணைந்து வாழ்தல் சிறப்பைத் தருமா?

கௌசி



புலம்பெயர்வில் பெற்றோர் தமது பிள்ளைகளின் திருமணத்தின் பின் அவர்களுடன் இணைந்து வாழ்தல் சிறப்பைத் தருமா?

புலம்பெயர் வாழ்வில் பெற்றோர் பிள்ளைகளின் திருமணத்தின் பின் அவர்களுடன் சேர்ந்து வாழ்தல் சிறப்பைத் தருமா சிரமங்களைத் தருமா என்னும் கேள்விக்குரிய முக்கிய கதாபாத்திரங்கள் பெற்றோர்களே. பெற்றோர்கள் ஒவ்வொருவருடைய அநுபவங்களுமே, பிள்ளைகள் எடுக்கும் தீர்மானங்களிற்கு வழிகாட்டியாக அமைகின்றன.

ஒரு உயிர் உலகத்தில் பிறப்பெடுக்கும் முன் ஒரு வீட்டில் வாடகை செலுத்தாமல் குடியிருந்ததே! அந்த வீடு பூமியைத் தாங்கும் ஓஸோன் படைபோல் தன்குழந்தையைத் தாங்கிக் கொண்டு, பத்தியம் காத்துப் பகல் இரவாய்க் கண்விழித்து, பிள்ளையைப் பெற்றெடுத்ததே அந்தத் தாயுடன் சேர்ந்து வாழ்தல் சிறப்பைத் தருமா சிரமத்தைத் தருமா? சிந்தித்துப் பார்க்க வேண்டிய கடமை ஒவ்வொரு பிள்ளைக்கும் உண்டு.

"பிள்ளைக்குத் தந்தை ஒருவன் - நம்
எல்லோருக்கும் தந்தை இறைவன் - நீ
ஒருவனை நம்பி வந்தாயோ இல்லை
இறைவனை நம்பி வந்தாயோ"

என்று கண்ணதாசன் பாடி வைத்தார். அந்தத் தந்தையைத் தான் தெரிந்தோ தெரியாமலோ நம்பி ஒருவன் இந்த பூமிக்கு வந்து பிறக்கின்றான். திருமண வயது வரை ஒரு பிள்ளையை உருவாக்கப் பெற்றோர் செலவழிக்கும் நேரம், பணம், செலவு, பிரயாணம் போன்றவைக்கு எத்தனை கோடிப் பணத்தை அள்ளிக் கொடுத்தாலும் பிள்ளைகளால் மீளச் செலுத்த முடியாது. இந்தப் பெற்றோர் பிள்ளைகளுக்குச் சிரமமாக இருப்பார்கள் என்று பிள்ளைகள் நினைப்பது தவறாகும்

நவீன உலகிலே மேலைநாட்டு வாழ்விலே ஒரு வருடத்தில் மூன்றில் ஒரு திருமணம் விவாகரத்தில் முடிகிறது. இந்தத் திருமண முறிவுக்கு அடிப்படைக் காரணம் தனிக் குடித்தனமாகவே இருக்கின்றது. உலகரீதியாக கூட்டுக் குடும்ப வாழ்க்கை அருகியது விவாகரத்துக்கு முக்கிய காரணம் என உளவியலாளர்கள் கூறுகின்றார்கள். இளந்தம்பதிகள் வாழும் வீட்டில் பெற்றோர் சேர்ந்து வாழ்ந்தால், பிள்ளைகளுக்கு அறிவுரைகள், புத்திமதிகள் கூறி அவர்களை நல்ல வழியில் ஒற்றுமையாக வாழவிடுவார்கள். அநுபவம் என்பதே தலைசிறந்த ஆசான். தாம் பெற்ற அநுபவங்கள், தமது பிள்ளைகளை நல்வழிப்படுத்த பெற்றோருக்கு உதவுகின்றது. அவசரத்தில் எடுக்கின்ற முடிவுகளை ஆறுதலாக எடுத்துக் கூறும் போது எடுத்த முடிவு பைத்தியக்காரத்தனம் போல் தோன்றும். அவசர உலகில் நின்று நிதானமாகச் சிந்திக்க இளந்தலைமுறை விரும்புவதில்லை.

கணவன் மனைவிக்கிடையே ஏற்படும் சண்டை தீர்க்கப்பட வேண்டியதே தவிர தொடரக் கூடாது. இவ்வாறான சந்தர்ப்பங்களில் பெரியோர் புத்திமதிகள் சமாதானத்துக்கு வழிவகுக்கும்.

சண்டையானது வளர்ந்து வர பெற்றோர் இடந்தர மாட்டார்கள். குடும்ப வாழ்வின் சக்தி, வலிமை பற்றி இளையவர்களுக்குத் தெரியாது. அன்பை அறியாது பணத்தை மட்டும் குறியாகக் கொண்டு அவர்கள் வாழ்கின்றார்கள். இவர்களுக்குக் குடும்பத்தைப் பாதுகாக்கும் பெற்றோர் சேர்ந்து வாழ்ந்தால், சுகமாக இருக்கும் சுமையாக இருக்க மாட்டாது. ஒரு நாட்டின் அரசியலுக்கு ஆலோசகர் தேவை போல் ஒரு வீட்டின் அரசியலுக்கும் ஆலோசகர் தேவை அல்லவா? அது ஏன் உரிமையும் பாசமும் உள்ள பெற்றோர்களாக இருக்கக் கூடாது. ஒவ்வொரு குடும்பமுமே ஒரு நாடு. அந்த நாடு சீரழிய அந்த நாட்டிலுள்ள குடும்பங்கள் காரணமாக இருத்தல் பெரிய தவறாகும். நான் சிறுமியாக இருந்தேன் எனக்கு விளையாட்டு பொம்மைகளில் அநுபவம் ஏற்பட்டது. நான் பெண்ணாக வளர்ந்தேன். பெண்மையில் அநுபவம் ஏற்பட்டது. நான் தாயானேன், தாய்மையில் அநுபவம் ஏற்பட்டது. நான் பாட்டியானேன் எனக்கு உலக அநுபவம் அனைத்தும் வந்தது. அநுபவம் தருகின்ற புத்தியை அறிவு தருவதில்லை. ஒரு பாட்டி தான் பெற்ற அநுபவப் பாடத்தைத் தன் பிள்ளைக்குப் போதிப்பாள். பிள்ளையின் பிள்ளைக்கும் போதிப்பாள். இதனால், அப்பாட்டி தலைசிறந்த ஒரு சமுதாயத்தை உருவாக்குவாள்.

எனவே சிறந்த ஒரு சமுதாயத்தை உருவாக்கவும், அநுபவப்பாடம் கற்ற பெற்றோர் சேர்ந்திருப்பது சிறப்பைத் தரும். இதனையே ஒரு முதியவர் இறந்தால் ஒரு பெரிய நூலகமே எரிகிறது என்று ஒரு ஆபிரிக்கநாட்டு முதுமொழி கூறுகின்றது.

இத்துடன் 120க்கும் அதிகமான நாடுகள் கலந்து கொண்ட ஐக்கியநாடுகள் வயோதிபப்பேரவை முதியவரை சுதந்திரமான இயல்பான குடும்ப சூழலில் வாழவிடுதல் சமூகநீதி எனத்தீர்மானித்தார்கள்.
ஒருமனிதன் தனித்தீவல்ல. அவன் சமுதாயத்துடனே இணைந்து வாழ வேண்டும். ஒரு சமுதாயத்துடன் இணைந்து வாழாத மனிதன் ஒரு மனநோயாளி போலாவான். அவன் சமூகத்துடன் இணைந்து வாழ வேண்டுமானால், குடும்பத்துடன் சேர்ந்து வாழவேண்டும். சமூகநெறி விழுமியங்களைச் சொல்லிக் கொடுக்கும்போதே சமூகத்தடன் சேர்ந்து வாழச் இளையவர்களும் பழகுகின்றார்கள்.





லண்டனில் தங்க இடமும், இலங்கை உணவும், கொண்ட இனிய நம்மவர் விடுதி!

**Rising Sun Hotel & Restaurant**

அறைகள் யாவும் நவீன வசதிகளுடன் அமைந்துள்ளது.
இவற்றுடன் காலை ,மதிய, இரவு உணவு வசதிகளும் சிறப்பாக உண்டு

En-Suite Rooms ,Restaurant & Bar facilities available
to make your stay comfortable.

Free Wi-Fi & Car Park

admin@risingsunhotels.com

138, Greenford Road
Sudbury Hill
Harrow
Middlesex HA1 3QL
U.K

Tel: +44 208 4222 575

Sudbury Hill Station இல் இருந்து இரு நிமிட நடைத்தூரத்தில் !
Heathrow Airport இல் இருந்து 30 நிடங்களில் எம்மை வந்தடைய நேரடி Train வசதி உண்டு



இதைவிடப் பெற்றோர் பிள்ளைகளுடன் சேர்ந்து வாழும் போது அவர்கள் பிள்ளைகளின் பொருளாதாரப் பெருக்கம், பிள்ளை வளர்ப்பு போன்றவற்றிற்கு ஒத்தாசையாக இருப்பார்கள். பிள்ளைகளுக்கு நோய் ஏற்படும் போது பெற்றோர் வீட்டுக்கடமைகளைச் செய்வார்கள். மருத்துவர் படுக்கையில் இருக்க வேண்டுமென்று சொன்னால், தனிக்குடித்தனமாக வாழும் இளையவர்கள் படுக்கையில் எப்படி இருக்க முடியும்?

இந்த அநுபவம் எல்லோருக்கும் ஏற்பட்டிருக்கும். எனக்குத் தெரிந்த குடும்பம் ஒன்றில் அம்மா பிள்ளையைத் தொட்டிலில் போட்டுவிட்டு தொலை காட்சியையும் போட்டு விட்டுக் கார் பழகப் போவார். பிள்ளைகளோ தொலைக்காட்சியுடன் வளரும். இதைவிட கணவனும் மனைவியும் வேலைக்குப் போகும் குடும்பத்தில், பிள்ளையானது, அப்பா வேலைக்குப் போகும்போது அம்மாவிடம் எறியப்படும். அம்மா வேலைக்குப் போகும்போது அப்பாவிடம் எறியப்படும். இப்போது பந்தாகப் பிள்ளை ஒவ்வொருவரிடமும் எறியப்படுகின்றது.
இவ்வாறு ஆதரவு குறைந்து வாழும்போது ஆரோக்கியமான மனநிலையுடன் பிள்ளை எவ்வாறு வளர முடியும்! எனவே அன்புடனும் ஆதரவுடனும் அரவணைப்புடனும் வளரும் பிள்ளையே எதிர்காலத்தில் ஆளுமையுள்ள பிள்ளையாக உருவெடுக்க முடியும். ரேப்ரெகோடரில் தாலாட்டுப் பாட்டுக் கேட்டு வளரும் பிள்ளைக்கும் பாட்டி தாலாட்டுப் பாட்டுக் கேட்டு வளரும் பிள்ளைக்குமிடையே பாரிய வேறுபாடு இருக்கின்றது.

புரட்டஸ்தாந்து கத்தோலிக்க மதத்தவரிடையே ஆராய்ச்சி நடாத்திய எமில்தூர்க்கேம் என்பவர் குடும்ப ஆதரவு குறைவாகவுள்ள புரட்டஸ்தாந்து மதத்தவரிடம் தற்கொலை அதிகமாகவும், குடும்ப ஆதரவு மிகுதியாகவுள்ள கத்தோலிக்க மதத்தவரிடையே தற்கொலை குறைவாகவும் உள்ளதாகக் கண்டறிந்து சமூக ஒருமைப்பாடு என்னும் ஒரு கோட்பாட்டை உருவாக்கியுள்ளார்.

எனவே குடும்ப அமைப்புச் சரியான முறையில் செயற்படாது விட்டால் மனித நாகரிகத்தின் பிழைப்பே கேள்விக் குறியாகிவிடும்.

மேற்குலக நாடுகளில் இளங்குற்றவாளிகளின் புள்ளிவிபரங்களைக் கணிப்பிட்ட போது 70 வீத அமெரிக்கக் குற்றவாளிகள் பெற்றோரின் சரியான பராமரிப்பும் ஆலோசனையும் இல்லாமல் வளர்க்கப்பட்டவர்கள் எனவும் 75 வீத ஜேர்மனிய இளங்குற்றவாளிகள் தாய் ஒன்று தகப்பன் இரண்டு எனவும் தாய் இரண்டு தகப்பன் ஒன்று எனவும் வளர்ந்த பிள்ளைகளே எனக் கண்டறிந்தார்கள்.

இந்தத் திருமண முறிவெல்லாம் ஏற்படுவதற்குக் காரணம், முறையான அறிவுரைகள் பெற்றோர்கள் அருகேயிருந்து வழங்காதமையே தான். எனவே இளங்குற்றவாளிகளைத் தவிர்ப்பதற்கும் பெற்றோர் சேர்ந்து வாழ்தல் அவசியமாகப்படுகிறது.

உழைப்பால் மனிதன் உயரவேண்டுமானால் உதவிக்கு ஆள் வேண்டும். அதற்கு எடுத்துக்காட்டு இந்த ஐரோப்பிய ஒன்றியம். எனவே உழைப்பால் உயர பெற்றோரைக்கூடவே வைத்திருப்பது சாலச்சிறந்தது. உலகத்திலேயே ஒருவனின் வளர்ச்சி கண்டு பொறாமைப்படாது பெருமைப்படுபவர் பெற்றோர் மட்டுமே. எனவேதான் “ஈன்ற பொழுதில் பெருதுவக்கும் தன்மகனைச் சான்றோன் எனக்கேட்டதாய்” என்று வள்ளுவப் பெருந்தகை கூறினார்
இரண்டு வாயுக்கள் ஒன்றிணைந்தால்த்தான் தண்ணீர் கிடைக்கும் நமது உடம்பில் பஞ்சபூதங்கள் ஒவ்வொன்றும் சரியான சதவீதத்தில் இணைந்து போனால்த்தான் உடல்நிலை சரியாகும். எனவே மழலை தொட்டு முதியவர்வரை இன்பம் அநுபவிக்க ஒரு வீட்டில் கண்டு கேட்டு உண்டு உற்றறியும் உறவு கடவுள் நமக்குக் கொடுத்த பரிசு. அதை ஏற்றுக்கொள்வோம்.
பெற்றோருடன் சேர்ந்து வாழ்வதா? இல்லையா? என்று இளைய தலைமுறையே தீர்மானம் எடுக்க வேண்டியவர்கள். ஆனால், பெற்றோர் பெறுமதிமிக்கவர்கள்.

அவர்களுடன் சேர்ந்து வாழ்தல் சிறப்பைத்தரும் என்பது தவிர்க்க முடியாத உண்மையாகும்.



அவுஸ்திரேலியாவில் இருந்து செயற்படும் அக்கினிக்குஞ்சு இணையத்தம் நடத்தும்! உலகளாவிய

# அமரர் எஸ்.பொ.ஞாபகார்த்த அனைத்துலக குறுநாவல் போட்டி 2016



அவுஸ்திரேலியாவில் இருந்து செயற்படும் அக்கினிக்குஞ்சு (www. akkinikkunchu. com) இணையத்தளத்தினால் மறைந்த மாபெரும் எழுத்தாளர் எஸ்.பொ. அவர்களின் இரண்டாவது நினைவினையொட்டி அனைத் துலக ரீதியாக குறுநாவல் போட்டி யொன்று நடாத்தப்பட உள்ளது.

குறுநாவல் யுனிகோட் (Unicode) எழுத் துருவில் - மின்னஞ்சல் இணைப்பாக Microsoft Word வடிவத்தில் அனுப்பப்படல் வேண்டும்.

மின்னஞ்சலின் subject இல் "எஸ்.பொ நினைவுக் குறுநாவல் போட்டி- 2016" எனக் குறிப்பிட்டு,

அஞ்சலின் உட்பகுதியில் குறுநாவலின் தலைப்பு, போட்டியாளரின் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் தரப்படல் வேண்டும். போட்டியாளரின் புகைப்படம், மற்றும் சிறுகுறிப்பு இணைத்தல் வேண்டும். குறுநாவல் 4,000 வார்த்தைகளுக்குக் குறையாமலும் 8,000 வார்த்தைகளுக்குக் கூடாமலும் அமைதல் வேண்டும். ஒருவர் ஒரேயொரு குறுநாவலை மட்டுமே அனுப்பிவைக்க முடியும்.

முதலாம் பரிசு - 400 அவுஸ்திரேலிய வெள்ளிகள்
இரண்டாம் பரிசு- 350 அவுஸ்திரேலிய வெள்ளிகள்
மூன்றாம் பரிசு - 250 அவுஸ்திரேலிய வெள்ளிகள்

சிறப்புப் பரிசு - தேர்வு பெறும் ஐந்து படைப்புகள் ஒவ்வொன்றிற்கும் 150 அவுஸ்திரேலிய வெள்ளிகள்.

முடிவுத்திகதி: **30.09.2016**

போட்டி முடிவுகள் 2016 கார்த்திகை மாதம் அக்கினிக்குஞ்சு இணையத்தளத்தில் வெளியிடப்படும்.

அனுப்ப வேண்டிய மின்னஞ்சல் முகவரி:- real24news@hotmail.com

3ம் பக்கத் தொடர்ச்சி...

## தமிழ் பெண் விமானி அர்ச்சனா



வயலின், புல்லாங்குழல் போன்ற வாத்தியங்களை டேனிஸ் இசைக்கல்லூரியில் கற்றுக்கொண்டார்.

விஜய் ரீவி லண்டன் அரேனாவில் நடத்திய மாபெரும் சூப்பர் சிங்கர் பாடல் நிகழ்ச்சியில் டென்மார்க்கில் இருந்து முக்கிய பாடகியாக பாடியுள்ளார், இதுபோல மலேசியாவில் யுவன் ஷங்கர்ராஜா இசை நிகழ்விலும் பாடியுள்ளார், இவருடைய பாடல்கள் பல இணையத்தளங்களில் வெளியாகியுள்ளன.



பாடகி அர்ச்சனா

துணைக்கு யாரும் இன்றி தனி யொரு பெண்ணாக உலகின் பல நாடுகளுக்கு சென்று கற்று வந்த அனுபவங்கள் மிகவும் புதுமையானவை, இவற்றுக் கெல்லாம் துணிச்சலே அடிப்படைத் தகுதியாகும் என்கிறார்.

வாய்ப்புக்கள் நம்மை தேடி வராது, நாமே அதை தேடிச் செல்ல வேண்டும்.. தமிழ் பெண்களின் கைகளிலும் வானம் வசப்படும் என்கிறார்.

வாழ்வை சரியாக திட்டமிட்டு முன் நகர்த்தினால் உலகில் எங்கு வாழ்ந்தாலும் சாதனை படைக்கலாம் என்பதற்கு இவருடைய முயற்சியும் ஓர் நல்ல உதாரணமாகும்.

**ஏலையா முருகதாசன்**




### ஆபத்து

வகுப்பறைக்குள் நுழைந்ததும் பெரும் ஆச்சரியம். பார்ப்பதற்கு பெரும்பாலான மாணவர்கள் ஒரே மாதிரியாகவே இருந்தார்கள். பல்லினக் கலாசார நாடுகளில், வருங்காலங்களில் இது பெரும் சவாலாகப் போகிறது.

அருகே இருக்கும் சீனப்பெண்,ஒரு முறை விரிவுரையைக் கேட்டாலோ, புத்தகத்தைப் படித்தாலோ இலகுவாகக் கிரகித்துக் கொள்கின்றாள். அவள்தான் வகுப்பில் முதன்மையானவள்.

இது எப்படி? அவள் சொல்கின்றாள்:

என்னுடைய பரம்பரையில் அறிவாளிகளே கிடையாது. நான் ரெஸ்ற் ரியூப் பெண்.




திருக்கணித ஜோதிடம்

ஜாதகக் குறிப்பு எழுதுதல்
விவாகப் பொருத்த நிச்சயம்
சுபமுகூர்த்தம் வைத்தல்
ஜோதிட ஆலோசனைகள்
திருமணம்
பூப்புனித நீராட்டு விழா
புண்ணியாகவாசனம்
சிரார்த்தம்
கடைத்திறப்பு விழா
கோயிற்கிரியைகள்
கிரகசாந்தி





சிவஸ்ரீ க.சபாநாதகுருக்கள்
Kreuzeskirchstr. 40
45127 Essen
Tel: 0201-652450

09 ம் பக்கத் தொடர்ச்சி

## முதுமையில் காது மந்தமாதல்





**காது மந்தமானவர்களுடன் பேசும் போது நீங்கள் அவதானிக்க வேண்டியவை.**

முகத்தை வேறு பக்கம் பார்த்துக் கொண்டு பேசாதீர்கள். அவர்களுக்கு உங்கள் முகம் தெளிவாகத் தெரியும் படியான ,இடத்தில் ,இருந்து பேசுங்கள்.

குரலை உயர்த்திப் பேசாதீர்கள். சாதாரண குரலில் பேசுங்கள்.விரைவாகப் பேசாதீர்கள். ஆறுதலாகவும் தெளிவாகவும் பேசுங்கள்.

உங்கள் உதடுகள் வாசிக்கப்படக் கூடியவாறு பேசுங்கள்.

நீங்கள் பேசுவது அவருக்குப் புரியாவிட்டால் குரலை உயர்த்தி மீண்டும் மீண்டும் அதையே சொல்வதை விடுத்து வேறு சொற்களால் சொல்லுங்கள்.

கூட்டமான ,இடங்களில் வைத்துப் பேசாதீர்கள். ஒதுக்குப் புறமாக சத்தம் சந்தடி குறைந்த ,இடத்திற்கு கூட்டிச் சென்று உரையாடுங்கள்.

காது கேட்கும் கருவி உபயோகிப்பவராயின் அது சரியாக வேலை செய்கிறதா என்பதையும், உரிய ,இடத்தில் சரியாகப் பொருத்தப் பட்டிருக்கிறதா என்பதையும் உறுதி செய்து கொள்ளுங்கள்.

முகம், கண்கள், கைகள் ஆகியவற்றை பயன்படுத்தி சைகை மொழிகளுடன் பேசுங்கள்.

உங்கள் பேச்சைப் புரிந்து கொள்ள முயற்சித்து அது முடியாததால் அவர் சோர்ந்து விட்டதை அவதானித்தால் உங்கள் உரையாடலை வேறு ஒரு தருணத்திற்கு ஒத்தி வையுங்கள்.

வேறு காரணங்கள்

ஆயினும் மூப்படைதல் மட்டுமே காது கேளாமைக்கு ஒரே காரணம் என்றும் சொல்லிவிட முடியாது.

தொழில் ரீதியாகவோ (உதா-இயந்திர ஓசைகள்), பொது வாழ்வின் போதோ கடுமையான ஒலிகளுக்கு நீண்ட காலம் முகங் கொடுக்க நேர்வது, செவிடாவதைத் துரிதப்படுத்தக் கூடும்.

பல வகை மருந்துகள், காதுக் குடுமி, பரம்பரையாக விரைவில் காது மந்தமாதல், நடுக்காது நோய்கள் போன்றவையும் காரணமாகலாம் என்பதால் நீங்களாக முடிவெடுக்காமல் வைத்திய ஆலோசனை பெறுவது நல்லது.

நன்றி முருகானந்தன்கிளினிக்


உங்கள் தாய் மொழியில்....
HK Hammacher
வாகனச் சாரதி பயிற்சி நிலையம்
ஆங்கிலம், யேர்மன், பிரஞ், துருக்கி மொழிகளில் வகுப்புக்கள் உண்டு. பரீட்சைக்கு வரக்கூடிய வினாக்கள், கார் மற்றும் மோட்டோசைக்கிளிற்கும் சிறப்பாகத் தெரிவுசெய்துகற்பிக்கப்படும்.
தமிழில் தொடர்புகளுக்கு: 0172 57 35 454
HK Hammacher
Schleswiger Str .5
44145 Dortmund
0231 81 55 94
0173 56 46 651
MPU ASF ASP இவர்களுக்கான சிறப்பு வகுப்புக்களும் உண்டு!

Nimal HD Film Style Cinematography
nimalvideo@gmail.com
Videography | Photography | Graphic Designing
Video Editing | Photo Album Making
3D Logo Creating | 3D Logo Annimation
Web Development | Add film | Visual fx
Event entertainment
தொடர்புகளுக்கு: கபிலன்
Tel: 0152 33 83 29 55
01776 794 261
உங்கள் இல்லத்தில் நிகழும் மங்கல நிகழ்வுகள் கலை விழாக்கள மனதோடு நிற்க ஒளிப்பதிவு செய்து தரப்படும்! 45 நாட்களில் கிடைக்கும்!

Adhaven Beauty Palar
E-mail: b.pirathini@gmail.com
Eyebrow threading
புருவம் திருத்தம்செய்தல்
Bridal make up
மணப்பெண் அலங்காரம்
Facials
முகப்பொலிவு
Hairstyle
சிகை அலங்காரம்
pimples threadment
முகப்பருசிகிட்சை
சேலை கட்டழுக்கப்படும்
பூமாலை கட்டிக் கொடுக்கப்படும்
Aleo vera Facial 25Euro
Gold Facial 34Euro
Saffron Facial 34Euro
Chat Conversation End
Tel: 0152 041 24 756
Tel. 0176 72787821
0234 3258759
புதிய முகவரி: 1.OG
Brückstr.20-26
44135 Dortmund

16 வது ஆண்டு நிறைவான சேவை
Kaneen Electronics
Internet-sat, Receiver,Camera-Alam கருவிகள் மலிவு விலையில் பெற்று பயனடையுங்கள்
சகல Alarmanlage, Überwachung Kamera,Sat-Tv, IP-TV, Internet, பொருத்துதல், பழுதுபார்த்தல் சகல வேலைகளுக்கும். 2016 Januarry; புதிய சட்டத்திற்கமைய உங்கள் வீடுகள், வியாபார ஸ்தாபனங்களுக்கு தீ அபாய அறிவிப்பு Alarm கருவிகளை சட்டபூர்வமாக அனுமதி பெற்றவர்கள் மூலம் பொருத்துவதற்கும், உங்கள் வீடுகளில் நடைபெறும் சகல மங்கள நிகழ்வுகளையும் மிகத்துல்லியமான தொழில்நுட்பமுறையில் Video ஒளிப்பதிவு செய்வதற்கும், Sattelte மூலம் நேரடி ஒளிபரப்புச் செய்வதற்கும் இன்றே நாடுங்கள்
Tel: 02053 423 740 Fax: 2053 423 741 -Mobil: 0172 2931266
info@ kaneenelectronics.de
www.kaneenelectronics.de
Schevenhoferweg-24
42111 Wuppertal

A.tu.Z Dolmetscher - und Übersetzungsdienst
Für alle weltsprachen
மொழிபெயர்ப்புச் சேவை!
V.Ramakrishnan
Tel:0201 977 4957
Mobile 0176 28 44 85 89
0152 11 98 9603
Fax:0201 24 82 888
உங்கள் சகல பத்திரங்களையும் தமிழ்,ஆங்கிலம் பிரஞ் மற்றும் உலகமொழிகளில் இருந்து யேர்மன் மொழிக்கு மொழிபெயர்பதற்கும் யேர்மன் மொழியில் இருந்து நீங்கள் விரும்பும் மொழிக்கு மொழிபெயர்ப்பதற்கும் நீதிமன்றத்தில் சத்தியபிரமாணம் ( allgemein Vereidigte) மற்றும் நீதிமன்றத்தால் அங்கீகாரம் (Ermächtigte)அளிக்கப்பட்ட மொழிபெயர்ப்பாளர்களால் குறைந்த செலவில் துரிதகதியில் மொழிபெயர்ப்பதற்கும் நாடவேண்டிய இடம். Lise-Meitner-Str.20
45144 Essen
e.mail:atuzuebersetzung@hotmail.com

ஓம் சிவசக்தி ஜோதிட நிலையம்
From KERALA
IS NOW IN DORTMUND - GERMANY
FACE READING 100%
Solutions within 3 Days 100%
பத்திரகாளி அம்மன் பூஜாரி
பண்டித் காளிதாஸ்
குடும்பப்பிரச்சினைகள்,கணவன் மனைவி உறவு, உடல்நிலை வேலை குழந்தைப்பாக்கியம் திருமணம் பணம் காதல் பிரச்சினைகள் ,படிப்பு, வியாபாரம், உங்களுக்கு ஏற்ற அதிட்ட எண்கள், மற்றும் பலபிரச்சினைகளுக்கும் தீர்வுகாணலாம்.
உங்கள் முகம்,கைரேகை இவற்றைவைத்து உங்கள் எதிர்காலம் துல்லியமாகக் கூறப்படும்
ஆங்கிலம், தமிழ், கிந்தி, ஆகியமொழிகளில் பேசலாம்
வாரத்தில் 7 நாட்களும் காலை 10:00 முதல் மாலை 8:00 மணி வரை
+49(0)15213504803
+49(0)15145849222
Rheinischestrasse 80
44137 - Dortmund - Germany




# கிரகப் போர்

**காசியரின் பேரன்**

படுக்கையறைக்குள் நுழைந்த பரமசாமியும் சுந்தரியும் திகைத்துப் போய் நின்றதற்குக் காரணம் பூமியில் அவர்களின் படுக்கையறை போல இருந்ததேயாகும். பூமியைவிட்டு பலவாயிரம் கோடி கிலோமீற்றருக்கு அப்பால் பிரபஞ்சத்தில் மிதக்கும் தளத்தில் வீடுகள் நிறைய இருப்பதும், அந்த வீடுகளில் ஒரு வீட்டிலேதான் அவர்கள் ஓய்வு எடுப்பதற்கும் நித்திரை கொள்வதற்குமாக ஒரு அறையடியில் கொண்டு போய் விட்டிருக்கிறார்கள். பூமியிலிருந்த போது மனிதர்களுக்கு இருக்கும் பய உணர்ச்சி இப்பொழுது இவர்களுக்கு இல்லை.

பூமியில் வைத்து இங்கு அழைத்து வந்த வேற்றுக்கிரக வாசிகள் இவர்களின் கைகளைப் பிடித்து அழைத்த போதே பரமசாமியிடமும் சுந்தரியிடமும் இருந்த பய உணர்ச்சி அவர்களின் நரம்பு மணடலங் களிலிருந்தும் மூளையிலிருந்தும் அகற்றப்பட்டுவிட்டது.

வேற்றக்கிரக வாசிகளான இவர்களை அழைத்து வந்தவர்களிடம் பயம் என்ற ஒன்று இல்லவே இல்லை. வேற்றக்கிரக வாசிகளான இவர்களின் உடல் மனிதர்களின் உடலைத் தொடும் போது இவர்களின் உடலில் தோன்றும் அதிர்வு அலைகள் மனிதர்களின் உடலின் அதிர்வலைகளுடன் கலக்கும் போது மனிதர்களின் உடலில் பய உணர்ச்சி இல்லாமல் போய்விடுகிறது. அதனால்தான் பிரபஞ்சத்தில் அந்தரத்தில் மிதக்கும் தளத்தில் நின்ற போதும் பரமசாமிக்கோ சுந்தரிக்கோ பயம் என்ற ஒன்று இல்லாமல் இருந்தது.

ஆனால் அவர்களிடம் இருந்த சந்தேகத்தை உணர்ந்து கொண்ட வேற்றக் கிரக வாசிகள் "புன்முறுவலுடன் நாங்கள் உங்களைப் போலவே இருக்கிறோமே என்று தானே யோசிக்கிறீர்கள்" என்று கேட்டவுடன், இவர்கள் எப்படி அதனைத் தெரிந்து கொண்டார்கள் என யோசிப்பதற்கு முன் அவர்கள் நீங்கள் எங்களின் வாரிசுகள்.பூமியில் ஏலியன்ஸ் என்று சொல்லி வருவது முழுவதும் அங்குள்ள மனிதர்கள் செய்யும் பொய்ப் பிரசாரம். உங்களைப் போன்ற எங்களைப் பொன்ற உருவம் உள்ளவர்கள் இரண்டாயிரம் கிரகத்திலிருக்கிறார்கள். வேறு வேறு உருவத்தில் உள்ளவர்கள் ஆயிரம் கிரகத்திலிருக்கிறார்கள் என வேற்றக்கிரக வாசிகள் சொல்ல அவர்கள் திகைப்பு இன்னும் அதிகரிக்கின்றது.

தமிழில் தங்களுடன் பேசியதை இது எப்படி சாத்தியமானது என அவர்கள் யோசிக்கும் போது "பூமியில் உள்ள எல்லா மனிதர்களின் மொழிகளை எங்களால் பேச முடியும் பூமியில் மனிதர்களை கொண்டு வந்து இறக்கிய போது அவர்களும் வல்லமையுடையவர்களாகத்தான் இருந்தார்கள் நாளடைவில் அவர்களின் கெட்ட மனநிலையால் அந்து வல்லமை இல்லாமல் போய்விட்டது. பூமியிலஇ உள்ள மனிதர்கள் வெகு விரைவில் அழிக்கப்படுவார்கள்" என்று சொன்ன போதுகூட பரமசாமியிடமோ சுந்தரியிடமோ பயம் ஏற்படவில்லை. தொடர்ந்து எந்தக் கேள்வியையும் கேட்காமல் படுக்கையறைக் கட்டிலில் போய் உட்கார அறையைச் சாத்திவிட்ட அந்த ஆணும் பெணணும் போய்விடுகிறார்கள்.

பரமசாமிக்கும் சுந்தரிக்கும் சுகமாக நித்திரை கொண்டனர். நித்திரையை விட்டெழுந்ததும் தங்கள் வீட்டின் குளியறைபோலிருந்த அந்தக் குளியலஇ அறையில் குளித்தார்கள். குளித்துமுடிந்ததுமுஇஅடுத்து என்ன நடக்கப் போகின்றது என்று யோசிப்பதற்குள் பக்கத்து அறை திறக்க அங்கே அழகான பெண்கள் அழகாக சிரித்தபடியே அவர்களுக்கு இட்லியும் கோப்பி போன்ற பானத்தையும் கொண்டு வந்து வைத்ததார்கள். சாப்பிடுங்கள் இதையும் குடியுங்கள் என அந்தபஇ பானத்தைக் காட்டி விட்டுச் சென்றுவிட்டார்கள். சாப்பிடலாமா விடலாமா குடிக்கலாமா விடலாமா என்ற பயம் அவர்களுக்கு இல்லை. நன்றாகச் சாப்பிட்டார்கள். அந்தப் பானத்தையும் குடித்ததார்கள் அநதப பானம் ஏதோ ஒரு புதுவிதமான சுவையாக இருந்தது.

தங்களுக்கு இருக்கும் சந்தேகங்களை கேட்க நினைக்கும் போதே அவர்கள் பதில் சொல்லிவிடுவதால் எதையுமே அவர்களிருவரும் கேட்கவில்லை. அவர்களிருவருக்கும் பயம் என்ற ஒன்று இல்லாததால் அவர்களுக்கு அந்த இடம் இயல்பானதாகவிருந்தது மகிழ்ச்சியாகவும் இருந்தனர்.

அவர்களின் அறைக்குப் பக்கத்திலிருந்த கதவு மெல்லத் திறந்தது. வாசலில் ஒரு ஆண் வந்து நின்றார். உங்களை அழைத்துக் கொண்டு மாங்கதிர் என்ற எமது தாய்க் கிரகத்திற்குப் போகப் போகிறோம். இதை உங்களுக்குரிய உடைகள். இங்கிருந்து இன்னும் பல கோடி மைல்களுக்கப்பால்தான் எங்களின தாய்க்கிரகம் இருக்கின்றது. இந்த உடைகளை அணிந்து கொண்டு தயாராக இருங்கள் என அவர்களிடம் கொடுத்துவிட்டு அந்த ஆண் கதவைச சாத்திவிட்டுச் செல்கிறான்.

பரமசாமிக்கும் சுந்தரிக்கும் இது கனவா அல்லது உண்மையில் நாங்கள் பிரபஞ்சத்தில் ஒரு தளத்தில்தான் நிற்கிறோமா என அனுமானிக்க முடியாதிருந்தது. சில நிமடங்கள் செல்ல புதிய உடையை அணிந்திருந்த அவர்களை ஒரு ஆணும் பெண்ணும் அழைத்தக் கொண்டு போய் இருக்கையில் அமர்த்தினார்கள். அவர்களும் அவர்களுக்குப் பக்கத்தில் அமர்ந்தார்கள்.

தொடர்ச்சி 26 ம் பக்கம்






# யேர்மனி–பீலபெல்ட் அருள்மிகு கல்யாண திருமுருகன் கோவில் தேர்த் திருவிழா 21.08.2016


படங்கள்: நந்தபாலன்


படங்கள்: நந்தபாலன்


படங்கள்: நந்தபாலன்




படங்கள்: வெற்றிமணி


படங்கள்: வெற்றிமணி


படங்கள்: வெற்றிமணி




படங்கள்: வெற்றிமணி




ஸ்ரீ கனகதுர்க்கா ஜோதிட நிலையம்

மலயாளபகவதி பூஜாஜ்

உலகப் புகழ் பெற்ற இந்திய யோதிடர்

என்.கெ.எஸ்.சுரேந்திரா சுவாமி அவர்கள்

தலை முறை, தலை முறையாக,
ஜோதிடக் கலையைப்
பயின்று வரும் ஜோதிட வித்துவான்
ஆலோசனைகள் மற்றும் தீர்வுகள்

வியாபாரம் - எதிரிகள் - உடல்நிலை - வேலை
குழந்தையின்மை - திருமணம் - பணம்
காதல் வசியம் - விவாகரத்து - வழக்குகள்
கண்திருஷ்டி - குடும்ப பிரச்சினைகள் - ஒற்றுமை
படிப்பு - மற்றும் பல...

மந்திரம், தந்திரம், காத்துக்கறுப்பு, பீடைபிசாசு என்ன இருந்தாலும் நிவாரணம் செய்து கொடுக்கப்படும்

+49 152-11632918
Rheinischestr. 44137 Dortmund


## கிரகப்போர்


25 ம் பக்கத் தொடர்ச்சி....

அந்தத் தளம் அசைவது போல அவர்கள் உணர்ந்தார்கள். அந்த தளத்திற்கு வெளியே பார்க்கக்கூடிய விதத்தில் இருந்த கண்ணாடி ஊடக பார்த்த போது நட்சத்திரங்கள் தெரிந்தன. பூமியை இங்கிருந்து பார்க்க முடியாதா என நினைத்துக் கொண்டு பரமசாமி ஆணின் பக்கம் திரும்ப "பூமியை இங்கிருந்து உங்களுடைய கண்ணால் பார்க்க முடியாது. ஆனால் எங்களால் பார்க்க முடியும். உங்களைப் போல எங்களுக்கு உருவங்கள் இருந்தாலும் எங்களுக்கு விசேசமான சக்திகள் உண்டு. பொறுமையா இருங்கள் தாய்க்கிரகத்திலிருந்து பூமியைப் பார்க்க முடியும் உங்கள் வீட்டையும் பார்க்க முடியும் என சிரித்தபடியே ஆண சொன்னான். பக்கத்திலிருந்த ஆணும் பெண்ணும் புன்முறுவல் பூத்தபடியே இருந்தனர்.

முன்னாலிருந்த ஒரு பெட்டி போன்ற ஒன்றைத் திறந்து இரு பேணிகளில் தண்ணீர் போன்ற ஒன்றை வார்த்து பரமசாமிக்கும்சுந்தரிக்கும் கொடுத்துவிட்டு அவர்களும் குடித்ததார்கள். அந்தத்தளம் பொகும் பாதை எங்கும் இருளாகவும் இருந்தது வெளிச்சமாகவும் இருந்தது. பூமிலிருந்து சூரியனைச் சந்திரனைப் பார்ப்பது போல சில கிரகங்கள் பரமசாமிக்கும் சுந்தரிக்கும் தெரிந்தன. ஒரு பெரிய கிரகத்தைக காட்டி இங்கிருந்துதான் நீங்கள் விநாயகர் என்று பெயர் வைத்து வணங்கிக் கொண்டிருக்கின்ற அவரை அனுப்பியிருந்தோம்.

பூமியை விட சக்திமிக்க உயிரினங்கள் வேறு கிரகங்களிலிருக்கின்றன. அவை எல்லாம் எமது தாய்க்கிரகமான மாங்கதிர் கிரகத்தின் கட்டுப்பாட்டிலேயே இருக்கின்றன. உங்களை அங்கெல்லாம் அழைத்துப் போவோம்" என்று அவர்களிருவரும் மாறி மாறி விளங்கப்படுத்திக் கொண்டிருக்கையில் விமானம் பூமியை நோக்கி இறங்கும்போது தெரிவது போல கட்டிடங்கள் தெரியத் தொடங்கின.
வியப்பின் உச்சத்திற்கே பரமசாமியும் சுந்தரியும் போய்விட "இது பூமியல்ல தாய்க்கிரகமான மாங்கதிர் கிரகத்திற்கு வந்துவிட்டோம்" என்று அந்த ஆணும் பெண்ணும் சொன்னார்கள்.

(அடுத்து என்ன? ....... தொடரும், இன்னும் பல அதிசயங்களுடன்)



# 10 திருமந்திரமும் வாழ்வியலும்

(சைவசித்தாந்த ரத்தினம் நாகேந்திரம் கருணாநிதி)

**இந்நூலில் சிவம் எனவரும் சொல்லுக்கு இறைவன் என்னும் கருத்தைக் கொள்வோமானால் இந்நூல் எல்லா மதத்திற்கும் பொது நூலாக அமைவதைக் காணலாம்.**

திருவடியே சிவம் எனக் கூறும் பாடல் எண் 138
“திருவடியே சிவம் ஆவது தேரில்
திருவடியே சிவ லோகம் சிந்திக்கில்
திருவடியே செல்கதி அது செப்பில்
திருவடியே தஞ்சம் உள்தெளி வார்க்கே”.

இப்பாடலின் பொருள் “ஞானாசிரியனின் இரு பாதக் கமலங்களே சிவம் என்பதை அறிந்துணர்ந்தால், அந்தத் திருவடிகளே சிவலோகம் ஆகும். ஆழமாக அந்தத் திருவடிகளைச் சிந்தித்தால் ஆன்மா செல்ல வேண்டிய பாதைக்கு அது வழி காட்டும். இன்னும் தெளிவாகச் சொல்வதானால் அந்தத் திருவடிகளே தஞ்சம் அடையத் தக்க புகலிடம் ஆகும் என்பதை உள்ளத் தெளிவுடைய ஞானிகள் உணர்வார்கள்” என்பதாகும்.

எல்லாவற்றிற்கும் ஓர் எல்லை வகுத்தவன் இறைவன் எனக் கூறும் பாடல் 87
“அங்கிமிகாமை வைத்தான் உலகு ஏழையும்
எங்கும்மிகாமை வைத்தான் உடல் வைத்தான்
தங்கிமிகாமை வைத்தான் தமிழ்ச் சாத்திரம்
பொங்கிமிகாமை வைத்தான் பொருள் தானுமே.”

இப்பாடலின் பொருள் “உயிர்கள் உடலிலும், கடல் நடுவிலும், காட்டிலும், மலையிலும், ஏழுலகங்களில் என எல்லா இடங்களிலும் அளவோடு நெருப்பு இருக்கச் செய்தான். உடல் உருவாக வைத்தான், அதில் உயிர் தோன்றி இருக்கவும், அது அளவில் பெருகி விடாது இருக்கவும் செய்தான். தமிழ்ச் சாத்திரமாகிய திருமந்திரமும், அதன் பொருளும் மிகாது அளவோடு இருக்கச் செய்தான்” என்பதாகும். திருமூலர் கூறிய இவ்விடையத்தையே தற்கால விஞ்ஞானம் உலகம் முதலில் நெருப்புக் கோளமாக இருந்து குளிர்ந்தது பின்னர் உயிர்கள் தோன்றி வளர்ந்தன என்கிறது.

மனித வாழ்க்கை நிலையற்றது எனக் கூறும் பாடல் எண் 143
“மண்ஒன்று கண்டீர் இருவகைப் பாத்திரம்
திண்ணென்று இருந்தது தீவினை சேர்ந்தது
விண்ணின்று நீர்விழின் மீண்டும்மண் ஆனாற்போல்
எண்இன்றி மாந்தர் இருக்கின்ற வாறே”.

இப்பாடலின் பொருள் “மண் ஒன்றுதான் அதனால் ஆன பாத்திரங்கள் இரண்டு. ஒரு பாத்திரம் தீயினால் சுடப்பட்டதால் உறுதி உடையதாக இருந்தது. இன்னொரு பாத்திரம் பச்சை மண் சுடப்படாமல் இருந்தது. அது மழை பெய்து தண்ணீரில் நனைந்தவுடன் கரைந்து மீண்டும் களி மண்ணோடு மண்ணாகக் கலந்துவிட்டது. இதேபோலத்தான் உலகிலுள்ள மக்கள் பலரும் உள்ளனர்” அதாவது இறைஅருளை உயிர்கள் துணையாகக் கொள்ள வேண்டும் என்பதாகும்.

பிறர் மனைவியை நாடாமல் இருக்க வேண்டும் என்னும் நல் ஒழுக்கத்தைக் கூறும் பாடல் எண் 201

“ஆத்த மனையாள் அகத்தில் இருக்கவே
காத்த மனையாளைக் காமுறும் காளையர்
காச்ச பலாவின் கனி உண்ண மாட்டாமல்
ஈச்சம் பழத்திற்கு இடர்உற்ற வாறே”



## பிறர் மனைவியை நாடாமல் இருக்க...

இப்பாடலின் பொருள் “அன்புடைய மனைவி வீட்டில் இருக்க மற்றொருவருக்கு உரிமையான பிறன் மனைவியை விரும்பும் இளைஞர் செயல் வீட்டில் காய்த்துத் தொங்கும் பலாப்பழத்தைத் தின்ன முடியாமல் எங்கோ பழுத்துக் கிடக்கின்ற ஈச்சம் பழத்திற்கு ஆசைப்பட்டு அவதிப்படுவது போலாகும்” என்பதாகும்.
உயிர் இருக்கும் போதே அறம் செய் எனக் கூறும் பாடல் எண் 255
“தன்னை அறியாது தான்நல்லன் என்னாதுஇங்(கு)
இன்மை அறியா(து) இளையார்என்று ஓராது
வன்மையில் வந்திடுங் கூற்றம் வருமுன்னம்
தன்மையும் நல்ல தவஞ்செய்யும் நீரே”

இப்பாடலின் பொருள் “உயிரை எடுக்க வரும் எமன் எம்மை எப்படிப்பட்டவர் என எண்ணிப் பார்க்கமாட்டான். எம்மை பாவம், நல்லவன், ஏழை, சிறுபிள்ளை என விட்டு விடவும்மாட்டான். எமன் வலிமையுடையவன். எனவே அவன் உயிரைக் கவர்ந்து செல்வதற்கு முன்பாக நல்லதான தானம், தவம் என்பனவற்றைச் செய்யுங்கள் மனிதர்களே” என்பதாகும்.

நடுவு நிலைமை பற்றிக் கூறும் பாடல் எண் 320
“நடுவு நின்றார்க்குஅன்றி ஞானமும் இல்லை
நடுவு நின்றார்க்கு நரகமும் இல்லை
நடுவு நின்றார்நல்ல தேவரும் ஆவார்
நடுவு நின்றார்வழி நானும்நின் றேனே”.

இப்பாடலின் பொருள் “நடுவு நிலைமை தவறாது அறவழியில் நிற்பவர்களுக்கே ஞானம் கிட்டுமே அல்லாமல் மற்றவர்க்கு ஞானம் பெற வழியில்லை. நடுவு நிலையில் நின்றவர்களுக்கு நரகத் துன்பமும் இல்லை. நடுநிலையாளர்கள் உயர்ந்த தேவ நிலையும் அடையப் பெறுவர். எனவே நடுநிலையாளர்கள் மேற்கொண்ட வழியையே நானும் கடைப்பிடிக்கின்றேன்” என்பதாகும்.

அறிவைப் பற்றிக் கூறும் பாடல் எண் 2355
“தன்னை அறியத் தனக்கொடு கேடில்லை
தன்னை அறியாமல் தன்னை கெடுகின்றான்
தன்னை அறியும் அறிவை அறிந்தபின்
தன்னையே அர்ச்சிக்கத் தான் இருந்தானே”.

இப்பாடலின் பொருள் “உயிர்கள் தன்னை உணர்ந்தறியும் அறிவைப் பெற்றுவிட்டால் பிறந்து, பிறந்து இறக்கும் துன்பத்தை அடைய வேண்டியதில்லை. ஆனால் மனிதன் இது தெரியாமல் தன்னைத் தான் உணரும் ஞானம் பெறாமல் வீணாகக் கெட்டலைகிறான். தன்னைத் தான் அறியும் அறிவைச் சீவன் பெற்றுவிட்டால் அச்சீவன் தன்னை இறைவனுக்கு அர்ப்பணித்துக் கொள்ளும். இவர்களின் உள்ளத்துள்ளே இறைவன் இருந்தருளுவான்” என்பதாகும்.

திருமணம் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றது விழா ஒழுங்கமைப்பு எம்மிடம் நிச்சயிக்கப்படுகின்றது!



## இங்கிலாந்து EU இல் இருந்து விலகும் முடிவினால்

# இனி இங்கிலாந்தில் சொந்தத் தொழில் புரியும் ஐரோப்பியர் நிலை என்ன!






Ragu Dharmaratnam ACMA, CGMA
email: ragu.savetax@gmail.com






**Thomas cook Share price post Brexit**

Thomas cook கம்பனி இங்கிலாந்தின் மிகப்பெரிய கம்பனிகளில் 263 வது பெரிய கம்பனியாகும். Brexit ற்குப் பின்னர் 24ம் திகதி ஆனிமாதம் ஆகக்குறைந்த விலையான 50 Pence எட்டிய பின் கடந்த இரண்டு மாதங்களாக இதன் விலையானது படிப்படியாக அதிகரித்து 66 pence தற்பொழுது காணப்படுகின்றது. இங்குள்ள வரைபடத்தில் Beown colour இனால் வரையப்பட்ட கோடு இந்தப் பங்கின் நாளுக்கு நாள் ஏற்பட்ட விலை அதிகரிப்பின் உயர்ச்சியை எமக்கு காட்டு கின்றது. இந்தப் பங்கின் விலை 58p ற்கு குறைாதபட்சத்தில் மேலும் அதிகரித்துச் செல்ல வாய்ப்புள்ளது.




**Brexit of Self employed**

கடந்த மாத சஞ்சிகையில் இங்கிலாந்து ஐரோப்பிய யூனியனில; Brexit என்ற அடிப்படையில் வெளியேற இருப்பதனால் ஏற்படக்கூடிய சாதகமான பாதகமான நிலமைகளையும்,அத்துடன் எதிர்காலத்தில் பவுண்ஸ் / டொலர் நாணயமாற்று வீதத்தில் ஏற்படக்கூடிய தாக்கம் பற்றியும் பாத்திருந்தோம்.

இன்றைய பதிப்பில் தற்போது இங்கிலாந்தில் Self-employed என்ற அடிப்படையில் வேலை பார்க்கும் அதாவது சொந்தமாக (Self-employed) மக்களுக்கு இந்த Brexit இனால் எந்த விதமான பாதிப்புக்கள் ஏற்படலாம் என்பதனைப் பார்ப்போம்.

இங்கிலாந்தில் தற்பொழுது 4.7 மில்லியன் அதாவது 15 வீதமான மக்கள் சொந்தமாக வேலை (Self employment) என்ற அடிப்படையில் செய்கின்றார்கள். Brexit பிறகு இவர்கள் சிலரின் நிலமை Concerned ஆகவும் Confused ஆகவும் இருப்பதாகத் தெரிகிறது.

இங்கிலாந்து ஐரோப்பிய யூனியனில் அங்கத்துவம் வகித்தபடியினால் இங்கிலாந்து பிரஜா உரிமை பெற்ற எல்லோரும் 27EU அங்கத்துவ நாட்டிலும் வேலை செய்வதற்குத் தடை இருக்கவில்லை. அது மட்டுமன்றி உங்கள் குடும்பத்துடன் இந்த 27 நாடுகளிலும் வாழ்வதற்கும், அந்த நாட்டு மக்களைப்போன்று எல்லாவிதமான சலுகைகளையும், பெற்றுக் கொள்வ தற்கும் வாய்ப்புக்கள் இருந்தன.

Brexit இற்குப் பின்னால் மேலே குறிப்பிடப்பட்ட சலுகைகள் எதிர்காலத்திலும் கிடைக்கமா? என்பது எந்த அளவிற்கு இங்கிலாந்து EU வுடன் ஒப்பந்தம் செய்துகொள்ளப் போகிறது என்பதனைப் பொறுத்துத்தான் இருக்கிறது.

இங்கிலாந்து EU வுடன் சுவிஸ்லாந்து நாட்டைப்போன்று ஒரு ஒப்பந்தத்தை ஏற்படுத்திக்கொண்டால் சொந்தமாக வேலை (Self-employed) செய்பவர் களுக்கு அதிக தாக்கம் ஏற்பட வாய்ப்புக்கள் குறைவு. அதாவது தற்பொழுது சுவிஸ்நாட்டில் உள்ளவர்கள் மற்றய EU நாடுகளில் வேலை செய்வது மட்டுமன்றி மற்றய EU நாட்டு மக்களும் சுவிஸ்நாட்டிற்குச் சென்று வேலை செய்யலாம். ஆனால் இங்கிலாந்தின் முக்கிய கவனம் வெளி நாட்டவர்கள் இந்த நாட்டுக்கு வருகைதந்து வேலை செய்வதைத் தடுப்பது என்றால் தற்போது இங்கிலாந்தில் சொந்தமாக வேலை (Self-employed) செய்பவர்களும் EU நாடுகளில் எதிர்காலத்தில் வேலை செய்வது கடினமாகும்.

Brexir ற்குப் பின்னால் இங்கிலாந்திற்கும் EU நாடுகளுக்கும் இடையில் பொருட்கள் ஏற்றுமதி, இறக்குமதி செய்யப்பட்டால் தற்பொழுது நடைமுறையில் உள்ள Vat acqvistion and dispatch முறைகள் நடை முறைப்படுத்தாவிட்டால் Custom clearence, import charges,cash flow delay,Vat claim பண்ணவதில் தாமதம் என்பன ஏற்படலாம்.

இங்கிலாந்தில் இருக்கும் (Self employed) சொந்த தொழில் செய்பவர்களின் (Clients) வாடிக்கையாளர்கள் EU நாட்டில் இருந்தால் அவர்கள் பணத்தை யூரோவில்தான் செலுத்தவிரும்புவார்கள். Brexit ற்கு பின்னர் Sterling/Euro நாணயமாற்ற வீதம் 1-30 ல் இருந்து 1-16 ஆக குறைவடைந்தமையால் Sterling ல் கிடைக்கும் பணத்திற்கு 10 வீதம் அதிகரிப்பு கிடைக்கும் என்பது ஒரு நற்செய்தி.

இங்கிலாந்தின் பிரதமர் Theres May அண்மையில் சொன்ன கருத்தின்படி 2017 ஆண்டு முற்பகுதியில் EU இல் இருந்து விலகுவதற்கான நோட்டீஸ் கொடுத்து 'Article 50" ஐ கொண்டுவர இருப்பதனால், அதற்குப்பின்னர் ஆகக் குறைறந்தது 2 வருடங்களுக்கு ஆவது 'negotiation period" இருப்பதால் 2019 ஆண்டிற்கு முன்னர் எந்தவித மாற்றத்தையும் நாம் காணமுடியாது.



வீட்டுக்கடன்: **1,13 %** லிருந்து

வங்கிக் கடன்: **1000 € = 1,65 €** மாத வட்டி

# நீங்கள் வீடு வேண்டப் போறீர்களா?

## நீங்கள் வங்கிக் கடன் எடுக்க வேண்டுமா?

## நீங்கள் ஆயிரக்கணக்கான யூரோக்கள் நிதி நன்மைகளைப் பயன்படுத்திக் கொள்ள விரும்புகிறீர்களா?

## எங்கள் செயல்முறை

1. ஆவணங்கள் சேகரித்தல்
2. ஆவணங்கள் பார்வையிடல்
3. தனிப்பட்ட நிதி மதிப்பீடு செய்தல்
4. தனிப்பட்ட ஆலோசனை-நிதி நன்மைகள்

**Rajeevan Mahalingam**

01522 756 593 4

திங்கள் - வெள்ளி

9:00 - 20:00

நாங்கள் 150 க்கும் மேற்பட்ட வங்கிகளுடனும் காப்புறுதிகளுடனும் தொடர்பு வைத்துள்ளோம்!

AXA Allianz DSL Bank Partnerbank der Finanzdienstleister WWK

COMMERZBANK VOLKSWOHL BUND LEBENSVERSICHERUNG a.G. Z

Postbank ERGO HDI ZURICH®

BHW helvetia ARAG SIGNAL IDUNA


KERVEN GMBH
நிறுவனம் பெருமையுடன் வழங்கும்
அதிரடி மலிவு விற்பனை!
Lebara play
வாங்கினால்
150 மேற்பட்ட தமிழ் தொலைக்காட்சிகள்
3000 மேற்பட்ட தமிழ் திரைப்படங்கள்
HD தரத்துடன் பார்த்து மகிழுங்கள்
49€
பெறுமதியான
சப்பாத்தி மேக்கர்
இலவசம்
Chapathi Maker
Les films et les émissions que vous aimez
12 mois + box incluse
exclusive online offers
www.kerven-GmbH.com
முதல் முந்தும் நூறு(100) வாடிக்கையாளர்களுக்கு
இந்த சலுகை இன்றே முந்தி எங்கள் சேவையை
பெற்றுக்கொள்ளுங்கள்
எமது இணையத்தளத்தில்
ஓடர் செய்பவர்களுக்கு
exclusive online offers
www.kerven-GmbH.com
பிரான்ஸ், யேர்மன் நாட்டின் ஏக வினயோகஸ்தர்கள்
Kerven GmbH
191 Rue du Faubourg Saint-Denis - 75010 PARIS
Tél : 09 77 19 59 11 - Mob : 06 26 06 05 22
Kerven GmbH
Rheinische Str.64 44137 - Dortmund
01738048459 - 023117721820 - 023133015738







குண்டு போட்டு அழித்த அந்த இடத்தில்...

# ஆறு டொலருக்கு உணவருந்திய அமெரிக்க ஜனாதிபதி

**வ.சிவராசா ஜேர்மனி.**

பசி!...ஆம் இது எடுத்துவிட்டால் "பத்தும் பறந்துவிடும்" என்று கூறுவார்கள். நாம் உண்ணும் உணவுகளைப் பலர் வீணாகக் குப்பைத் தொட்டிகளில் கொட்டித்தீர்க்கிறார்கள். உலகில் எத்தனையோ லட்சம்பேர் தினமும் பசிபட்டினியால் செத்து மடிய, எத்தனையோ லட்சம் தொன் நல்ல உணவுகள் வீணாக வெளியே கொட்டித் தீர்க்கப்படுகின்றன. ஏன் நம்மவர்கள் மத்தியிலும் கலியாணம், பூப்புனிதவிழா, பிறந்தநாள் போன்ற குடும்பக் கொண்டாட்டங் களில் எத்தனை தொன் நல்ல உணவுகள் வெளியே கொட்டி வீணடிக் கப்படுகின்றன. நம்மவர்களிடையே இன்னும்தான் சரியான திட்டமிடல், ஒழுங்கான செயற்பாடுகள், கட்டுப்பாடான வாழ்க்கைமுறை, நல்ல நடைமுறைகளைப் பின்பற்றாமை, மிக அதிகமான ஆடம்பரம், கௌரவப் பிரச்சனைகளாலும் இப்படியாக உணவுகள் வீணடிக்கப்பட்டுவருவதை நாம் சிந்திக்கிறோமா..





வீணடிக்கப்படும் உணவுகள்

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் சிக்கன உணவுபற்றியே குறிப்பிடுகின்றேன். உலகின் மிகப்பெரிய வல்லரசு நாடான அமெரிக்காவின் ஜனாதிபதி அந்தநாட்டு வரலாற்றில் ஒரு கலப்பு இனத்தவராவர். இவர் சரித்திரத்தில் இடம்பிடித்துக்கொண்டார். இவ்வளவு வசதியான, வளம்மிக்க நாட்டின் தலைவர் என்றால் எவ்வளவு ஆடம்பரமாகச் செலவுசெய்து கோடானகோடி பணத்தைச் செலவு செய்து உல்லாசமாக வாழலாம். இன்றைய உலகில் பல நாடுகளில் பல தலைவர்கள் எவ்வளவு ஆடம்பரமாகச் செலவுசெய்து வாழ்கிறார்கள். ஆனால் ஒபாமா அவர்கள் ஒரு எளிலான மனிதர், எல்லா இன மக்களுடனும் அன்பாகப் பேசிவருபவர், நல்ல திறமைசாலி. நிர்வாகக் கடமைகளில் சிறந்த ஒரு மனிதராக இன்று உலகம் கணித்துக்கொண்டுள்ளது.

ஒபாமா அவர்கள் சில மாதங்களுக்கு முன் ஆசியநாடுகளுக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டிருந்தார். இப்பிரயாணத்தில் பல வரலாற்றுச் சாதனைகளையும் இவர் பதிவாக்கியுள்ளார். 2ம் உலகப் போரின்போது யப்பான்மீது அமெரிக்கப் படைகள் அணுக்குண்டுகளை வீசி லட்சக்கணக்கான யப்பான் மக்களைக் கொன்று அழித்த கொடுமை வரலாறாகும். குண்டு போட்டு அழித்த அந்த இடங்களுக்கு அதிபர் ஒபாமா நேரடி விஜயத்தை மேற்கொண்டு பார்வையிட்டு மிகவும் வேதனையடைந்தார். முதன் முதலாக அமெரிக்கத் தலைவர் ஒருவர் இந்த இடங்களைப் பார்வையிட்டு பொதுமக்களிடம் மன்னிப்புக்கேட்டு அவர் ஆற்றிய உரை ஓர் சரித்திரமாக இடம்பிடித்துக்கொண்டுள்ளது. அணுக்குண்டு பொழிந்து ஏறத்தாள 70 வருடங்களின் பின் அமெரிக்கத் தலைவர் ஒருவரின் நேரடி விஜயமும், ஆற்றிய உரையும் அவரின் புகழை மேலும் ஓங்கச் செய்தன.

அடுத்தநாடான வியட்நாம் நாட்டிற்கும் விஜயம் மேற்கொண்டார். அமெரிக்கா வியட்நாம் யுத்தமும் பல ஆண்டுகள் நீடித்துப் பல லட்சம்பேரை பலிகொண்ட சோக சம்பவங்களும் உலக சரித்திரத்தில் பதிவாகியிருக் கின்றன. இருபது ஆண்டுகளுக்குப் பின் இந்தநாட்டிற்கு விஜயம் மேற்கொண்ட அமெரிக்கத் தலைவராக ஒபாவே இடம்பிடித்துள்ளார். வியட்நாம் நாட்டுத்தலைவர் ரைன் டாய் (Tran Dai) அவர்களையும் சந்தித்துப் பேச்சுவ ார்த்தை நடாத்தி இரு நாட்டு உறவுகளையும் வலுப்படுத்திக்கொண்டார்.

இதில் காணப்படும் படத்தை நன்கு கவனியுங்கள். வியட்நாமில் அதிபர் ஒபாமா அவர்கள் சாதாரண ஒரு உணவுச்சாலைக்குத் திடீரெனச் சென்று அங்கு உணவருந்திக் கொண்டிருந்த பொதுமக்களுடன் தானும் ஒரு பொதுமகனாக, சாதாரண குடிமகன் போல, சாதாரண கதிரையில் இருந்து பியர் குடித்து, நூடில், பன்றி இறைச்சி, சலட் உணவுகளை உண்டு குடித்து அகமகிழ்ந்திருக்கிறார்.. தனது பாதுகாப்பைக் கவனியாது சாதார பொதுமக்களோடு உரையாடி மகிழ்ந்திருக்கிறார். இவ்வளவு பெரிய அமெரிக்க நாட்டின் பெருந்தலைவன் இப்படி எளிமையாகவும் சாதாரணமாகவும் இலகுவாகவும் எல்லோருடனும் பழகி வாழும் பண்பு எந்த நாட்டுத் தலைவருக்கு இல்லாத பண்பு அதிபர் ஒபாமாவுக்கே உரியதாகிவிட்டது. இந்தப் பெருந்தலைவனின் இந்தச் சிக்கன நடவடிக்கையை நாம் பார்க்கும்போது நமக்கு வியப்பாகவும் அதிர்ச்சியாகவும் தோன்றவில்லையா!.. இவர் ஒரு நல்ல தலைமைத்துவத்தின் திறனாளி என்றே எடுத்துரைக்கலாம்.

ஆனால் இன்றைய உலகின் பல நாடுகளின் தலைவர்களின் வாழ்க்கை முறைகளைப் பார்த்தாலும் வியப்பாகத்தான் இருக்கும். சுயநலம், ஆடம்பரம், எனப் பலவசதிகளையும் தாம் ஏற்படுத்திக் கோடி கோடியாகப் பணத்தைக் கொட்டிச் செலவளிக்கிறார்கள். ஆடம்பர, போஷாக்கு உணவுகளை அரச நிர்வாகப் பரம்பரைகள் அளவுக்கு அதிகாமாத் திண்டு கொழுக்க, அந்த நாடுகளிலேயே பல லட்சம்பேர் பசிபட்டினியால் செத்து மடிகிறார்கள். சொந்த நாட்டு மக்களைப் பட்டின் போட்டுப் பரிதவிக்க விட்டுவிட்டுத் தாம் உல்லாசபுரியில் வாழ்ந்து வருகிறார்கள். இன்னும் பல நாடுகளில் இன்றும் பொதுமக்களின் வரிப்பணத்தில்தான் அரச நிர்வாக தலைமைகளின் உல்லாசபுரி வாழ்வு தொடர்கின்றனவே..

ஏன் எமது தாய் நாட்டிலும் பல அரச தலைவர்கள் ஆடம்பர உல்லாச வாழ்வுதான். தேர்தல் வந்துவிட்டால் வீடுதேடிப் படை எடுக்கும் தலைவர்கள் தேர்தல் முடிந்ததும் ஏன் என்றும் திரும்பிப் பார்க்கமாட்டார்கள். பின்பு அடுத்ததேர்தல் வரும்பொழுதுதான் அது செய்வோம்... இது செய்வோம்... எனப் பாசமழைபொழிந்து மக்களை ஏமாற்றுவார்கள். ஏன் நமது தலைவர்கள் என்று சொல்லப்படுபவர்களோ அல்லது அரசியல்வாதிகளோ நம்ம ஊர் தேநீர் கடைகளிலோ, கள்ளுத் தவறணைகளிலோ, மதுக்கடைகளிலோ அல்லது சாதாரண சாப்பாட்டுக் கடைகளிலோ இருந்து உண்டு குடித்ததை நாம் கண்டிருக்கிறோமா?.. கிடைக்கவே கிடையாது...கௌரவம், அந்தஸ்த்து, மரியாதை, ஆணவம், திமிர், சாதி, மதம் என மூழ்கிக்கிடக்கும் நம்மவர்கள், மெத்தப்படித்த நம் தலைவர்களும் அரசியல் வாதிகளும் அதிபர் ஒபாமாவின் இப்படத்தைப் பார்த்துச் சிந்திக்க வேண்டும்.

அதிபர் ஒபாமாவின் இந்தச் சிக்கன வாழ்க்கை முறையைப் பார்த்து இவர்கள் அதிசயப்பட வேண்டும். ஆனால் நமது நாட்டுத் தலைவர்களும் அரசியல் வாதிகளும் சாதாரண குடியானவர்கள் வாழ்வு முறைக்கு இறங்கி வருவார்களா?...வரவே மாட்டார்கள் என்பதுதான் நிஜம்.






ஸ்ரீ கனகதுர்க்கா அம்பாள் ஆலயம்
துர்க்கா பூஜா துரந்தரர்
சிவசாமிக்குருக்கள்
ஜெயந்திநாதக்குருக்கள்
Tel: 02304- 910 9445
0177 20 16 941
Tel: 02304/ 16721 Robert koch Str.5- 58239 Schwerte

யேர்மனியில் பிராங்பேட் நகரில்
JAFFNA BASAR
உரிமையாளர்: நடராஜா சுதன்
Tel: 069 25 62 63 53
மாதம் மாதம் மாதரைக்கவரும்
புத்தம் புது டிசைன்களில்
தங்க நகைகள்
ஒரே இடத்தில்
தரம் மிக்க தங்க நகைகள்
பயணங்களை இனிமையாக்கும்
குறைந்தவிலையில்
பயணச்சீட்டுக்கள்
மற்றும் இலத்திற்குத்
தேவையான மளிகைப் பொருட்கள்
அனைத்திற்கும் நாடுங்கள்
Kaiserstr.64 (ladan Nr.22) 60329 Frankfurt/Main



# காதலிக்க நேரமில்லை ரவிச்சந்திரன்






இதயத்தை வருடிய
இதயக் கமலம்
உன்னைக் காணத
கண்ணும் கண்ணல்ல

முதல் படமே 200 நாள் படமாக அமைய, “வெள்ளிவிழா நாயகன்“ என்ற சிறப்புப்பட்டத்துடன் திரையுலகில் வலம் வரத்துவங்கினார் ரவிச்சந்திரன்.

1960 களின் துவக்கத்தில் எம்.ஜி.ஆரை நடிக்கவைத்து வரிசையாக 'ப' வரிசைப்படங்களை (பாசம், பெரிய இடத்துப்பெண், பணக்கார குடும்பம்) எடுத்துக்கொண்டிருந்த ராமண்ணா 1965-ல் எம்.ஜிஆரை வைத்து 'பணம் படைத்தவன்' படத்தை வெளியிட்ட கையோடு, (இதனிடையே 1965-ல் மக்கள் கலைஞர் ஜெய்சங்கரை நடிக்கவைத்து ”நீ” படத்தையும் இயக்கியிருந்தார்) .மீண்டும் எம்.ஜி.ஆரை நடிக்க வைத்து 'பறக்கும் பாவை'யை வண்ணத்தில் எடுத்துவரும் அதே சமயத்தில், இன்னொரு பக்கம் ரவிச்சந்திரனை கதாநாயகனாக நடிக்க வைத்து கருப்புவெள்ளையில் உருவாக்கிய படம்தான் “குமரிப்பெண்“. ஒருபக்கம் செண்டிமென்ட் படங்கள் கோலோச்சிக் கொண்டிருந்தபோதிலும், அதே சமயம் ஜனரஞ்சகமான படங்களும் வெற்றியடைந்துகொண்டிருந்த வேளையில் இப்படம் வெளியானது.

ரவிச்சந்திரனின் ஜோடியாக கலைச்செல்வி ஜெயலலிதா நடித்திருந்தார். குமரிப்பெண் படத்தின் பெயரைச்சொன்னதும் நமக்கு நினைவுக்கு வரும் முதல் காட்சி, கட்டுக்குடுமியுடன் கிராமத்திலிருந்து ரயிலில் வந்துகொண்டிருக்கும் ரவியை, நவநாகரீக உடையணிந்த ஜெயலலிதாவும், அவரது தோழிகளும் கிண்டலடித்துப்பாடும் ”வருஷத்தைப்பாரு அறுபத்தி ஆறு” என்ற பாடல்தான். எல்.ஆர்.ஈஸ்வரி குழுவினர் பாடியது. இதே ”வருஷத்தைப்பாரு அறுபத்தி ஆறு” பாடலை பின்னர் ரவிச்சந்திரன், ஜெயலலிதாவைக் கிண்டலடித்துப் பாடுவதாகவும் வரும். அதை ரவிக்காக டி.எம்.எஸ். பாடியிருந்தார். (என்ன சொல்றீங்க?. இதைப்பார்க்கும்போது உங்களுக்கு “கட்டவண்டி... கட்டவண்டி...“ பாடல் நினைவுக்கு வருதா?). அப்போதெல்லாம் ரவிச்சந்திரனின் படங்களில், கதாநாயகியை டீஸ் செய்து பாடுவதுபோல ஒரு பாட்டு வந்துவிடும். அதில் இதுவும் ஒன்று.

P.B.S.பாடிய ”ஜாவ்ரே ஜாவ்.. இந்த கேட்டுக்கு நீ ராஜா” பாடல், கடமையைச்செய்யாமல் தூங்கிக்கொண்டிருக்கும் கூர்க்காவை கிண்டலடித்து ரவி பாடுவதாக வரும். இந்தப்பாடலை T.M.S. பாடியிருந்தால் இன்னும் சுவையாக இருந்திருக்கும். சில பாடல்களுக்கென்று சில குரல்கள் பொருந்துமல்லவா?.

ரவிச்சந்திரன் ஜெயலலிதா டூயட் பாடல், ”நீயே சொல்லு... நீயே சொல்லு... நடந்தது என்னவென்று நீயே சொல்லு. ரகசியம் பேசுகின்ற கண்ணால் சொல்லு” பாடலை P.B.S., L.R.ஈஸ்வரி பாடியிருந்தனர்.

ரவிச்சந்திரனின் சினிமா வாழ்க்கையில் அதுவரை கலர்ப்படங்களே வெற்றியடைந்து வந்த நிலையில், மாபெரும் வெற்றியைத்தந்த முதல் கருப்புவெள்ளைப்படம் குமரிப்பெண். 1966-ல் வெளியான மொத்தம் 42 தமிழ்ப்படங்களில் 10 படங்கள் மட்டுமே 100 நாட்களைக்கடந்து ஓடின. அவற்றில் “குமரிப்பெண்“ணும் ஒன்று. (எந்தப்படமும் வெள்ளிவிழாவைத் தொடவில்லை). குமரிப்பெண் வெற்றிகரமாக ஓடியது.

இன்றைக்கும் பார்த்து ரசிக்கும்படியான பொழுதுபோக்கு அம்சங்களும் அருமையான பாடல்களும் கொண்ட படம் குமரிப்பெண்.

இதயத்தை வருடிய இதயக் கமலம்

ரவிச்சந்திரன் நடித்த இரண்டாவது வண்ணப்படம். பழம்பெரும் இயக்குனரும் தயாரிப்பாளருமான எல்.வி.பிரசாத்தின் “பிரசாத் புரொடக்‌ஷன்ஸ்“ தயாரித்த இப்படத்தை எஸ்.ஸ்ரீகாந்த் இயக்கியிருந்தார். “புன்னகையரசி“ கே.ஆர்.விஜயாதான் ரவிச்சந்திரனின் ஜோடியாக நடித்திருந்தார். ஜோடி என்பதைவிட அவர்தான் முழுப்படத்தையும் வியாபித்திருந்தார். இறந்துபோன மனைவியை எண்ணி எண்ணி இவர் வருந்த, கொஞ்சம் கொஞ்சமாக ஃப்ளாஷ்பேக்கிலேயே படம் நகரும். “மேளத்த மெல்லத்தட்டு மாமா“ என்று பாடியபடி தெருக்கூத்தாடியாக அறிமுகமாகும்போதும் சரி, பைத்தியக்கார விடுதியில் பைத்தியங்களோடு அடைக்கப்பட்டு அவதிப்படும்போதும் சரி, தேர்ந்த நடிப்பை வெளிப்படுத்திருப்பார் மு.சு.விஜயா. முதன்முதலாக ரவிச்சந்திரன் சோக நடிப்பை வழங்கிய படம் இதுவாகத்தான் இருக்கும். நன்றாகச்செய்திருப்பார்.

திரையிசைத்திலகம் கே.வி.மகாதேவன் இசையில்...
”உன்னைக் காணாத கண்ணும் கண்ணல்ல” என்ற பாடலும்
”என்னதான் ரகசியமோ இதயத்திலே” என்ற பாடலும்
சுசீலாவுக்குப் பெயர் வாங்கிக்கொடுத்தன.

ரவிச்சந்திரனுக்காக, பி.பி.எஸ் பாடிய...
”தோள் கண்டேன் தோளே கண்டேன்” பாடலும்
”நீ போகுமிடமெல்லாம் நானும் வருவேன் போ போ போ” பாடலும் பாப்புலராயின. இதில் ஒரு பாடல் காஷ்மீரில் படமாக்கப்பட்டிருந்தது.

தாய்க்குலத்தின் ஏகோபித்த வரவேற்பைப்பெற்ற “இதயக்கமலம்“ ஒரு பெரிய வெற்றிப்படம்.

பி.ஆர். பந்துலுவின் “எங்க பாப்பா“

தமிழ்த்திரையுலகுக்கு பல பிரமாண்டமான சரித்திரப் படங்களை உருவாக்கித் தந்த தயாரிப்பாளர் மற்றும் இயக்குனர் பி.ஆர்.பந்துலு, தனது பத்மினி பிக்சர்ஸ் சார்பில் தயாரித்து இயக்கி, 1966-ல் வெளியான குடும்பச்சித்திரம் “எங்க பாப்பா“

ரவிச்சந்திரன் பாரதி ஜோடியுடன், அப்போதைய பிரபலமான குழந்தை நட்சத்திரம் “பேபி ஷகீலா“ (நினைவிருக்கிறதா? கற்பகம், முரடன் முத்து, எங்கவீட்டுப்பிள்ளை..?) முக்கியமான கதாபாத்திரத்தில் நடித்த படம். படத்தில் இரண்டுமுறை பாடப்படும்

“ஒருமரத்தில் குடியிருக்கும் பறவை இரண்டு
ஒரு அன்னை தந்தது, ஒன்று காவல் கொண்டது

பாடல் படத்துக்கே ஜீவநாடி. அதிலும் அந்தக்குழந்தை அண்ணன் ரவிச்சந்திரனை விசிறியால் விசிறிக்கொண்டே பாடித்தூங்க வைக்கும்போது, நம் கண்களில் நிச்சயம் நீர்கட்டும்.

ரவிச்சந்திரன் சண்டையிட்டுக்கொண்டே பாடுவதாக வாலி அமைத்திருந்த

“நான் போட்டால் தெரியும் போடு
தமிழ்ப்பாட்டால் அடிப்பேன் ஓடு“
என்ற பாடல் யாரையோ குறித்து எழுதியதாக ரசிகர்கள் எண்ணினர்.

தாய்க்குலத்தின் ஆதரவைப்பெற்ற “எங்க பாப்பா“ பெரிய வெற்றியைப்பெறாவிடினும் தமிழகம் முழுவதும் பரவலாக ஓடியது

Milin Impex GmbH

தமிழர்களுக்குத் தேவையான எல்லா உணவுப்பொருட்களின்
மொத்த மலிவு விற்பனையாளர்கள்
Dortmund நகரில்

Geschäftszeiten: Dienstag, Mittwoch, Freitag 10:00 bis 19:00 UhrMontag & Donnerstag 07:00 bis 17:00 Uhr
Samstags 09:00 bis 16:00 UhrSonn.
und Feiertags: Geschlossen



மேலதிக விபரங்களுக்கு
Web :www.milinimpex.de
info@milinimpex.de


பசுமையான மரக்கறிகள் கடலுணவுப் பொருட்கள் இவற்றின் இறக்குமதியாளர்கள்


Westendorf Str.41 - 44287 Dortmund Tel: 0231 45 96 17 /28 Fax: 0231 18 15 288











மகிழ்ச்சி

# செவாலியர் விருது



**சிவாஜி கணேசன் பாதி, நாகேஷ் பாதி கலந்து செய்த கலவை நான் கமல்ஹாஸன்**



சிவாஜி கணேசன் பாதி, நாகேஷ் பாதி கலந்து செய்த கலவை நான் **கமல்ஹாஸன்**

நடிகர் கமல்ஹாசனுக்கு பிரான்ஸ் நாட்டின் மிக உயரிய விருதான செவாலியே விருது அறிவிக்கப்பட்டுள்ளது. தமிழ், தெலுங்கு, கன்னடம், இந்தி மற்றும் மலையாளம் எனப் பலமொழிகளில் தனது நடிப்பாற்றலை வெளிப்படுத்தி வருபவர் நடிகர் கமல். தமிழில் களத்தூர் கண்ணம்மா படத்தில் குழந்தை நட்சத்திரமாக அறிமுகமானவர்.

தமிழ் சினிமாவுக்கு இரண்டு செவாலியர்கள் கிடைத்து விட்டனர். ஒருவர் சிவாஜி கணேசன்.. இன்னொருவர் கமல்ஹாசன். சிவாஜி கணேசனுக்கு ஒவ்வொரு விருதுமே தாமதமாகவே கிடைத்தன. அந்த "அநீதி"யை கமல்ஹாசன் துடைத்து வருகிறார். சிவாஜிக்குக் கிடைத்திருக்க வேண்டிய விருதுகளை வட்டியும் முதலுமாக தனது உச்சக்காலத்திலேயே பெற்றவர் கமல்.
இதோ இப்போதும் கூட பிரெஞ்சு நாட்டின் செவாலியர் விருது அவரைத் தேடி வந்துள்ளது. இந்த இரண்டு செவாலியர்களும் இன்று சந்தித்தால் என்ன பேசிக் கொள்வார்கள் என்று தெரியவில்லை. ஆனால் அன்று அவர்கள் இருவரும் பேசிக் கொண்டது..(தேவர் மகன்) தமிழ் திரையுலகம் உள்ளவரை, தமிழ் மக்கள் உள்ளவரை, தமிழ் உள்ளவரை மறக்க முடியாது.. தொடர்ந்து நம்முடனேயே பயணிக்கும்..!

இதுவரை செவாலியே விருது பெற்ற இந்திய திரைப்பிரபலங்களின் விபரமாவது: 1987ம் ஆண்டு வங்காளத் திரைப்பட இயக்குநர் சத்யஜித்ரே 1997ம் ஆண்டு மறைந்த நடிகர் திலகம் சிவாஜி கணேசன் 2007ம் ஆண்டு பாலிவுட் நடிகர் அமிதாப் 2014ம் ஆண்டு பாலிவுட் நடிகர் ஷாருக்கான் 2016 ஆண்டு நடிகர் கமல்ஹாசன்

கமல்ஹாசன் ஏற்கனவே, இந்திய அரசின் பத்மஸ்ரீ, பத்மபூசன் மற்றும் மாநில அரசின் கலைமாமணி போன்ற விருதுகளைப் பெற்றவர் கமல். இதுதவிர தேசிய விருது 3 முறையும், 19 முறை பிலிம்பேர் விருதுகளையும் அவர் பெற்றுள்ளார்.

பன்முகத் திறமையாளர்... கமல் நடிகராக மட்டுமல்லாது இயக்குநர், திரைக்கதையாசிரியர், தயாரிப்பாளர், பின்னணி பாடகர், பாடாலாசிரியர் என சினிமாவின் பல்வேறு துறைகளிலும் சிறப்பான பங்களிப்பை கொடுத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

செவாலியே விருது. இது நடிகர்திலகம் சிவாஜிகணேசனுக்கு கிடைக்கும் வரை எவரும் இதுபற்றிக் கதைத்ததில்லை.

ஒரு விருதுக்கே விருது வழங்கியவர் நடிகர்திலகம் சிவாஜி. செவிலியர் விருது அவரால் பெருமை பெற்றது. நம்மவர் மத்தியில் அது உயர்வான விருதாக கருத ஏதுவானது..

சிவாஜி கணேசன் பாதி, நாகேஷ் பாதி கலந்து செய்த கலவை நான் என செவாலியே கமல் ஹாஸன் தெரிவித்துள்ளார்.
உலக நாயகன் கமல்ஹாஸனுக்கு பலரும் வாழ்த்துக்கள் தெரிவித்த வண்ணம் உள்ளனர்.

ஆனால் பிரதமர் மோடி மற்றும் முதல்வர் ஜெயலலிதா ஆகியோர் மட்டும் கமலை வாழ்த்தவில்லை. இந்நிலையில் விருது மற்றும் நடிப்பு பற்றி கமல் பிரபல ஆங்கில நாளிதழுக்கு அளித்த பேட்டியின்போது கூறுகையில்,

மரபணு நடிப்புக்கான மரபணுவை கண்டுக்கும் வசதி அறிவியலில் இருந்தால் என் உடலில் சிவாஜி மற்றும் நாகேஷ் ஆகியோரின் மரபணுக்கள் இருப்பதை கண்டுபிடிப்பீர்கள். ஏன்றார்.

விருது
நான் பேசும்போது, நடிக்கும்போது கேட்கும் குரல் என்னுடையது மட்டும் அல்ல. அடக்கத்துடன் இந்த செவாலியே விருதை ஏற்றுக் கொள்கிறேன். ஏனென்றால் என்னை பெற்றோர்கள் நல்லவிதமாக வளர்த்துள்ளனர்.

விருது பெற்ற சிறந்த கலைஞனை வெற்றிமணியுடன் இணைந்து நாமும் வாழ்த்துவோம்.-




Hückelhoven நகரில்

Asiatischer Super markt

ஆசியா சமுத்திரம்

பசுமையான மரக்கறிகள்– கடல் உணவுப் பொருட்கள் – வீட்டுக்குத்தேயான மளிகைப்பொருட்கள் அனைத்தும்எம்மிடம் தரமாகவும் மலிவாகவும் கிடைக்கும்.

Vijay tv agent

Parkhofstraße-101
41836 Hückelhoven
Tel: 02433 903282
Fax: 02433 903281

Handy:01520 900 90 30

VIJAY

R.Ragunathan
Deutschebank
IBAN: DE55 3907 0024 0474 1153 00
Bic:DEUTDEDB390
Email: mediajara@gmail.com

Asiatischer super markt
Sittard str-21
41061-Mönchengladbach
Tel: 02161- 9028388
Fax:02161- 9028399

T.Anpalagan

துரித பணமாற்றுச் சேவை

Ria Money Transfer MoneyGram International Money Transfer VALUTRANS MONEY TRANSFER




உலகு எங்கும் வலம்வர
தரமான விமானப் பயணத்தற்கு
EurAsian - Tours
Emirates
LITTLE INDIA வின் மற்றுமொரு சேவை...
Tel: 02131 273 692
Rishi Ganeshamoorthy
Rishi 0174 96 44 965
VALUTRANS MONEY TRANSFER
துரித பண
மாற்றுச் சேவை!
Tel:02131 73 87 83 Fax: 02131 73 87 84
Further Str. 156
41462 Neuss
இந்தியா– இலங்கை– விசா பெற்றுத்தரப்படும்!
info@eurasian-tours.com


Jasmine Silk House
என்றும் மலிவாக தரமாக திருமணப்
பட்டுப்புடவைகள் மற்றும்
பாட்டிசாறிகள், சிறுவர்களுக்கான ஆடைகள்,
பஞ்சாபிகள்,அனைத்தும் புத்தம்,
புது டிசைன்களில், எம்மிடம் உண்டு.
நம்மை நாடிவரக் காரணம், அதுவே!
புத்தம் புது வரவுகள்
முந்துங்கள்
HP:0173 1937 325
Jasmin Silk House
Fester Str.50
40882 Ratingen
T.Mohanadas
Tel:02102 844744
ஜஸ்மின் சில்க் ஹவுஸ்


ASIA BAZAR
Ria Money Transfer
MoneyGram
துரித பண மாற்றுச் சேவை!
ஆசிய, ஆபிரிக்கஉணவுவகைகள்
வியாழன்சனிக்கிழமை தோறும்
இலங்கை, இந்திய உடன்
மரக்கறிவகைகள்
கடல் உணவுப் பொருட்கள்.
இன்னும் பல...
VALUTRANS MONEY TRANSFER
உரிமையாளர்:
பா. கணேஷ்
An der Stadt Mauer 2-4
41061 Mönchengladbach
Tel:02161 208303 Fax:02161-309282


வீட்டுக்கடன்
1,2%
வட்டிவீதத்திலிருந்து
நீங்கள் புதிய மனை
அமைக்கவோ, கடன் பெறவோ,
எதுவானாலும் உடனடி உதவி
எங்களிடம் உண்டு
தற்போதைய வீட்டுக்கடனை
அல்லது (தனிநபர்)கடனை
குறைந்த வட்டிக்கு மாற்றுதல்
"Umschuldung"
தொடர்புகளுக்கு:
gothab Finance 0231/53375365 0152/53961138
Rheinische Str. 72, 44137 Dortmund 0231/10876361
Th. Gobinath


HSB
SARAVANAA BHAVAN®
WORLD'S NO.1 INDIAN VEGETARIAN RESTAURANT CHAIN
069-97 693 374
info@saravanaabhavan.de
Kaiserstraße 66, 60329 Frankfurt am Main
India Singapore Malaysia Thailand Hong Kong U.A.E. K.S.A. Oman Qatar Bahrain Kuwait U.K. France Germany Australia South Africa Canada U.S.A.


யேர்மனியில் தரம்மிக்க ஓர் மொத்த வியாபார நிலையம்!
மரக்கறி கடலுணவுப் பொருட்களின் மொத்த இறக்குமதியாளர்கள்
StaR - Impex
Asia & Afro Großhandel & Einzelhandel
Öffnungszeiten:
Mo-Fr: 10.30-19.30
Sa: 09.30-18.00
Tel:0231 860 26 96
Fax: 0231/8602698
Mobil: 0172/2183703
e-mail: star-impex@live.de
StaR Impex :
Inh :K.Sivasubramaniam
Kipper Str.3 44147 Dortmund Germany